# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 242 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 10, திங்கட்கிழமை 25.07.2016


**கீரிமலை புனிதப் பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை எதற்காக?**



பக். 02

# மீள்குடியேற்றச் செயலணியில் மைத்திரியின் கருத்து புறக்கணிப்பு

## அமைச்சர் ரிசாத்தின் தலையீட்டால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 25

நடுவண் அரசினால் உருவாக்கப்பட்ட மீள்குடியேற்றச்செயலணியில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனையும் உள்வாங்குமாறு, ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன வழங்கிய ஆலோசனை புறக்கணிக்கப் பட்டது. இதன் விளைவாகவே, மீள்குடியேற்றச் செயலணி விவகாரம் விவாதத்திற்குரியதாகியுள்ளது என கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

மீள்குடியேற்றச் செயலணியை உருவாக்கும் அமைச்சரவைப் பத்திரம், அமைச்சரவையில் முன் வைப்பதற்கு முன்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால அதற்கு தனது அவதானத்தை வழங்கியிருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் க. வி.விக்னேஸ்வரனையும் மீள்குடியேற்றச்செயலணியில் உள்வாங்குமாறு ஜனாதிபதி பரிந்துரை வழங்கினார்.

ஜனாதிபதியின் பரிந்துரையை உள்வாங்காமலேயே அமைச்சரவைப் பத்திரத்துக்கு பக்.23

> வடக்கு மாகாண முதலமைச்சரை உள்ளீர்க்காமல் உருவாக்கப்பட்ட மீள்குடியேற்றச் செயலணிக்கு, வடக்கு மாகாண சபை தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற போது, மீள்குடியேற்றச் செயலணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## அயலுறவு அமைச்சர் பிரிட்டனில் மாற்றம்



கொழும்பு, ஜூலை 25

பிரிட்டனின் ஆசிய பசுபிக் விவகாரங்களைக் கையாளும், அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச்சராக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலோக் சர்மா நியமிக்கப்பட்டார்.

பதவி விலகிய டேவிட் கமரூன் அரசில், அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச் பக்.24

## உறவுகள் திரும்பி வரவேண்டும் அம்பாறையில் கடவுளிடம் மன்றாட்டம்

அம்பாறை, ஜூலை 25

காணாமற்போன தமது உறவினர்கள் திரும்பிவரவேண்டும் என்று கடவுளிடம் கோரிக்கையை முன்வைத்து விசேட பூசை வழிபாடும், கவனவீர்ப்புப் போராட்டமும் திருக்கோவில் சகலகலை அம்மன் கோவில் முன்றிலில் நேற்று இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட காணாமற்போனோரின் குடும்ப ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சிறப்புப்பூசைவழிபாடு இடம்பெற்றது. காணாமற்போனோரின் உறவுகள் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு தமது உறவுகள் மீளவும் திரும்பி வரவேண்டுமென பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து கோவிலின் முன்றிலில் ஒன்றுதிரண்ட காணாமற்போனோரின் உறவுகள், தமது உறவுகள் எங்கிருந்தாலும் அவர்களை அரசு தேடித்தரவேண்டுமென வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். தமது நிலையை கருத்



திற்கொண்டு ஐ.நாவும் இந்த விடயத்தில் கரிசனையுடன் செயற்பட்டுத் தமது உறவுகளைக் கையளிக்கவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

காணாமற்போனோருக்கு என்ன நடந்ததென்பதை அரசு அறிவிக்கவேண்டுமென்றும் காணாமற்போனோரின் உறவுகள் வலியுறுத்தினர். (வ-5)

## அச்சுவேலி வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் பணியாற்றும் ஊழியரைத் தாக்கிய முதன்மைச் சந்தேக நபரைக் கைது செய்யாததால் வைத்தியசாலை ஊழியர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட் டத்தில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஊழியர் ஒருவர் சனிக்கிழமை அதிகாலை இளைஞர் குழு ஒன்றினால் தாக்கப்பட்டார். அவர் தலையில் காயமடைந்தார். இதனால் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவினர் சனிக்கிழமை முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை 3 சந்தேகநபர்களை மட்டுமே பொலிஸார் கைது செய்தனர். எனினும், முதன்மை சந்தேக நபரைக் கைது செய்யவில்லை. அவரைக் கைது செய்யாவிட்டால் யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் பணிப் புறக் கணிப்பில் ஈடு படுவர். அவரைக் கைது செய்வதற்காக பொலிஸாருக்கு இரண்டு நாள்கள் அவ காசம் வழங்குகின்றோம் என ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் செயலாளர் ஜெயரூபன் தெரிவித்தார். (விரிவு: பக்கம் 04)

## காவலூர் கடற்படை முகாம்களுக்கு சி.சி.ரி.வி. கமராக்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 25

ஊர்காவற்றுறை கடற்படைத் தளங்களில் கடற்பரப்பை நோக்கி சீ.சீ.ரி.வி. தொழில் நுட்பக் கமராக்களைப் பொருத்தும் பணியில் பக்.23

## கொக்காவில் கோர விபத்தில் இளம் தம்பதி பரிதாபச் சாவு

### படுகாயமடைந்த பாலகன் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஜூலை 25

கொக்காவிலில் பஸ் - மோட்டார் சைக்கிள் மோதியதில் இளம் தம்பதியினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களது 2 வயது மகன் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏ-9 வீதியில் கொக்காவில் பகுதியில் நேற்று இந்த விபத்து இடம் பெற்றது.

வவுனியா, குட்செட் வீதியைச் சேர்ந்த றொ.ஜெயக்குமார் (வயது - 25), ஜெ.பிரசாந்தி (வயது -23) ஆகியவர்களே உயிரிழந்தனர். தம்பதியின் இரண்டு வயது மகனான லெனாட் ஆசாட் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய பக்.24

## ஐ.நா. தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும்

### கனேடியப் பிரதமர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 25

உண்மையான சமாதானம் - நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் - இலங்கை. மக்களுக்கான நீதி ஆகியவற்றை அடைந்து கொள்வதற்கு ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும். இதற்கு இலங்கைக்கு கனடா ஊக்கமளிக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடியோ.

இது தொடர்பில் ஜூலை 23 இனக் கலவரத்தின் பக்.23

## பிள்ளைகளின் நலனில் பெற்றோர் எந்தளவு அக்கறை காட்டுகிறீர்கள்?

### கேள்வியெழுப்புகிறார் வவுனியா டி.ஐ.ஜி.

வவுனியா, ஜூலை 25

பொன், பொருள் சேர்ப்பதில் கவனம் செலுத்தும் பெற்றோர்களே பாலியல் வதைகள் இடம்பெறும் இந்தக் காலத்தில் உங்கள் பிள்ளைகளின் நலனில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறீர்கள்? இவ் வாறு கேள்வியை முப்புகிறார் வவுனியா மாவட்டத்துக்கான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்.

சிறுவர் துன்புறுத்தல்கள், துர்நடத்தைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி வன்னி மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் வவுனியா சிறி சிந்தாமணி விநாயகர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய தென்னக்கோன் தெரிவித்ததாவது:

சிறுவர்கள் இன்று உறவினர்களாலும், காம வெறிபிடித்தவர்களாலும் துர்நடத்தைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். பாடசாலை பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலை புனிதப் பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை எதற்காக?

## மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

வலி.வடக்கு, ஜூன் 25
கீரிமலைப் புனிதப் பிரதேசத்தில் கடற்படையினரால் மீன்பிடி இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகிறது. இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்து சமய அமைப்புக்களும் பொதுமக்களும் நேற்று ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

கீரிமலை சிவன் ஆலயத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கீரிமலை சிவன் ஆலய முதன்மைக் குரு, கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலய பூசகர் விக்னேஸ்வரன், சிவபூமி அறக்கட்டளை நிலையத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், சைவமகாசபை செயலாளர் வைத்தியர் ப.நந்தகுமார், இந்து அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



புனிதப் பிரதேசத்தை மாசுபடுத்தாதே, வலித்தூண்டல், சேந்தாங்குள மக்களின் வாழ்வை மழுங்கடிக்காதே, எமது பிரதேசத்தை நிர்ணயிப்பவர் நாங்கள், கீரிமலையில் இறங்குதுறை அமைப்பு எந்தப் பகுதி மக்களுக்கு?, யாருக்காக இறங்குதுறை அமைக்கப்படுகின்றது?, மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொள்ளாத மக்கள் வசிக்கும் இடத்தில் மீன்பிடி இறங்குதுறை எதற்கு?, மீன்பிடித் தொழிலைவாழ்வாதரமாக கொண்டு வாழும் சேந்தாங்குளம், வலித்தூண்டல் பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை அமை, மீன்பிடி சமூகத்தின் வாழ்வாதாரத்தினை அழிக்காதே போன்ற சுலோகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அரசியல்வாதிகளுக்கு என்ற தலைப்பில் ஒரு சுலோகமும் அங்கு காணப்பட்டது. அதில், மயிலிட்டி, பலாலி மக்களைக் குடியமர்த்தாமல் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றும் அரசுக்கு ஆதரவாக செயற்படுகின்றீர்களா? கண்துடைப்புக்காக அரச காணி என்று சொல்லி முன்னர் பொது மக்களின் குடியிருப்பாகவும், விவசாய நிலமாகவும் இருந்த பிரதேசத்தை தாங்கள் பயன்படுத்தும் வரை காணி உரிமையாளர்கள் பயன்படுத்தலாம் என்ற உடன்படிக்கையிலே சிமெந்து கூட்டுத்தாபனத்தினால் காணி சுவீகரிக்கப்பட்டது. தற்போது குறித்த காணிக்கான குத்தகைக் காலம் முடிந்தமையால் அதனை மீள உரியவர்களுக்கு வழங்காது, பிரதேச செயலக அதிகாரிகள் தாம் நினைத்தமாதிரி குறிப்பிட்ட சிலரைக் குடியமர்த்துவதற்காகவும் அரசின் நோக்கத்துக்கு ஆதரவு செய்வதாகவும் உள்ளது. இதற்கு நீங்களும் ஆதரவா? என்ற வசனங்கள் தாங்கிய பதாகையும் காணப்பட்டது.

இறுதியில் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர்சம்பவ இடத்துக்கு வருகைதந்து, உங்கள் கோரிக்கையின் நியாயத் தன்மையை நான் ஏற்கின்றேன். நீங்கள் உங்கள் மகஜர்களின் பிரதியில் ஒன்றை எனக்குத் தாருங்கள். இது தொடர்பாக நான் எமது மேலதிகாரிகள் ஊடாக அரசியல் தலைவர்களுக்குத் தெரியப்படுத்தி நிலமையை சுமுகமாக முடிக்க உதவு வேன். அதற்கு உரிய பலன் கிடைக்காதுவிடில் நீங்கள் போராட்டத்தை நடத்துங்கள் - என்றார். அதன்பின் ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த இடத்தை விட்டுக் கலைந்து சென்றனர்.

யாழ்.மாவட்டச் செயலாளருக்கு தலைப்பிட்ட மகஜர் ஒன்றும் பொதுமக்களின் கையெழுத்துடன் வாங்கப்பட்டது. அதன் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர், இந்து அலுவல்கள் விவகார, மீள்குடியேற்ற அமைச்சர், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்கள், தெல்லிப்பழை பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டன. (வ-25)

## கலை, வர்த்தக பீடங்களில் சில பிரிவுகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்.பல்கலைக்கழக கலை மற்றும் வர்த்தகப் பீடங்களின் சில பிரிவுகளுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்தார்.

கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட முதலாம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்குமான கற்றல் செயற்பாடுகளும் இன்று ஆரம்பிக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றபோது திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக நிகழ்வை நடத்த முற்பட்டதனால் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனால் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்தது. (வ-4,101)

## யாழ். செயலக துவிச்சக்கரவண்டிகள் கொள்வனவு குறித்து விசாரணை

*முன்னெடுக்கிறது லஞ்ச, ஊழல் ஆணைக்குழு*

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணத்தில் உள்ள வர்ணப்பூச்சு விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தில், துவிச்சக்கர வண்டி மாவட்டச் செயலகத்தினால் கொள்வனவு செய்தமை தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை முன்னெடுத்து வருகின்றது.

கடந்த 8 ஆம் திகதி மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்த நிலையில், பிரதேச செயலர் ஒருவரும் தற்போது விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

2014ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் ஆயிரம் துவிச்சக்கர வண்டி விநியோகம் இடம்பெற்றது. இந்தத் துவிச்சக்கர வண்டிகள், யாழில் உள்ள வர்ணப் பூச்சு விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாக ஆவணப் படுத்தப்பட்டது. வர்ணப் பூச்சு விற்பனை செய்யும் வர்த் தக நிலையத்தில் துவிச்சக்கர வண்டியை எப்படிக் கொள்வனவு செய்தது என்பது தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (வ-5)

## அளவெட்டி தபாலகத்துக்கு சொந்தக்கட்டடம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
அளவெட்டி தபாலகத்துக்கு விரைவில் நிரந்தரக் கட்டடம் ஒரு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். அரச அதிகாரிகளின் ஏற்பாட்டின் கீழ் இந்தத் தபாலகத்தின் கட்டுமானப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. தபாலகத்துக்கான சொந்தக்காணியில் அடுத்த மாதம் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. தபாலகம் இதுவரை தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. (ற-17)

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 25
பாதசாரிகள் கடவையில் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு படுகாயமடைந்த முதியவர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இணுவில், கைதடி – மானிப்பாய் வீதியிலுள்ள ரயில் கடவையை அண்மித்து கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் தியேட்டர் ஒழுங்கை இணுவிலைச் சேர்ந்த இளையதம்பி செல்வராசா (வயது - 60) என்பவரே உயிரிழந்தார். அவர் 4 பெண்கள் உள்ளிட்ட 5 பேரின் தந்தை.

அன்று சைக்கிளை உருட்டிக் கொண்டு வீதியில் பாதசாரிகள் கடவையூடாக (மஞ்சள் கோடு) வீதியைக் கடந்துகொண்டிருந்த போது, அவ்வழியே சென்ற மோட்டார் சைக்கிள் அவரை மோதியது. அதனால் பாதசாரிகள் கடவையில் விபத்துக்குள்ளாகி அவர் விழுந்தார்.

அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு சென்ற பொலிஸார் காயமடைந்தவரை தனியார் வைத்தியசாலையில் மருந்து கட்டிவிட்டு ஓட்டோவில் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வருமாறு கூறிவிட்டுத் தம் பாட்டில் சென்றுவிட்டனர்.

"அங்கிருந்தவர்கள் காயமடைந்து கிடந்த அவரை தெல்லிப்பழை வைத்தியசாலையில் அன்றிரவு 7 மணியளவில் சேர்த்தனர். அங்கு காயத்துக்கு மருந்து கட்டப்பட்டது. மறுநாள் சனிக்கிழமை காலைவரை அவரை மருத்துவர்கள் பார்வையிடவில்லை. காலையில் அவர் மயக்க நிலைக்குச் சென்றார். காலை 8 மணியளவில் மருத்துவர் அவரைப் பார்வையிட்டு, உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றினர். எனினும் நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார். விபத்தைக் கண்ட சாட்சியங்கள் உள்ளன என்று இறப்பு விசாரணையில் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## பாலத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
பாலம் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல், நடு வீதியில் கற்கள் கொட்டப்பட்டுள்ளதால் அவை போக்குவரத்து இடையூறாக உள்ளதாக பயணிகள் தெரிவித்தனர்.

அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறையின்றிச் செயற்படாது போக்குவரத்துக்குரிய ஒழுங்குகளை என்றாலும் சீர் செய்ய வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர்.

கற்சிலைமடுவிலிருந்து பேராறு பண்டாரவன்னி ஊடாக கருவேலன்கண்டலை சென்றடையும் வீதியில் உள்ள ஆற்றுக்கான பாலவேலை நடைபெறாததால் வாகனங்கள் செல்வதில் இடர்கள் ஏற்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக சேதமடைந்த நிலையில் இடர் முகாமைத்துவப் பிரிவினரால் கல், மண் என்பன பறிக்கப்பட்டு பல மாதங்களாகியும் சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. அந்த வீதியூடாக வாகனங்களைக் கொண்டு செல்வதில் சிரமம் ஏற்படுகிறது. இதனால் நீண்ட தூரம் சுற்றி வரவேண்டும் என மக்கள் தெரிவித்தனர். (வ-500)

## ஆசிய ஆயர்கள் மாநாடு இலங்கையில்

கொழும்பு, ஜூலை 25
கத்தோலிக்கத் திருச்சபையின் ஆசிய ஆயர்கள் மாநாடு முதல் முறையாக இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 28 ஆம் திகதி தொடக்கம், டிசெம்பர் 5 ஆம் திகதி வரை இந்த மாநாடு நீர்கொழும்பில் நடைபெறவுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் உள்ள 150 கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

மாநாட்டுக்கான ஒழுங்கமைப்புப் பணிகள் தொடர்பாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன், கர்தினால் மல்கம் ரஞ்சித் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். (ற-5)

## அம்புலன்ஸ்,தீயணைப்பு வண்டிகள் ஐந்து மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
வவுனியா, அம்பாறை மாவட்டங்களுக்கு ஒவ்வொரு தீயணைப்பு வாகனமும், ஒவ்வொரு அம்புலன்ஸ் வாகனமும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம், மாத்தளை, கொழும்பு மாவட்டங்களுக்கு ஒவ்வொரு அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன.

34 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு தீயணைப்பு வண்டிகளும் 9 மில்லியன் ரூபா பெறுமதியான 5 அம்புலன்ஸ் வண்டிகளும் மாநகர மற்றும் நகர சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. யாழ். மாநகர சபைக்கும் அம்புலன்ஸ் வழங்கப்பட்டது. அவசர தேவைகளுக்கு அது பயன்படுத்தப்படும் என்று யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் காணி பறிப்பு; ஒரு வாரத்துக்குள் பதில்

## யாழ். மாவட்டச் செயலரிடம் பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் பொலிஸாரினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் தொடர்பாக, ஒரு வார காலத்தினுள் பதில் வழங்குவதாக, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன கெட்டியாராச்சி உறுதியளித்தார்.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டச் செயலர் நா.வேத நாயகன்.
வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர்வுக்காக ஜூன் மாதம் 25ஆம் திகதி 200 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட காங்கேசன்துறைப் பகுதியில் ஒரு தொகுதி காணிகளை பொலி ஸார், கடந்த 17ஆம் திகதி வேலிகளைப் போட்டு அடைத்தனர். மக்கள் அந்தப் பகுதியினுள் செல்ல முடியாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பில் மக்களால், மாவட்டச் செயலருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.
பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன கெட்டியாராச்சி நேற்று முன்தினம் சனிக் கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார். மாவட்டச்செயலர்நா.வேதநாயகனையும் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது மேற்படி விடயத்தை, பாதுகாப்பு அமைச்சின் செயலரின் கவனத்துக்கு மாவட்டச்செயலர் கொண்டு சென்றிருந்தார்.
"பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைச் சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்று காண்பித்தோம். ஒரு வார காலத்தினுள் பதில் வழங்குவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்" என மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த வாரம் யாழ். மாவட்டத்துக்கு வந்தபோது, பொதுமக்களினால் மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இரா.சம்பந்தன் உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலரைத் தொடர்பு கொண்டு பேசிய போது, விரைந்து நடவடிக்கை எடுப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவித்தார். (வ-5-10)

# கடன் அறவீடுகளில் வங்கிகள் மும்முரம்

அச்சுவேலி, ஜூலை 25
தவணை தப்பிய கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வதில் வங்கிகள் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்து வருகின்றன. வங்கிக்கடன் அறவீடு தொடர்பான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொழும்பில் இருந்து வருகை தந்த சட்டத்தரணிகள் குழு யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து சட்டநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.
போர் முடிவடைந்த பின்னர் அரச வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகள் போட்டி போட்டுக்கொண்டு யாழ். மாவட்டத்தில் உள்ளூரில் கிளைகளை ஆரம்பித்து தமது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு வகையான கடன் வசதிகளை வழங்கின. வாடிக்கையாளர்கள் ஒரு தேவையின் நிமித்தம் ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கடன் வசதியைப் பெற்றுக்கொண்டனர்.
வங்கிகள் விவசாயக்கடன், சிறுகைத்தொழில் முயற்சிக்கடன், கைத்தொழில் முயற்சி கடன் என இலகுபடுத்தப்பட்ட நிலையில் கடன்வசதிகளை வழங்கி உதவின. அந்தவகையில் ஒரு லட்சம் ரூபா தொடக்கம் ஐந்து லட்சம் ரூபா வரையிலான கடன்கள் வழங்கப்பட்டன.
இரண்டு லட்சத்து 50 ஆயிரம் வரையிலான கடன் அறவீடு சட்டநடவடிக்கைகள் மத்தியஸ்தர் சபைகளில் முறைப்பாடு செய்து இணக்கப்பாடு இல்லை என்ற சான்றிதழுடன் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு மேற்பட்ட கடன் தொகை தொடர்பான வழக்குகள் நீதிமன்றில் நேரடியாகத் தாக்கல் செய்யப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (வ-11)

# ஆட்சி மாற்றத்தின் பின் பொதுநிகழ்வில் கருணா

மட்டக்களப்பு, ஜூலை 25
ஆட்சி மாற்றத்தின் பின்னர் பொது நிகழ்வுகளில் பங் கெடுக்காது ஒதுங்கியிருந்த மீள்குடியேற்ற முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) மட்டக்களப்பு உறுகாமத்தில் நேற்று நடைபெற்ற அறுவடை விழாவில் கலந்து கொண்டார்.
அறுவடை விழாவில், நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சர் காமினி விஜித் விஜித முனி சொய்சா, அமைச்சின் செயலாளர், பிரதி அமைச்சர், மாவட்டச் செயலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் உரையாற்றிய விநாயகமூர்த்தி முரளிதரன், அறுவடை நிகழ்வுக்கு நீண்ட தூரத்தில் இருந்து வருகை தந்திருக்கும் அமைச்சர் காமினி விஜித் விஜிதமுனி சொய்சா மற்றும் பிரதி அமைச்சர், முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகை தந்திருக்கின்றார்கள். இவர்களைப் பாராட்ட வேண்டும். இந்த நிகழ்வில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும், நிகழ்வுக்கு அழைத்தும் வருகை தரவில்லை. உண்மையில் ஒருவராவது வந்திருக்கலாம். குறையாககூறவில்லை. வந்திருந்தால் ஒரு அமைச்சை பயன்படுத்துவது சம்பந்தமாக உரையாடியிருக்கலாம். அவர்கள் வருகை தந்திருக்க வேண்டும் மென்பது எனது அன்பான வேண்டுகோள் என்று உரையாற்றிக் கொண்டிருக்கையில், தற்பொழுது எமது (தமிழ்) நாடாளுமன்ற உறுப்பினர் வரவில்லை என்று கூறினேன். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அமல் வருகை தந்திருக்கின்றார். அவருக்கு பலத்த கரகோசமொன்று எழுப்பி அன்பாக வரவேற்கவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் என்றார் முரளிதரன். (வ-5)

# யாழ். பல்கலை. மோதல் சம்பவத்துக்கு பயங்கரவாதத் தடைச் சட்டம் கூடாது

## பிரயோகிக்கப்பட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று கருணாரத்ன எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25
யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு இடையிலான அடிதடியைப் பயன்படுத்தி, தமிழ் மாணவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திணித்து அவர்களை ஒடுக்கும் சதித் திட்டம் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. தென்பகுதியைச் சேர்ந்த இனவாதிகளின் முயற்சிக்கு அரசு துணை போனால் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பவோ, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவோ முடியாது போய்விடும்.
இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன எச்சரித்தார்.
யாழ். பல்கலைக் கழகச் சம்பவம் தொடர்பில் சிங்கள வார இறுதி ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
யாழ். பல்கலைக் கழக அடிதடியானது திட்டமிட்டு நடத்தப்பட்டது. தென்பகுதியில் உள்ள சிலர் அடிதடிக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டு பாதுகாப்புத் தரப்பினருக்கும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புகள் இருக்கின்றன என்று சந்தேகிக்கின்றேன். சம்பவத்தின் உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும். தமிழ் மாணவர்கள் தீவிரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்று குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சதி நடவடிக்கைக்கு காரணமானவர்களைக் கண்டறிய வேண்டும்.
சம்பவத்துடன் தொடர்புடைய தென்னிலங்கை இனவாதிகள் கண்டறியப்பட வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படக் கூடாது. தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தால் ஏற்கனவே ஒடுக்கப்பட்டுள்ளனர். அப்படியான பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் அரசு தோல்வி அடைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகின்றனர். அதனால் பல்கலைக் கழக சம்பவத்தையும் பயங்கரவாதச் செயற்பாடாகப் பார்க்கக் கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. தென்பகுதியில் உள்ள சிலர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் யாழ். பல்கலைக் கழக சம்பவத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழுத்துகின்றனர். அப்படி நடைபெற்றால் அது பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கும் - என்றார். (ற-5)

# புலமைப்பரிசில் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஜூலை 25
தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை அனுமதி அட்டை கிடைக்காவிடின் பரீட்சைகள் திணைக்களத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு. எம். என்.ஜே. புஷ்பகுமார அறிவித்தார்.
எதிர்வரும் ஓகஸ்ட் 21ஆம் திகதி தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கடந்த 18ஆம் திகதி பாடசாலை அதிபர்களுக்கு தபாலிடப்பட்டன.
இந்த மாதம் 29ஆம் திகதி வரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்கள், பாடசாலை பரீட்சைகள் ஏற்பாட்டுக் குழு அல்லது பெறுபேறு பிரிவுஎன்பவற்றுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.
இதன்படி, 011-2784208, 011-2784537, 011-3140314 தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 1911 சுருக்க தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது 011-2784422 எனும் பக்ஸ் இலக்கத்துடனோ தொடர்புகளை மேற்கொள்ளமுடியும் என ஆணையாளர் தெரிவித்தார். (வ-4)

Galaxy Star
வெற்றி வாரம் 077
திகதி 24.07.2016
02 43 52 58 60
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 24.07.2016
வெற்றி வாரம் 2008
வெற்றி இலக்கங்கள்
09 14 26 44
செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,884,660/-
2016-07-26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஊழியர் நேற்று பணிப்புறக்கணிப்பு

## ஊழியரைத் தாக்கியோரை கைது செய்யுமாறு

யாழ்ப்பாணம், ஜூலை 25
அச்சுவேலி பிரதேச வைத்திய சாலை வெளி நோயாளர் பிரிவு செயலிழந்தது. ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஊழியர் ஒருவரைத் தாக்கிய பிரதான சந்தேக நபரைக் கைது செய்யாவிட்டால் இன்றும் போராட்டம் நடத்தப்படும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நேற்றுமுன்தினம் கடமை நேரத்தில் அதிகாலை 1.30 மணியளவில் இளைஞர் குழுவின் தாக்குதலுக்கு உள்ளானார். அதையடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையின் ஊழியர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தர வேண்டும். கடமையில் இருந்த ஊழியரைத் தாக்கி படுகாயத்துக்கு உள்ளாக்கிய இளைஞர் குழுவை கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்க வேண்டும் என்று வலியுறுத்தி வெளிநோயாளர் பிரிவு ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வெளிநோயாளர் பிரிவு செயலிழந்தபோதும், அவசர சிகிச்சை, விடுதி நோயாளர் சிகிச்சைகள் நடைபெற்றன. நேற்றுமுன்தினம் நீரிழிவு நோய் சிகிச்சை கிளினிக் உட்பட எந்தக் கிளினிக்கும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவும் செயற்படாததால் வைத்தியசாலைக்கு வந்த நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

சனிக்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் படுகாயம் அடைந்த இளைஞர் ஒருவரை ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழு சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தது. அவரது காயத்துக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தபோது சத்திரசிகிச்சைப் பிரிவின் உள்ளே இளைஞர் குழு அத்துமீறி உட்பிரவேசிக்க முயன்றது. தடுக்க முற்பட்ட வைத்தியசாலை ஊழியர் தாக்கப்பட்டார்.



தாக்குதலுக்கு உள்ளாகிய கி.இரவீந்திரன் (வயது 50) தலையில் பலமான தாக்குதலுக்கு உள்ளாகி மயக்கமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

"வைத்தியசாலைக்கு பொருத்தமான பாதுகாப்பு சேவை இல்லை. தாக்குதல், மிரட்டல், அச்சுறுத்தல் சாதாரணமாக நடைபெறுகின்றன. இரவுக்கடமையில் ஈடுபடுவதற்கு பணியாளர்கள் அஞ்சுகிறார்கள். ஊழியர் தாக்கப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் வெளிநோயாளர் பிரிவு செயற்படவில்லை. அவசரசிகிச்சை மற்றும் விடுதிகளுக்கான சிகிச்சைகள் வழமைபோல நடைபெற்றன" - என்று வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் அனைவரும் கைது செய்யப்படும் வரை பணிக்குத் திரும்பப் போவதில்லை என்று ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

"இதுவரை 3 சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளோம். இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றி உள்ளோம். நான்காவது சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். விரைவில் அவரைக் கைது செய்வோம்" என்று அச்சு வேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

"அச்சுவேலியில் ஊழியர்தாக்கப் பட்டமையைக் கண்டிக்கிறோம். மற்றைய சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தால் இன்று திங்கட்கிழமை வழமை போன்று பணி நடக்கும். பொலிஸார் கைது செய்யவில்லை எனின் இன்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய சாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர்"-என்று ஜனரஜ சுகாதார சேவைச் சங்கத்தின் செயலாளர் ஜெயரூபன் தெரிவித்தார். (ற-4,11,26,426)

## இரண்டு மாதங்களுக்குள் கைதாவார் கோத்தபாய!

கொழும்பு, ஜூலை 25
இரண்டு மாதங்களுக்குள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டது.

உயர்மட்டத்தில் இடம்பெற்ற சில குற்றச்செயல்கள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகளின் தொடர்ச்சியாகவே கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படுவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்பட்டால் சிறைக்குச் செல்லும், ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நான்காவது நபராக அவர் இருப்பார். ராஜபக்ச குடும்பத்தில் பசில் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச, யோசித ராஜபக்ச ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

கோத்தபாய ராஜபக்ச அரசியலில் நுழைவதற்கு எதிர்பார்த்துள்ளார் என்று கூறப்படுகிறது. கோத்தபாய ராஜபக்ச நாடாளுமன்றத்துக்கு வரவேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகின்றனர் என்றும், தற்போதைய அரசுக்கு எதிரான பரப்புரைகளை அவர் ஏற்கனவே ஆரம்பித்துள்ளார் என்றும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்தார். (ற-5)



ஜப்பானியக் கடற்படையின் இரண்டு போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக நேற்று வந்தன. இனாசுமா, சுசுற்சுகி ஆகிய போர்க் கப்பல்களே வந்தன. இவை கொழும்பில் இன்று மாலை வரை தரித்து நிற்கும். கடற்படையுடன் இணைந்து ஜப்பானியக் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபடுவர். ஏடன் வளைகுடாவில் சரக்குக் கப்பல்களுக்கான பாதுகாப்பில் ஈடுபடும் ஜப்பானியப் போர்க் கப்பல்கள், விநியோகத் தேவைக்காக கொழும்புத் துறைமுகத்துக்கு அடிக்கடி வந்து செல்லும். (ற-5)

## சு.க உறுப்பினர்களைச் சந்திக்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜூலை 25
மகிந்த ஆதரவு அணியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று சந்திப்பு நடத்துகிறார்.

அரசுக்கு எதிராக மகிந்த அணியினரால் 28ஆம் திகதி பாத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பேரணிகளில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பங்கேற்கக்கூடாது என்று அந்தக் கட்சியின் மத்தியகுழு ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியது.

கண்டியிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளவேண்டாம் என சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்குவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சியின் எதிர்ப்பையும்மீறி அந்தக் கட்சியிலுள்ள மகிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் எதிர்ப்பு யாத்திரையில் பங்கேற்பார்கள் என்று குறிப்பிடப்பட்டது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட்டு எதிரணி உறுப்பினர்களை இன்று சந்திக்கிறார். (வ-5)

**வீடு வாடகைக்குத் தேவை**
அரச உத்தியோகத்தர்களான சிறு குடும்பத்திற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை. உடுவில், இணுவில், கோண்டாவில், உரும்பிராய் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 614 6361

**பணிப்பெண்தேவை**
வயோதிபப்பெண் ஒருவரைப் பராமரிக்க 40 -45 வயதுவரையுள்ள ஒரு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 999 7890

**வீடு வாடகைக்குத் தேவை**
3 பேர் கொண்ட குடும்பம் ஒன்று வசிப்பதற்கு வசதிகொண்ட சிறிய வீடு தேவை.
தொடர்பு: 077 999 7890

**தவறிவிட்டது**
நெல்லியடியில் இருந்து கற்சிலைமடு - ஒட்டுசுட்டான் வரை மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது NP BCS 4729 இலக்கமுடைய மஞ்சள்நிற இலக்கத்தகடு தவறிவிழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (K/100) (11.18)
தொடர்புகளுக்கு: 077 901 2071

**பகுதிநேர வேலைவாய்ப்பு**
வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, **காப்புறுதி ஆலோசகராக**, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணி யாற்ற வாய்ப்பு.
* 2 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள்:
யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை

**அடிப்படைத் தகைமைகள்**
* G.C.E.(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
* 18- 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுய விவரக்கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை **10.08.2016** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல: 5110
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி சீனாவாக இலங்கையை மாற்ற முயற்சித்தார் மகிந்த

## சாடுகின்றார் அமைச்சர் கபீர் காசிம்

கொழும்பு, ஜூலை 25
இலங்கையை குட்டி சீனாவாக மாற்றுவதற்கு மகிந்த ராஜபக்ச முயற்சித்தார் என்று அமைச்சர் கபீர் காசிம் குற்றம் சுமத்தினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே கபீர் காசிம் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
மகிந்த ராஜபக்ச அரசு ஆட்சியில் இருந்த போது, இலங்கையைக் குட்டி சீனாவாக மாற்ற முயன்றது.
சீனாவுடன் எந்த இருதரப்பு உடன்பாடுகளையும் செய்து கொள்ளாமலேயே சீனாவில் இருந்து தொழிலாளர்களையும், பல்வேறு பொருள்களையும் மகிந்த ராஜபக்ச கொண்டு வந்தார்.- என்றார். (ந-5)

# பனை வார கண்காட்சியில் பண்டாரவன்னியன் சிறப்பு நாடகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
நல்லூர் சங்கிலியன் தோப்பில் நடைபெற்று வரும் பனை வார கண்காட்சியில் இன்று திங்கட்கிழமை கற்சிலைமடு பரந்தாமன் கலா மன்றத்தினர் வழங்கும் பண்டரவன்னியன் வரலாற்றுச் சிறப்பு நாடகம் நடைபெறும்.
வன்னியின் வரலாற்று நாயகனாக விளங்கும் பண்டரவன்னியனின் வீரமிகு வரலாற்றை எடுத்தியம்பும் முத்தமிழ் வித்தகர் முல்லைமணி எழுதி விமலேந்திராவால் நெறியாள்கை செய்யப்பட்ட நாடகம் மாலை 6 மணிக்கு அரங்கேற்றப்படவுள்ளது.
வடமாகாண சபை, வட மாகாண கூட்டுறவு அமைச்சு மற்றும் வடமரகாண கூட்டுறவுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் 22 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதிவரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. இன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இந்த பனை வாரக் கண்காட்சி நடைபெறுகிறது. (ந-4,ரி7)

# 200 வீதம் உறுதியாகும் வரை வழக்குத் தொடர வேண்டாம்

## ஊழல் மோசடிகள் தொடர்பில் அதிகாரிக்குப் பிரதமர் பணிப்பு

கொழும்பு, ஜூலை 25
நூற்றுக்கு 200 வீதம் உறுதியாகும் வரையில் ஊழல் மோசடி குற்றச்சாட்டுத் தொடர்பில் எவருக்கு எதிராகவும் வழக்குத் தொடர வேண்டாம் என்று விசாரணை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
செய்திச் சேவை நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு அவர் கூறினார்.
ஊழல் விசாரணைப் பொறிமுறை தற்பொழுது பலப்படுத்தப்பட்டுள்ளது. ஊழல் மோசடி இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்கள் அனைத்தையும் இல்லாதொழித்து, புதிய முறைமையொன்று உருவாக்கப்படும். இதற்காக எதிர்வரும் வருடத்தில் புதிய சட்ட உருவாக்கம் இடம்பெறும்.- என்று அவர் தெரிவித்தார். (ந-4)

# வயல்வார நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 25
மகா இலுப்பல்லமையில் உள்ள வயற் பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் நாளை திங்கட்கிழமை தொடக்கம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வயல் வார நிகழ்வை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று கிளிநொச்சிப் பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் எஸ். ஜே. அரசகேசரி தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் புதிதாக வெளியிடப்பட்ட பயிர் இனங்கள், புதிய விவசாயத் தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாயம் சம்பந்தமான ஏனைய தரவுகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
வயல் வாரத்தில் இது தொடர்பாக விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசசேவை உத்தியோகத்தர்களுக்கும் போதிய விளக்கம் அளிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
(ந-ரி)

# அமிர்தலிங்கம் பிறந்த தினத்தை முன்னிட்டு பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 25
வடக்கு மாகாண் பாடசாலை மாணவர்களுக்கிடையே அமிர்தலிங்கத்தின் 89 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டுப் பேச்சுப் போட்டி நடத்தப்படவுள்ளது என்று அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை நிலையம் தெரிவித்தது.
தரம் 6,7,8 கீழ்ப் பிரிவாகவும், தரம் 9,10,11 மத்திய பிரிவாகவும், தரம்12,13 மேற்பிரிவாகவும் நடத்தப்படவுள்ளன. பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது முழுப்பெயர், வகுப்பு, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பாடசாலை அதிபர் ஊடாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக போட்டி ஏற்பாட்டாளர், அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை, மூளாய், சுழிபுரம் என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது என நிலையத்தினர் தெரிவித்தனர். (ந-ரி)

# விநியோகக் குழாயில் வெடிப்பு எரிபொருள் இறக்கல் நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 25
ஈரானில் இருந்து கொண்டுவரப்பட்ட 90 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை இறக்கும் நடவடிக்கை எரிபொருள் குழாயில் ஏற்பட்ட வெடிப்பால் நிறுத்தப்பட்டது.
கொழும்புத் துறைமுகத்தின் எரிபொருள் விநியோக குழாயில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெடிப்பு ஏற்பட்டது.
தரக்குறைவான எண்ணெய் கொண்டு வரப்பட்டமையால் இந்த நிலமை ஏற்பட்டது என்று லங்கா மசகு எண்ணெய் தேசிய ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.
எரிபொருள் இறக்கும் நடவடிக்கைகள் தாமதமானால் கப்பலுக்காக நாள் ஒன்றுக்கு பெரியளவில் தாமதக் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
வெடிப்பு இடம்பெற்ற குழாயினது சீரமைப்பு பணிகளை விரைவில் நிறைவு செய்ய முடியும் என்றும் குறிப்பிடப்பட்டது. (ந-5)

# அம்பாள் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். வண்ணை வைத்தீஸ்ரவர் கோயில் அம்பாள் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன ஆரம்பமாகவுள்ளது.
பதினொரு தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாக்களில் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
விசேட திருவிழாக்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் வசந்தமண்டபப் பூசை காலை 9 மணிக்கும் மாலை 6 மணிக்கும் நடைபெறவுள்ளது என ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ந-ரி)

# திருவிழா விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் கோயில் திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் 5 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.
(ந-ரி)

# கழிவு சேகரிப்பு தொட்டிகள் கூடுதலான இடங்களில்

யாழ்ப்பாணம் ஜூலை 25
யாழ்.மாநகர சபையின் மீள் சுழற்சி கழிவகற்றும் திட்டத்தின் கீழ் மாநகரப் பகுதியில் கூடுதலான இடங்களில் மீள் சுழற்சி கழிவுகள் சேகரிப்புத் தொட்டிகள் வைக்கப்படவுள்ளன என்று ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
பொலித்தீன் மற்றும் உக்கும் உக்காத பொருள்கள் இந்த கழிவுகள் சேகரிப்புத் தொட்டிகள் ஊடாக சேகரிக்கப்படுகின்றன. மக்கள் கூடும் முக்கிய இடங்கள், சந்திகள் போன்ற இடங்களில் அவை வைக்கப்பட்டுள்ளன.
இந்த திட்டத்தின் ஊடாக மேலும் ஒரு தொகுதி கழிவு சேகரிப்புதொட்டிகள் அமைக்கப்பட்டு அவை மாநகரப் பகுதியில் பரவலாக வைக்கப்படும்.
மீள் சுழற்சிதிட்டத்தின் ஊடாக இந்தக் கழிவு சேகரிப்பு தொட்டிகள் ஊடாக கழிவு சேகரிப்பு பணிகள் வெற்றி பெற்றுள்ளது என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (ந-17)

வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளராக
இன்று (25.07.2016) திங்கட்கிழமை நியமனம் பெற்ற
திரு.ஜேம்ஸ் பிரபாகரன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் தம் பணிகள் தொடர இறை ஆசியை இறைஞ்சி நிற்கின்றோம்.
வி.ஆர்.சுதாகரன் கௌரவ செயலாளர்
இந்துமன்றம் இலங்கை வங்கி
தலைமை அலுவலகம் கொழும்பு.

யா/சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின்
சாதனை வீரர்களைப் பாராட்டுகின்றோம்



வடமாகாண பாடசாலைகளுக் கிடையிலான 2016 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகளில் பங்குபற்றிய
செல்வன் கி.சதீஸ் உயரம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும்
செல்வன் அ.திலீப்குமார் உயரம் பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும்
செல்வன் ந.சதீஸ்கண்ணன் 100 மீற்றர் ஓட்டம் மற்றும் நீளம் பாய்தலில் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.
இவர்கள் மென்மேலும் சாதனைகள் படைத்து கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமெனவும் இவர்களை ஊக்குவித்த கல்லூரியின் அதிபர், பிரதி அதிபர், உடற்கல்வி ஆசிரியர் ஆகியோரையும் உளமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.
யா/டிறிபேர்க் கல்லூரி - பாடசாலைச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எதிர்ப்புப் போராட்டத்தால் கொழும்புமீது புதுடில்லி சீற்றம்

## வெளிவிவகார அமைச்சு ஊடாக கவலை வெளியிடும்

கொழும்பு, ஜூலை 25
இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் மனித உரிமைமீறல்களைக் கண்டித்துக்கொழும்பில்நடைபெற்ற கவனவீர்ப்புப் போராட்டம் இந்திய அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இராஜதந்திர ரீதியில் தனது கவலையை இந்தியா, இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சிடம் வெளியிடவுள்ளது என்று நம்பகமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக, கடந்த புதன் கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இலங்கையிலுள்ள பாகிஸ்தானியர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

காஷ்மீரில் இந்தியப் படைகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றன என்று தெரிவித்தும், காஷ்மீருக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று கோரியும் இந்தக் கண்டனக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. பன்னாட்டு ஊடகங்கள் இந்த விடயத்துக்கு அதிகளவிலான முக்கியத்துவத்தை வழங்கியிருந்தன.

இந்திய மத்திய அரசுக்கு இந்த விவகாரம் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரியவருகின்றது. இலங்கை அரசுக்கு இந்தியா தனது அதிருப்தியையும், கவலையையும் வெளிவிவகார அமைச்சின் ஊடாக வெளியிட உள்ளது. (ந-5)



*ஐ.நா. அலுவலகம் முன்பாக கடந்த வாரம் நடத்தப்பட்ட கவன வீர்ப்புப் போராட்டம்*

# செவ்வண்டுத் தாக்கத்தால் தென்னை மரங்கள் பாதிப்பு

தென்மராட்சி, ஜூலை 25
"தென்மராட்சி கிழக்கில் தென்னை மரங்கள் செவ்வண்டுகளால் பாதிக்கப்பட்டு அழிவடைந்து வருகின்றன. அதைக் கட்டுப்படுத்த தென்னை அபிவிருத்திச் சபையினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்" என தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது நிலவும் காலநிலை மாற்றம் காரணமாக செவ்வண்டுகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. உயரமான தென்னை மரங்களில் காணப்படும் செவ்வண்டுகள் மரங்களின் குருத்துப் பகுதிக்குள் சென்று தாக்கத்தை ஏற்படுத்துவதால் குருத்துகள் சேதமடைந்து அவை முறிந்து வீழ்ந்த பின்னரே செய்கையாளர்களால் இனங் காணப்படுகிறன. தென்னை மரங்கள் செவ்வண்டுகளின் தாக்கத்தால் அழிவடைவதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் தென்னை முக்கோண வலயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், செவ்வண்டுத் தாக்கத்தைத் தடுக்க தென்னை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-9)

# கிணற்றிலிருந்து சடலமாக தாயும், குழந்தையும் மீட்பு

மட்டக்களப்பு, ஜூலை 25
மட்டக்களப்பு-வெல்லாவெளி, காக்காச்சுவட்டைக் கிராமத்தில் கிணற்றில் இருந்து குழந்தை உட்பட இருவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.

காக்காச்சுவட்டை கிராமத்தைச் சேர்ந்த 23 வயதான பிரசாந் விஜிதா மற்றும் அவரது மகளான ஒன்றரை வயதுடைய பிரசாந் சஸ்மி ஆகியோரே சடலமாக மீட்கப்பட்டனர். தாயும் குழந்தையும் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை முதல் காணாமற்போயிருந்த நிலையில், குறித்த இருவரும் கிணற்றில் சடலங்களாகக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டனர்.

அதேவேளை உயிரிழந்த விஜிதாவின் தந்தையான 56 வயதுடைய பேரின்பராசா என்பவர் பலத்த அடிகாயங்களுக்குள்ளான நிலையில், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்த விஜிதாவின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என்றும் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# உரிமம் பெறாத நிறுவை உபகரணம் உபயோகித்தோருக்கு தண்டம்

தென்மராட்சி, ஜூலை 25
அளவை நிறுவை உபகரணங்களுக்கு இந்த வருடத்துக்குரிய உரிமம் பெற்றுக் கொள்ளாத தென்மராட்சி பிரதேச வர்த்தகர்கள் பலர் யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் திணைக்களத்தினரின் சோதனையில் சிக்கினர்.

சாவகச்சேரி நகர் மற்றும் கைதடியில் யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் திணைக்கள அலுவலர்கள் அண்மையில் திடீர் சோதனை நடத்தினர். உரிமம் பெறாத 15 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தனர்.

வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளைத் தனித்தனியாக விசாரித்த நீதிவான், வர்த்தகர்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் திணைக்களத்தால் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக வியாபார நிலையங்களில் பயன்படுத்தும் அளவை நிறுவை உபகரணங்களுக்கு உரிமம் (சீல் வைத்தல்) வழங்கப்பட்டது. (ந-9)

# மகிந்தவை மீண்டும் கொண்டுவர அச்சு ஊடகங்கள் முயற்சி

## குற்றஞ்சாட்டுகின்றார் பிரதமர் ரணில்



கொழும்பு, ஜூலை 25
மகிந்த ராஜபக்சவை மீண்டும் பதவிக்குக் கொண்டு வரும் நோக்கில் அச்சு ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கான கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிங்கள, ஆங்கில அச்சு ஊடகங்களையே அவர் குறிப்பிட்டார் என்று கட்சியினர் தெரிவித்தனர்.

ரணில் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த காலத்தில் நன்மைகளை அனுபவித்த ஊடகவியலாளர்கள், அவரை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடு பட்டுள்ளனர். மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக "டெய்லி மிரர்" மற்றும் "பினான்சியல் ரைம்ஸ்" ஆங்கில ஊடகங்கள் செயற்படுகின்றன.

மங்கள சமரவீரவை வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து அகற்றுமாறு "டெய்லி மிரர்" கோருகின்றது. அரசின் பொருளாதார முகாமைத்துவத்தைச் சீரழிக்க "பினான்சியல் ரைம்ஸ்" முற்படுகின்றது.

ஊடகங்கள் அரசை விமர்சிப்பது குறித்து பிரச்சினையாக எடுத்துக் கொள்ளவில்லை. அதைச் செய்யுங்கள். ஆனால் முரடர்களை மீண்டும் அழைப்பதற்கு முயற்சிக்காதீர்கள்.

மகிந்த ராஜபக்சவை மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்த அரசைக் [illegible] அவர்கள் முயற்சித்தால் அதற்கும் நாம் தயாராகவே இருக்கிறோம்- என்றார். (ந-5)

பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி
அருந்தவஈஸ்வரி
இரகுநாதன்
இகத்தில்
07.04.1919
பரத்தில்
22.07.2005
திதி: ஆடிமாத அபரபக்க துதியை
(21.07.2016)



ஆண்டுகள் பதினொன்று பறந்ததம்மா
என்னை வாழ வழிகாட்டிய தெய்வமே
எங்கு சென்றீரோ..?
நீங்கள் பரத்தில் நின்று பரிதவிக்கும் என்னை ஆசீர்வதிப்பீர்களாக!
உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கு
எங்கள் வளவில் எழுந்தருளியிருக்கும்
நரசிங்க வைரவப் பெருமானின் பாதம் பணிகின்றோம்.
"உடையார்வீடு", சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.
(J/8178) (11.18)
உற்றார், உறவினர், நண்பர்கள்.

# தப்பியோடிய படையினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூலை 25
பாதுகாப்புப் படைகளில் இருந்து தப்பி ஓடிய 18 ஆயிரத்து 847 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

முப்படைகளில் இருந்தும் தப்பி ஓடியவர்கள் முறைப்படி விலகிக் கொள்வதற்கான பொது மன்னிப்புக் காலமாக ஜூன் 13 ஆம் திகதி தொடக்கம், ஜூலை 13 ஆம் திகதி வரை அறிவிக்கப்பட்டது.

பொதுமன்னிப்புக் காலத்தில், இராணுவத்தில் இருந்து தப்பியோடிய 16 ஆயிரத்து 920 பேரும், கடற்படையில் இருந்து தப்பி ஓடிய 831 பேரும், விமானப் படையில் இருந்து தப்பிச்சென்ற 629 பேரும் தாமாக விலகிக் கொள்ள முன்வந்தனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.

பொது மன்னிப்புக் காலத்தை கடற்படையில் இருந்து தப்பியோடிய 7 ஆயிரம் பேரில், 6 ஆயிரத்து 169 பேர் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

2009 தொடக்கம் 2014 வரையான காலத்தில், 4 ஆயிரத்து 717 விமானப்படையினரும், 2015இல் 515 விமானப் படையினரும் தப்பியோடியுள்ளனர் என்று விமானப் படைப் பேச்சாளர் குறூப் கப்டன் சந்திம அல்விஸ் தெரிவித்தார். இவர்களில் 629 பேர் மாத்திரமே பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

தப்பியோடிய படையினருக்கு இனிமேல் பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. தப்பியோடிய படையினரைத் தேடும் பணிகள் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. பிடிபடுபவர்களுக்கு எதிராக இராணுவச் சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 கிலோ கேரளக் கஞ்சா உடுவிலில் மாட்டியது

## மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் சந்தேகநபரும் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 25
மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் அதிரடிச் சுற்றிவளைப்பில் 7 லட்சம் ரூபா பெறுமதியான 6 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாப் பொதிகள் உடுவிலில் கைப்பற்றப்பட்டன. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது. வடமராட்சி மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி சிறிபான்ன தலைமையிலான குழு சுற்றிவளைப்பை நடத்தியது. அளவெட்டியைச் சேர்ந்த 23 வயதுடைய ரமேஸ்குமார் என்பவரே கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் தீவிர விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும் விசாரணையின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் ஓட்டோவில் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் நேற்று நண்பகல் ஒருவர் கைது செய்யப்பட்டார். அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ்.மகிழ்ஞகமார் (வயது-35) என்பவரே கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். அவரிடம் இருந்து கஞ்சாச் சரைகள் கைப்பற்றப்பட்டன. விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர் வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். •

(ற-4,ரி,109,108)

## பல்கலைக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டின் பரிசளிப்பு விழாவில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

கடந்த 10 வருட காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் தங்கள் பெயர், விவரங்களை நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அலுவலகத்தில் பதிவு செய்து, தங்களுக்கான ஒழுங்கு இலக்கத்தைப்பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-ரி)

## குருதித்தான முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். கந்தர்மடம் ஸ்ரீசிவ குருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை குருதித்தானம் நடைபெறவுள்ளது.

7 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் 10ஆவது குருபூசை தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை குருதித்தான முகாம் நடைபெறும். (ற)

## கிணற்றில் தவறி வீழ்ந்து பெண் சாவு

தென்மராட்சி, ஜூலை 25
இரவு குளிக்கச் சென்ற குடும்பப் பெண் கிணற்றில் தவறி வீழ்ந்தார். உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு அல்லாரை தெற்கில் நடந்தது.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டது. (ற-9)

## கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர் நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் அல்லது பருத்தித்துறை தொழிற்பயிற்சி நிலையத்தில் பதிவுகளைமேற்கொள்ளலாம்என்று அவர் தெரிவித்தார். (ற-ரி)



முல்லைத்தீவு முள்ளியவளை வீதியில் மூன்றாம் கட்டை பெரும் பாலத்தடியில் நேற்று நண்பகல் கார் ஒன்று தடம் புரண்டது. கட்டுப்பாட்டை இழந்த கார் பாதுகாப்புத் தூணில் மோதித் தடம்புரண்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-102)

# மோதுண்டு 3 வாகனங்கள் சேதம்

தென்மராட்சி, ஜூலை 25
ஏ-9 வீதியில் நடத்த விபத்தில் மூன்று வாகனங்கள் சேதமடைந்தன. யாழ்ப்பாணத்தில் இருந்து கதிர்காமம் சென்ற தனியார் பஸ் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற ஹைஹ -ஏஸ் வாகனம் மீது மோதியது. ஹைஹ -ஏஸ் வாகனம் முன்னால் சென்ற காரை மோதியது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நுணாவில் பொலிஸ் நிலையம் அருகில் நடந்தது.

முன்னால் சென்று கொண்டிருந்த கார் மட்டுவிலுக்குச் செல்வதற்காக சமிக்ஞை ஒளியுடன் திருப்புவதற்காக மெதுவாகச் செலுத்தியபோது ஹைஹ -ஏஸ் வாகனம் அதனைக் கண்டு வேகத்தைக் குறைத்தது.

வேகமாக வந்த பஸ் ஹைஹ -ஏஸ் வானை மோத அது காரை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்து தொடர்பாக மூன்று வாகனங்களின் சாரதிகளும் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர்.

வாகனங்களைத் திருத்துவதற்கான செலவை பொறுப்பேற்பதாக பஸ் சாரதி நீதிவான் முன்னிலையில் உறுதியளித்ததை அடுத்து சமாதானமாகச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ற-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவிக்கும் மாணவர் மீது பல மாணவரின் நன்மை கருதி நடவடிக்கை

## கண்டறிந்து அறிவிக்க வேண்டியது அதிபர், ஆசிரியர் கடமை

## பாடசாலைகளுக்கு யாழ். மேல் நீதிமன்று அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 25

பல மாணவர்களினதும் ஒழுக்கம், கல்வி, எதிர்காலம் என்பவற்றின் நலன் கருதி போதைப் பொருள் பாவனை குற்றச்செயல்களுக்காகக் கைது செய்யப்படும் மாணவர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுவார்கள். இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடும் மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுடைய பெற்றோருக்கும் அறிவித்து அவர்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டியது அதிபர், ஆசிரியர்களின் கடமை. அவர்களைப் பொலிஸாரின் ஊடாக நேரடியாகக் கண்காணித்து, கையும் மெய்யுமாகக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலில் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி உயரதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வருமாறு வடமாகாண கல்வி அமைச்சு செயலாளருக்கும், வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கும் இந்த அறிவுறுத்தல் அனுப்பப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ். நகரில் உள்ள பிரபல பாடசாலைகளின் சில மாணவர்கள் பாடசாலை நேரத்தில் பாடசாலை வளாகத்தில் மது அருந்துதல், புகைப் பிடித்தல், போதை கலந்த இனிப்புக்களை ருசித்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற னர் என்று மேல் நீதிமன்றுக்கு முறைப்பாடு கிடைத்தது.

அதற்கு அந்தப் பாடசாலைகளின் ஒரு சில ஆசிரியர்களும் ஒத்துழைப்பும், உதவியும் வழங்குகின்றனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்செயல்கள் இடம்பெறுகின்ற பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்கள், மதுபாவனை மற்றும் சிகரெட் பாவனை தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக இருந்த போதிலும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் இந்தக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அச்சமடைந்துள்ளனர் என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### ஆசிரியர் மீதான குற்றச்சாட்டுக்கள்

சமூக விரோதக் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக சட்டம் பின்வருமாறு அறிவுறுத்துகின்றது:

மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது சட்டரீதியாக பாரதூரமான குற்றம். ஆசிரியர்களே மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது மேலும் மோசமான குற்றமாகும்.

பாடசாலை மாணவிகள் மீது பாலியல் வதை அல்லது பாலியல் இம்சை புரியும் ஆசிரியர்களின் குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளியாகக் காணப்படுபவருக்குப் பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை விதிப்பதற்குச் சட்டம் பரிந்துரை செய்கின்றது.

பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வதைக் குற்றம் புரிந்த ஆசிரியரைக் காப்பாற்றுவதும் குற்றச்செயலாகவே கருதப்படும். சாட்சிகள், பாதிக்கப்பட்ட நபர்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமானது பாலியல் குற்றம் புரிந்தவர்களை காப்பாற்றும் நோக்கத்துடன் செயற்படுகின்ற அதிபர், ஆசிரியர்களை தண்டிக்கக்கூடிய குற்றத்தைப் புரிந்தவர்களாகவே கருதுகின்றது.

குற்றச்செயல் ஒன்று நடைபெற்றுள்ளது எனத் தகவல் அல்லது முறைப்பாடு கிடைத்தவுடன் அது பற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்காமல் அந்த ஆசிரியர் குற்றம் புரிந்தார் எனக் கருதி ஒழுக்காற்று விசாரணை நடத்துகின்ற அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச் செயல் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றின் மூலம் சட்டப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

பாலியல் வதை குற்றச் செயல்கள் நீதிமன்றத்தில் நீதிபதிகளாலேயே சமாதானமாக இணங்கி வைக்கமுடியாத குற்றச்செயல் என சட்டம் பரிந்துரைக்கின்றது.

பாலியல் குற்றம் புரியப்பட்டிருக்கின்றது என்று தெரிந்து கொண்டும் பொலிஸார் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்காமல் அதிபர், ஆசிரியர், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஒன்றிணைந்து சமாதானமாக இணங்க வைப்பதற்கு நடவடிக்கைஎடுத்தால், குற்றச்செயல்களுக்கு உதவியாக, உடந்தையாக இருந்த குற்றச்சாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். குற்றச்செயல்களை மறைப்பதற்கு உதவியாக, உடந்தையாக இருந்தமை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டப்படி என்ன செய்ய வேண்டும் என்பதையும் மன்று பின்வருமாறு தெரிவிக்கின்றது:

காலை 7 மணியிலிருந்து பிற்கல் 2 மணிவரையும் பாடசாலை மாணவிகள், அதிபர், ஆசிரியர்களின் அதிகார எல்லைக்குட்பட்ட பாடசாலையின் பாதுகாவலில் இருக்கின்றனர்.

அத்தகைய நேரத்தில் பாலியல் வதைக் குற்றம் ஒன்று ஆசிரியரால் புரியப்பட்டால் அந்த மாணவி எந்த ஆசிரியரிடம் எந்த அதிபரிடம் முறைப்பாடு செய்கின்றாரோ அவர் அந்த மாணவியின் பெற்றோருக்கு அதுபற்றி உடனடியாக அறிவித்து அந்த மாணவியைப் பெற்றோருடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று முறைப்பாடு செய்ய வேண்டியது சட்டத்தின் முதல் தேவையாகும்.

பாலியல் வதைக் குற்றம் சம்பந்தமாகத் தகவல் கிடைத்தவுடன் பாதிக்கப்பட்ட மாணவியை பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு அறிவுறுத்த வேண்டியது உயரதிகாரிகளின் கடமையாகும். இந்தச் செயற்பாடுகளின் பின்பே குற்றம் சுமத்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராக நிர்வாக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி அறிவிக்கப்படவேண்டும்.

சட்டரீதியான பொலிஸ் விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகளைத் தவிர்த்து ஒழுக்காற்று விசாரணைகளை நடத்துகின்ற அனைத்து அதிகாரிகள்கள் மீதும் பாலியல்வதை குற்றச் சம்பவத்தை அல்லது குற்றச் செயலை பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வதைக் குற்றச் செயலானது இரண்டு விதமான விசாரணைகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று பொலிஸ் நீதிமன்ற விசாரணையின் மூலமாக, குற்றம் புரிந்த ஆசிரியர் சிறையில் அடைக்கப்படுவது, இரண்டாவது நிர்வாக ஒழுக்காற்று விசாரணையின் மூலம் வேலையில் இருந்து இடை நிறுத்தப்படுவது. ஒழுக்காற்று விசாரணை என்ற போர்வையில் குற்றச்செயலில் ஈடுபட்ட ஆசிரியரை வேறு பாடசாலைக்கு இடம்மாற்றம் செய்யும் கல்வித்துறை உயர் அதிகாரிகள் தண்டனைக்குரியவர்கள் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலமைகளைப் பார்க்கும் போது யாழ். குடாநாட்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இயங்குகின்றதா? அவர்களின் பணிகள் என்ன? சிறுவர் நன்னடத்தை அதிரிகாரிகள் கடமை புரிகின்றார்களா? குடும்ப நல அதிகாரிகள் கடமையாற்றுகின்றார்களா? சிறுவர் பாதுகாப்பு அரச மட்ட திணைக்களங்கள் இயங்குகின்றனவா? என்ற சந்தேகம் எழுகின்றது.

மாணவர்கள் போராட்டம் நடத்தினால்தான் மாணவிகள் மீதான பாலியல்வதை குற்றச்சாட்டுக்கு உள்ளாகிய ஆசிரியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றநிலமை யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் போராட்டம் நடத்தாவிடின் கைதுகள் நடைபெற மாட்டாது என்ற நிலமையும் உருவாக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய அரச திணைக்களங்கள் ஒழுங்கு முறையாகக் கடமையாற்றியிருந்தால் இத்தகைய போராட்டங்கள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டது. குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் உரிய முறையில் கடமை புரியாத அனைத்து அரச அதிகாரிகளும் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள் என மன்று தெரிவிக்கின்றது - என்றுள்ளது. (ரு-4)

## பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

கரவெட்டிப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சமரபாகு, இமையாணன் போன்ற பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தி மாதிரி கிராமங்களில் பனம் கைப்பணி பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபையால் இந்த இரண்டு கிராமங்களும் பனம் உற்பத்தி மாதிரிக் கிராமங்களாக அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்த மாதிரிக் கிராமங்களில் சுமார் 250க்கும் மேற்பட்டோர் பனம் கைப்பணிப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இந்த மாதிரிக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் சுளகுகள் மற்றும் ஈர்க்கு கூடைகளுக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது. அவை கூடுதலாக தென்பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்த பனம் கைப்பணிப் பொருள்களை அதிக ஆர்வம் காட்டிப்பெற்றுச் செல்கின்றனர்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை குறைந்து செல்வதை அடுத்து கூடுதலானோர் பனம் கைப்பணி உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டுகின்றனர் என்று பனை அபிவிருத்தி சபை அதிகாரி ஒருவர் கூறினார். (ரு-17)

## இளைஞர் சேவைகள் மன்றங்களை சமூகநலனில் ஈடுபடுத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நாடளாவிய ரீதியில் ஆயிரத்து 500 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தவுள்ளன. இளைஞர் கழகங்கள் சமூக நலனில் அக்கறை செலுத்தி பொதுக்கிணறு துப்புரவாக்கல், பொது மலசலகூடம் அமைத்தல், திருத்தப்படாத பாதைகளைச் சீரமைத்துக் கொடுத்தல், டெங்கு பரவக்கூடிய சூழலை துப்புரவாக்கல் போன்ற பல சமூக வேலைத்திட்டங்கள் கோரப்பட்டுள்ளன. அவர்களின் திறனுக்கேற்ப பணப் பரிசில் வழங்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை [illegible] இளைஞர்களின் திறமை [illegible] கண்டு அவர்களுக்கு தேசிய மட்டத்தில் முதலாம் பரிசாக 4 மில்லியன் ரூபாவும் ஏனைய 10 வெற்றியாளர்களுக்கும் பணப்பரிசிலும் வழங்கப்படவுள்ளன.

இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தலைமை மூலம் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் பிரதேச செயலக ரீதியாக 25 அபிவிருத்திச் செயற்திட்ட முன்மொழிவுகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன. அந்த முன்மொழிவு அபிவிருத்தித் திட்டங்கள் பிரதேச செயலாளரைத் தலைமையாகக் கொண்ட குழுவால் பரிசீலிக்கப்பட்டு 5 செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் இந்த வேலைத்திட்டத்துக்காக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் வழங்கப்படும் 75 ஆயிரம் [illegible] நிதியையும், மிகுதி ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா சேகரித்த நிதியையும் கொண்டு 2 லட்சத்து 25 ஆயிரம்ரூபா பெறுமதியான 4 வேலைத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தில் மாவட்ட மட்டத்தில் சிறந்த 3 வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு மாகாண மட்டத்தில் 9 மாகாணங்களிலும் இருந்து தலா ஒரு திட்டம் என்ற வகையில் 9 திட்டங்கள் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்படும். இதில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டத்துக்கு 10 மில்லியன் ரூபா பரிசாகவும், ஏனைய 8 வேலைத் திட்டங்களுக்கும் தலா ஒரு மில்லி யன் ரூபா பரிசாகவும் வழங்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் 27ஆம் திகதி புதன்கிழமை இந்த வேலைத் திட்டத்துக்கான இறுதி நாளாகும். இது தொடர்பான மேலதிக விவரங்களை கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ரு-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார அதிகார சபைகள் தொடர்பாகச் சுற்றறிக்கை

அச்சுவேலி, ஜூலை 25

கலாசார அதிகார சபைகள் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் நிறுவப்படுகின்றன. கலாசார அதிகார சபைகளை உருவாக்குவது தொடர்பான சுற்றறிக்கையும், அதிகார சபைக்கான அமைப்பு விதியும் கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும், மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட ரீதியாக நிறுவப்படும் கலாசார அதிகார சபையின் பதவிக் காலம் மூன்று வருடங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் கலைஞர்கள் மற்றும் கலாசாரம் சார் பிரமுகர்கள் உறுப்பினர்களாக இணைந்து கொள்ளலாம்.

கலாசார அதிகார சபையில் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் பிரதேச செயலகப் பிரிவு கலாசார அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று முழுமைப்படுத்தி சமர்ப்பிக்கவேண்டும்.

பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகச் செயற்படும் கலாசார அதிகார சபையின் நிர்வாகிகளை உள்ளடக்கியதாக மாவட்ட ரீதியிலான கலாசார அதிகார சபைகள் நிறுவப்பட்டு வருகின்றன. (ற-11)

# பதின்ம வயதுச் சிறுமி வன்புணர்வு சந்தேகத்தில் குடும்பஸ்தர் கைது

## கைபேசி அறிமுகத்தால் வந்த வினை

தென்மராட்சி, ஜூலை 25

பதின்ம வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உட்டுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் குடும்பஸ்தர் ஒருவரையும், அவருக்குத் தங்குமிடம் கொடுத்து உதவினர் என்று தெரிவிக்கப்படும் தம்பதியையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது சாவகச்சேரி நீதிமன்று.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 16 வயதுச் சிறுமியொருவருக்கு தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தி அவரை பஸ்ஸில் கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்ற குறித்த குடும்பஸ்தர் அங்குள்ள வீடொன்றில் சிறுமியை வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

மகளைக் காணவில்லை என்று சிறுமியின் தாய் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு செய்திருந்தார்.

மறுநாள் காலையில் சிறுமி வீடு வந்தார். தொலைபேசியில் உரையாடிய இனந்தெரியாத நபர் அழைத்துச் சென்றார் என்று சிறுமி கூறியுள்ளார்.

தாய் உடனடியாக இது குறித்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டது உறுதியானதை அடுத்து பொலிஸார் குறித்த நபரையும், அவருக்குத் தங்குமிடம் கொடுத்த தம்பதியையும் கிளிநொச்சியில் கைது செய்தனர்.

வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்படும் குடும்பஸ்தர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம்மாலைகுறித்த நபருக்குத்தங்குமிடம் வழங்கிய தம்பதியினர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர். அவர்களையும் எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பதின்ம வயதுப் பிள்ளைகளுக்குக் கைபேசிகளை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் அவர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்காது இருப்பதாலேயே இவ்வாறான செயற்பாடுகள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான் சிறுமியின் பெற்றோரை எச்சரித்து சிறுமியை அழைத்துச் செல்ல உத்தரவிட்டார். (ற-9)

> " பதின்ம வயதுப் பிள்ளைகளுக்கு கைபேசிகளை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் அவர்களின் நடவடிக்கை களைக் கவனிக்காது இருப்பதாலேயே இவ்வாறான செயற்பாடுகள் நடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான் சிறுமியின் பெற்றோரை எச்சரித்து சிறுமியை அழைத்துச் செல்ல உத்தரவிட்டார். "

# சனசமூக நிலையங்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு இந்த ஆண்டுக்கான மானிய உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

அதற்கான விவரங்கள் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தால் திரட்டப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைக்குள் சிறப்பாக இயங்கும் சனசமூக நிலையங்களின் விவரங்களை அனுப்புமாறு உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தின் பதிவு இலக்கம், 2016ஆம் ஆண்டின் பொதுக்கூட்டம் நடந்த திகதி, தலைவர், செயலாளர் பெயர்கள், வங்கிக் கணக்கிலக்கம், 2015ஆம் ஆண்டு மானியம் பெறாவிட்டால் அதற்கான காரணம் போன்ற விவரங்கள் கோரப்பட்டுள்ளன என்று உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் தெரிவித்தார். (ற-9)

# பாடசாலையில் மீள இணைப்பதற்கு முயன்ற அதிகாரிகளுக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

பாடசாலைக்குச் செல்லாது வீட்டுக்குள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர், தேடிச் சென்ற அதிகாரி களை மிரட்டினர். அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

16 வயதுக் குட்பட்ட இரு மாணவர் களுக்கு எதிராக வழக்குப் பதிந்த பொலிஸார், 18 வயதுக்கு மேற்பட்ட ஏனைய இரு மாணவர்களுக்கும் தொழிற் பயிற்சி வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

யாழ். மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத்தலின்படி வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை பாடசாலையில் மீள இணைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விளான், சில்லாலைவடக்கு, சில்லாலை தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 132 வீடுகளில் அவர்கள் சோதனை நடத்தினர்.

அதில் பூட்டிய வீடொன்றுக்குள் ஆள் நடமாட்டம் இருப்பதை அவர்கள் அவதானித்தனர். உத்தியோகத்தர்கள் கதவைத் திறக்கக் கேட்டபோது, உள்ளிருந்தவர்கள் கதவைத் திறக்க மறுத்தனர். பொல்லைக் காட்டி மிரட்டினர்.

இது குறித்து உத்தியோத்தர்கள் இளவாலைப் பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் வீட்டுக்குள் இருந்தவர்களை வெளியே அழைத்து விசாரணை நடத்தினர்.

வீட்டுக்குள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தந்தையை இழந்தவர்கள். தாய் வேலைக்குச் சென்றிருந்தார். பொலிஸார் 16 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர். ஏனைய இருவருக்கும் தொழில் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

இந்தச் சோதனையின் போது பாடசாலைக்குச் செல்லாத 12 மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு பாடசாலைகளில் மீள இணைக்கப்பட்டனர். (ற-115)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் ஜூனில் 10,000 பேருக்குச் சிகிச்சை

சாவகச்சேரி, ஜூலை 25

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம் 10 ஆயிரத்து 110 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றனர். 816 பேர் விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றனர் என வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

அவர்களுக்கு வழங்கிய ஊசி மருந்து தவிர்ந்த நுண்ணுயிர் கொல்லி (அன்டி பெயாட்டிக்) மருந்துகளின் பெறுமதி அரச நிர்ணய விலைகளின் பிரகாரம் 3 லட்சத்து 40 ஆயிரம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நீரிழிவு நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட மெற்போலின் மாத்திரைகளின் பெறுமதி 92 ஆயிரம் ரூபா எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

அவற்றில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான மெற்போலின் மருந்துகள் நீரிழிவு கிளினிக்குகளில் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 04 . 1933



மறைவு
23 . 07 . 2016

### திருமதி புலோமினா இராயப்பு

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும். பற்றிமாவீதி. பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புலோமினா இராயப்பு 23.07.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேல் - பிலுப்பா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற நீக்கிலான் இராயப்புவின் பாசமுள்ள மனைவியும், மேரி கலிஸ்ரா. யஸ்ரின். பிரான்சிஸ். ரஞ்சன் (லண்டன்). யூஜிற்பவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும். சிங்கராஜா. சின்னமணி. அருந்தவராணி. யானு (லண்டன்). ஜெயா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், றொசிற்றா (லண்டன்). றொபின்சன் (லண்டன்). றொபாஜினி (லண்டன்). றொபேட் (லண்டன்). றொசிகலா (லண்டன்). யசீகரன் (லண்டன்). சேட்றூட். யூட்டொளிற்றா (லண்டன்). கிறிஸ்ரின்சுஜீம். ஜோசுவா. மில்கா. கிஷான். ஷாணியா (லண்டன்). பிரீத்தி. பிரவீன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். பிரியதர்ஷினி. டிஷோமியா. தவசீலன். ஜீவதர்ஷன் (லண்டன்). விமிஷா, றொக்ஷாலினி, றிஷான் (லண்டன்).றொக்ஷா. ஷாருஜா (லண்டன்). கபிரியேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.07.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கற்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு.
077 474 0798

தகவல்:
மருமகன் - ஜெயா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளின் முதலீட்டை அதிகரிப்பதே அரசின் இலக்கு

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25
வெளிநாட்டு முதலீடுகளை எதிர்காலத்தில் 5 மடங்காக அதிகரிப்பதே அரசின் இலக்கு.
இவ்வாறு மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.
இலங்கையின் அபிவிருத்திசவால்கள் என்ற தலைப்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் விசேட மாநாடு ஒன்று இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"தற்போதைய அரசின் சிறந்த வெளிநாட்டுக் கொள்கையைப் பயன்படுத்தி, சர்வதேசத்துடன் புதிய வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து முதலீட்டுச் சந்தர்ப்பங்களை அதிகரிக்கவுள்ளோம். ஏற்றுமதியை அதிகரித்து இலங்கையைப் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கின்றோம்" - என்றார். (ற-4)

# உயர்தரப் பரீட்சைக் குற்றங்களை தடுக்கப் புதிய திட்டங்கள் தயார்

## குற்றவாளிகளுக்கு 5 வருட பரீட்சைத் தடை விதிக்க நடவடிக்கை எடுத்தது திணைக்களம்

கொழும்பு, ஜூலை 25
க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் இடம்பெறக் கூடிய குற்றங்களைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை பரீட்சைகள் திணைக்களம் முன்னெடுத்தது.
சமூக தொடர்பாடல் வசதிகள் மற்றும் 'ஸ்மார்ட்' வகைக் கைக்கடிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

> சமூக தொடர்பாடல் வசதிகள் மற்றும் 'ஸ்மார்ட்' வகை கைக் கடிகாரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்கள் தொடர்பில் தனி அவதானம் செலுத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

'ஸ்மார்ட்' வகைத் தொடர்பாடல் வசதிகளைப் பரீட்சார்த்திகள் பயன்படுத்துவது அறியப்பட்டால் 5 ஆண்டுகள் பரீட்சை எழுதத் தடை விதிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.
அடுத்த மாதம் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை நாடு முழுவதும் 2 ஆயிரத்து 204 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. 2 லட்சத்து 40 ஆயிரத்து 991 உள்வாரியான பரீட்சார்த்திகளும், 74 ஆயிரத்து 614 வெளிவாரியான பரீட்சார்த்திகளும் அதில் தோற்றவுள்ளனர்.
பரீட்சைகள் அடுத்த மாதம் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. அந்தக் காலப் பகுதியில் உயர்தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள், கருத்தமர்வுகள் போன்றவற்றை நடத்தத் தடை விதிக்கப்பட்டது. (ற-4)

# போதைப் பொருள் தகவலைப் பெற தனிப் புலனாய்வுப் பிரிவு

## ஜனாதிபதி மைத்திரிபால தகவல்

சட்டவிரோத போதைப் பொருள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளப் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
பொலிஸார்மற்றும்மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிகமாக முப்படையினரிடம் விசேட தகவல் சேவை மற்றும் புலனாய்வுப் பிரிவு தனியாக நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளதுஎன்றும் அவர் கூறினார்.
"இந்த விடயம் தொடர்பில், நான் தேசிய பாதுகாப்பு சபைக்கு பணிப்புரை விடுத்தேன்" என்றும் ஜனாதிபதி கூறினார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.(ற-4)

# நடைபயணம் தொடர்பில் சு.கவினருக்கு பயம் வேண்டாம்

## -பந்துல

கொழும்பு, ஜூலை 25
கண்டியில் இருந்து ஆரம்பமாகவுள்ள நடைபவனி குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் குழப்பமடையத் தேவையில்லை என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன.
இந்த நடைபவனி அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# ஊழல் மோசடிகள் தொடர்பில் 13 வழக்குகள் மேல்நீதிமன்றில்

## சட்டமா அதிபர் திணைக்களம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 25
ஊழல் மோசடிகள் தொடர்பாகக் கடந்த காலங்களில் 13 வழக்குள் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.
இவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது.
சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய இது குறித்துத் தெரிவித்ததாவது:
பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
விசாரணைகள் தொடர்பான 30 அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டன.
இதற்காக நிபுணத்துவம் மிக்க சட்டத்தரணிகள் சேவையில் இணைக்கப்பட்டனர். விசாரணைகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும்.
சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுயாதீனத் தன்மைக்கு ஏற்ப, குறித்த அறிக்கைகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன - என்றார். (ற-4)

# நடைபவனியை நிறுத்துவதற்கு அரசு திட்டம்!

## - கெஹலிய

கொழும்பு, ஜூலை 25
அரசுக்கு எதிராக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் நடத்தப்படவுள்ள நடைபவனியை நிறுத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.
அதற்கான தடை உத்தரவை பொலிஸ் அல்லது மக்களை வைத்துப் பெற்றுக் கொள்ள அரசு திட்டமிடுகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல.
அதற்கு முகம்கொடுக்கத் தயாராக இன்று முதல் காலை 9 மணியில் இருந்து நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடையும் வரை சட்டத்தரணிகள் குழுவொன்று புதுக்கடை நீதிமன்றில் தயார் நிலையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற-4)

# மைத்திரி – ரணில் அரசை விரட்டி ஜே.வி.பி. அரசை உருவாக்குவோம்

## கட்சித் தலைவர் அநுரகுமாரவுக்கு இப்படி ஆசை

கொழும்பு, ஜூலை 25
மைத்திரி – ரணில் அரசை ஆட்சியில் இருந்து வெளியேற்ற வேண்டிய காலம் வந்துவிட்டது. நாட்டின் சொத்துக்களைச் சூறையாடியராஜபக்ச குடும்பத்தவர்கள் எவரும் மீண்டும் ஆட்சியமைக்கக்கூடாது. முற்போக்கு சக்திகளை இணைத்துக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணி புதிய அரசை ஏற்படுத்த வேண்டும்.
இவ்வாறு கூறினார் மக்கள் விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க.
தற்போதைய அரசியல் நிலமை தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தும் கூட்டம் மொறட்டுவவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
ஒன்றரை வருட காலம் என்பது எந்தவொரு அரசினதும் நல்லது, கெட்டது மற்றும் எங்கே செல்கின்றது என்பதை மதிப்பதற்குப் போதுமான காலமாகும்.
இந்த அரசு கடந்த ஒன்றரை வருடங்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பார்க்கும் போது நல்ல திசையை நோக்கி பயணிக்கவில்லை என்பது உறுதியாகிறது.
ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடம் ஏறினால், நாட்டின் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும் என்ற ஒரு கருதுகோல் இருக்கின்றது. இது மாயை என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டது.
தாம் ஆட்சி பீடம் ஏறினால் மக்களின் சட்டைப்பைகளை பணத்தால் நிரப்புவோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் உறுதியளித்திருந்தார். தற்போது அப்படி நிரம்பி யிருக்கின்றதா? ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் பத்து லட்சம் பேருக்கு



தொழில் வழங்கப் படும் என்று உறுதியளித்தனர். அப்படியானால் இன்னும் ஒன்பது லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவோம் என்று தானே இப்போதும் கூறவேண்டும். ஆனால் இன்னும் பத்து லட்சம் பேருக்குத் தொழில் என்றே அரசு கூறுகின்றது.
நாட்டுக்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய உடன்படிக்கையொன்றை இந்தியாவுடன் செய்துகொள்ள அரசு திட்டமிட்டது. சர்வதேச நாணய நிதியத்துடன் அனைத்து நலன்புரி நடவடிக்கைகளையும் நீக்கும் வகையில் மிகவும் மோசமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடன்களை பெறவும் திட்டமிட்டது.
இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரச சேவையில் இணையும் அரச ஊழியர்களின் ஓய்வூதியத்தை அரசு நீக்கியிருக்கின்றது. உரமானியத்தை அகற்றியுள்ளது. பாடசாலை சீருடைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மக்கள் மீது வற் வரியை திணித்துள்ளது.
இந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் பிரதான இரு அரசியல் கட்சிகளும் இணைந்து அமைத்த தேசிய நல்லாட்சி அரசின் செயல்கள்தான் இவை. நல்லாட்சி அரசுக்கு ஆட்சியை கொண்டுநடத்த இடமளிக்கக் கூடாது. அதனால் மாற்று அரசு ஒன்றைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்கு எழுந்துள்ளது. ஆனால், அந்த அரசு எது என்பதை நாம் தெளிவாக தீர்மானிக்க வேண்டும்.
மீண்டும் மகிந்த மற்றும் அவரது சகாக்கள் அடங்கிய கொள்ளைக்கார அரசா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். அரச சொத்துக்களை சூறையாடிய குடும்பமே மகிந்த ராஜபக்ச குடும்பம். அதனால் அந்தக் குடும்பத்திலிருக்கும் எவருக்கும் ஆட்சியைக் கைப்பற்ற இடமளிக்கமுடியாது. மக்கள் விடுதலை முன்னணியும், முற்போக்குச் சக்திகளும் இணைந்து நாட்டில் ஆட்சியை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது - என்றார்.
(ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறைசேரி வருமானத்தைப் பெருக்க புகை, மதுபான காசு அவசியமில்லை

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 25
புகைத்தல் மற்றும் மதுசாரம் என்பவற்றால் கிடைக்கும் வருமானத்தால் மாத்திரமே திறைசேரியின் பொருளாதாரத்தை பலப்படுத்தலாம் என்ற கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இலங்கை மது ஒழிப்புச் சபையின் 104 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் சில நாள்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது நாட்டின் திறைசேரி வருமானத்தில் சிகரட் மூலம் வருடத்துக்கு 55 பில்லின் ரூபா கிடைக்கின்றது. மதுசாரம் போன்ற போதைப்பொருள்களால் 60 பில்லியன் வருடாந்த வருமானமாக வருகின்றது. இந்த போதைப் பொருளின் வருமானத்தால்தான் திறைசேரியைப் பலப்படுத்தலாம் என்ற கொள்கையில் காணப்படும் திறைசேரி அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்களின் கருத்துக்கு நான் ஒருபோதும் உடன்படமாட்டேன். உடனடியாக, மதுவையும், சிகரட்டையும் நீக்கும் சட்டத்தைக் கொண்டுவந்தால், இதற்கு அடிமையானவர்கள் அடுத்த நாள் வீதியில் இறங்கி அரசை மாற்றிவிடுவார்கள். இதனைச் செய்வதற்கு ஒரு சரியான முறைமையொன்று தேவை. அதனால் தான் பொறுமையாக முன்னேற வேண்டி இருக்கிறது. - என்றார்.

# மக்கள் குறை கேட்ட ரோபோ பிரேமதாச

கொழும்பு, ஜூலை 25
முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் மத்தியில் செல்வதற்காக அவரைப் போன்ற உருவத்தை ஒத்த இயந்திர மனிதனை பயன்படுத்தினார் என்று அவரது செயலாளர் கூறினார்.

கொழும்பில் வெளிவரும் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாச இதனைக் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச நேரடியாக மக்களிடம் சென்று அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து அவற்றை தீர்த்து வைக்கும் ஒரு மக்கள் தலைவனாக மிகவும் பிரபல்யமடைந்திருந்தார். அதற்காக நடமாடும் சேவையொன்றையும் அவர் முன்னெடுத்திருந்தார்.

"பல வேலைப்பளுக்களுக்கு மத்தியில் நெருக்கடியான சூழ்நிலையை அவர் எதிர்கொண்டிருந்ததால் மக்களைச் சந்திக்க முடியாத சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. அதனால் மக்கள் மத்தியில் அதிருப்தி தோன்றிய நேரத்தில் அவரை ஒத்த இயந்திர மனிதனை அறிமுகப்படுத்தினார்" என்று பிரேமதாசவின் செயலாளர் கே.எச்.ஜே. விஜயதாச கூறுகின்றார்.

"மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்வதற்காக அவர் தன்னைப்போன்ற உருவ வடிவமைப்பைக் கொண்ட இயந்திர மனிதனை உருவாக்கி, அதனை தனது அதிகாரிகளின் உதவியுடன் மக்கள் மத்தியில் அனுப்பினார்" என்று அவர் தெரிவித்தார்.

குறித்த ரோபோ இயந்திரத்தில் ரணசிங்க பிரேமதாசவின் குரல் பதிவு செய்யப்பட்டிருந்தது. மக்களிடம் அந்த ரோபோ செல்லும்போது கதைக்கக் கூடிய வகையிலும், கைகளை அசைக்கக்கூடிய விதத்திலும் வடிவமைக்கப்பட்டிருந்தது என்றும் கே.எச்.ஜே.விஜயதாச கூறினார்.

மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிவதற்காக இயந்திர மனிதனிடத்தில், உங்கள் குறை என்ன? அதனை என்னிடம் எழுத்துமூலம் தாருங்கள். விரைவில் அதற்கு பதில் அளிக்கப்படும் என்று பிரேமதாசவின் குரல்பதிவு செய்யப்பட்டிருந்தது என்றும் அவர் கூறினார். (ற-4)

# மது, புகைத்தல் இல்லாத ஜனாதிபதி, பிரதமர்

– தேரர் புகழாரம்

கொழும்பு, ஜூலை 25
மது, புகைத்தல் போன்றவற்றிலிருந்து விலகியுள்ள எமது நாடு, நல்வழிப்படுத்திய ஜனாதிபதியையும், பிரதமரையும் கொண்டிருப்பது பெரும் பாக்கியமாகும்.

இவ்வாறு கோட்டே ஶ்ரீ கல்யாணி சாமக்ரி தர்ம சபையின் மகா நாயக்கர் கலாநிதி இத்தேபானே தம்மால்கார நாயக்க தேரர் தெரிவித்தார்.

மது ஒழிப்புச் சபையின் 104 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசு 'போதைக்கு முற்றுப்புள்ளி' என்ற திட்டத்தை முன்னெடுத்தது.

கோடிக்கணக்கான நிதியை செலவழித்தது. அதன் பயன் என்ன? இதைக்கூறும்போது சிலருக்குக் கஷ்டமாக இருக்கும் - என்று தேரர் தெரிவித்தார். (ற-4)

# அதிக பயணிகளை ஏற்றும் பஸ்களின் மீது நடவடிக்கை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 25
ஆசன எண்ணிக்கைக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றும் அரைச் சொகுசு பஸ்களுக்கு எதிரான நடவடிக்கை நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இந்தத் தகவலைத் தெரிவித்தது.

இந்த ஆணைக்குழுவின் தலைவர் எம்.பி.ஏ.ஹேமச்சந்திர தெரிவித்ததாவது:

போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனையை மீறி அரைச் சொகுசு பஸ்களில் அதிகளவான பயணிகள் ஏற்றப்படுகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இரவு நேர சேவையில் ஈடுபடும் பஸ்கள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்தன. அதிகமாகப் பயணிகளை ஏற்றும் பஸ்களின் நடத்துநருக்கும், சாரதிக்கும் தற்காலிகத் தடை விதிக்கப்படும். மேலதிகமாக ஏற்றும் ஒரு பயணிக்கு ஒருநாள் தற்காலிக நீக்கம் என்ற அடிப்படையில் தடை விதிக்கப்படும். மேலதிகமாக ஏற்றப்படும் ஒவ்வொரு பயணிக்கும் தலா 100 ரூபா என்ற அடிப்படையில் பஸ் உரிமையாளரிடம் தண்டம் அறவிடப்படும் - என்றார். (ற-4)

# காலாண்டில் மின்சார சபைக்கு 5, 718 மில். ரூபா நட்டம்

கொழும்பு, ஜூலை 25
இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை மின்சார சபைக்கு 5 ஆயிரத்து 781 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது என்று நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

2016ஆம் மத்திய ஆண்டு அரச நிதி நிலமை குறித்த அறிக்கை அண்மையில் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது குறித்த நட்டம் மின்சார சபைக்கு ஏற்பட்டது. ஒரு கிலோ வோட் மணித்தியால மின்சக்திக்கான உற்பத்திச் செலவினம் 2 ரூபா 47 சதத்தால் அதிகரித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# அரசின் கட்டுப்பாட்டு விலைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை

## நுகர்வோர் உரிமையை பாதுகாக்கும் தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 25
சில அத்தியாவசியப் பொருள்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலை எந்தவொரு பொருளாதார மத்திய நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று நுகர்வோர் உரிமையை பாதுகாக்கும் தேசிய அமைப்பு குற்றஞ்சாட்டியது.

நாடு முழுவதும் உள்ள மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியன மாத்திரம் நுகர்வோர் அதிகார சபையால் சோதனைக்கு உட்படுத்தபடுகின்றன என்று அந்த அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே கூறினார்.

பொருளாதார மத்திய நிலையங்களைச் சோதனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நுகர்வோருக்கு நியாய விலையில் பொருள்களை வழங்குவதற்கே என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ற-4)



# அபிவிருத்தியால் சிறு குழுவுக்கு அச்சம்

கொழும்பு, ஜூலை 25
தற்போதைய அரசின் அபிவிருத்தி வழிமுறைகளால் ஒரு சிறிய குழு அச்சத்துக்கு உள்ளாகியுள்ளது என்று நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்தார்.

அந்தக் குழு நாட்டின் அபிவிருத்திக்கு தடையேற்படுத்தி வருகின்றது என்றும் அவர் கூறினார்.

கொழும்பு - புளுமெண்டல் மாவத்தை, புனித அந்தோனியார் கல்லூரியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரவி கருணாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். (ற-4)

# பழனி திகாம்பரம் ஐ.தே.கவுடன் இணைவார்!

கொழும்பு, ஜூலை 25
பழனி திகாம்பரம், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு இணக்கம் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் பதவி வகிக்கிறார். அவரது இந்த இணைவு குறித்து பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (ற-4)

# ஆசனப்பட்டிகள் அணிவது ஓட்டோவுக்கும் கட்டாயம்

## சட்டம் கொண்டுவர ஆலோசனை

கொழும்பு, ஜூலை 25
ஓட்டோ தொடர்பில் பாதுகாப்பு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய கவுன்ஸிலுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஓட்டோக்களுக்கும் ஆசனப்பட்டி அணியும் நடைமுறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஓட்டோ சாரதிகளுக்கு ஆசனப்பட்டி அணிவதைக் கட்டாயமாக்க சட்டம் கொண்டுவர அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டு எதிரணியினரின் வயிற்றில் புளி கரைக்கும் அரசின் செயற்பாடு

**1960** ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி கண்டது. எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க படு கொலை செய்யப்பட்டமையால் தற்காலிக பிரதமராகப் பதவி வகித்தவரான விஜயானந்த தஹநாயக்க, ஒரு சிறு உடுப்புப் பெட்டியைக் கையில் காவியபடி, அலரி மாளிகையிலிருந்து வெளியில் வந்து பொதுப்போக்குவரத்து பஸ் ஒன்றில் ஏறி நேராகத் தமது சொந்த ஊரான காலியைச் சென்றடைந்தார். இரண்டு தடவைகள் மக்களால் தோற்கடிக்கப்பட்ட இன்றைய தலைவர் போன்று அவர் அன்று நடந்து கொள்ளவில்லை. "பனிஸ் மாமா" என்று பொதுமக்களால் அழைக்கப்பட்டவரான தஹநாயக்க ஒரு முறை மக்களின் பொருளாதார நிலைமை எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, நாடாளுமன்றத்துக்கு கௌபீனத்துடன் (கோவணம்) சென்று கலகலப்பு ஏற்படுத்தி பிரசித்தி பெற்றிருந்தவர். இந்த விடயத்தை அண்மையில் ஆங்கிலப் பத்திரிகையொன்று சுட்டிக்காட்டி இன்றைய தலைவர்கள் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பதவி ஆசையைச் சாடியிருந்தது.

மக்கள் அளிக்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் ஜனநாயகவாதிகளாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். மேற்கு நாடுகளில் இந்தப் பண்புமிக உன்னதமாகப் பேணப்படுவதைப் பார்க்கிறோம். ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் உறுப்புரிமை வகிக்க வேண்டுமா என்ற கருப்பொருளின் மீதான கருத்துக்கணிப்பின்போது, அந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தவரான பிரதமர் டேவிட் கமரூன், மக்கள் தீர்ப்பை ஏற்றது மட்டுமன்றி, தனது கருத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளாமையானது, தாம் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும் கணித்து பிரதமர் பதவியையே உதறித் தள்ளிவிட்டார் என்பது அண்மைக்கால நிகழ்வு - வரலாறு. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2015 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்றது மட்டுமல்ல, அதன் பிறகு நடந்த பொதுத் தேர்தலிலும் பிரதம மந்திரி பதவியைக் கோரிப் போட்டியிட்டும் தோல்வி கண்டார். இருந்தும் பதவி மோகம் அவரை விட்டு வைக்கவில்லை. ஏற்கனவே ஜனாதிபதியாக இரண்டாம் முறையும் பதவியில் இருந்தபோது எதிர்க் கட்சிகளில் இருந்த உறுப்பினர்களுக்கு பதவி ஆசைகளைக்காட்டி, தம் பக்கம் இழுத்து தொடர்ந்தும் பல தடவைகள் அந்தப் பதவிக்குப் போட்டியிடும் வகையில் அரசமைப்பை மாற்றிக் கொண்டவர் இவர்.

அடுத்து வரப்போகும் தேர்தல்களிலும் பிரதமர் பதவிக்காகப் போட்டியிட அவர் தயாராகி வருவது மட்டுமல்ல, அதை விரைவாக சாதித்து விடுவதற்காக இப்போதைய நல்லாட்சி அரசை எவ்வாறாயினும் கவிழ்த்துவிட கங்கணம் கட்டிச் செயற்படுகின்றார். இதற்கு அவர் தலைமையில் வரும் 28 ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்பு நோக்கி கூட்டு எதிரணியினர் நடத்தவிருக்கும் பெரும் எடுப்பிலான பேரணியை சுட்டிக் காட்டலாம். இந்தப் பேரணியும் அதனையொட்டி நடைபெறவிருக்கும் கூட்டங்களும் வெற்றிகரமாக நிறைவேறும் என்று அதன் ஏற்பாட்டாளரான மகிந்தானந்த அளுத்கமகே அறிக்கை விடுத்துள்ளார்.

இந்த அரசு மிக விரைவில் கவிழ்ந்து விடும்-கவிழ்க்கப்பட்டு விடும் என்பதற்கு கட்டியம் கூறும் வகையிலேயே கண்டி-கொழும்பு பேரணிப் பயணத்தை அவர்கள் கருதுவதாக அவதானிகள் கூறுகிறார்கள். இதில் அவர்கள் தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூறவிருக்கும் விடயங்களில் அரசின் புதிய அரசமைப்பு முயற்சிகளை முறியடிப்பதற்கான கருத்துக்களே முக்கியமான ஒன்று.

இலங்கைத் திருநாட்டை நெடுங்காலமாகச் செல்லரித்து வரும் தேசியப்பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை இப்போதைய இந்த அரசின் முயற்சிகள் பெற்றுத்தரும் தர வேண்டும் என்று தமிழ் முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல, சிங்களவர் மத்தியிலுள்ள நாட்டின் எதிர்கால நலன் கருதிச் செயற்படும் பெரும்பாலான மக்களும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஆனால், அது நாட்டை பிரிவினைக்கு இட்டுச் செல்லும் எனவும் அதற்கான சதிமுயற்சியே இப்போது நடக்கிறது என்றும் எதிரணியினர் இப்போதே கூறத் தலைப்பட்டுவிட்டார்கள். இதற்கிடையில் பதவியில் இருக்கும் கூட்டாட்சியின் பிரதான இருகட்சிகளும் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரமே இணைந்து செயற்படுவது என்று செய்து கொண்டிருந்த புரிந்துணர்வு உடன்பாட்டை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடித்துக் கொள்வதாக வந்திருக்கும் செய்தி ஆட்சிமாற்றத்தை உருவாக்கியவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாகவிருக்கும், அதன்மூலம் பல நல்ல காரியங்கள் நடந்தேறவாய்ப்பு ஏற்படுவது நிச்சயம் எனலாம். ஆனால் ஆட்சி கவிழ்ப்புக்கு அடித்தளம் இட்டுச் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இது குறிப்பாக மகிந்தசார்பு கூட்டு எதிரணியினரின் வயிற்றில் புளி கரைத்தமைக்கு ஒப்பாகும் என்று கூறத் தேவையில்லை.



எம்.ஐ.முபாறக்

இந்த அரசின் செயற்பாடுகள் சில வெறுக்கக்கூடியவையாக இருக்கின்றபோதிலும், பல விடயங்கள் வரவேற்கக்கூடியவையாகவே இருக்கின்றன. குறிப்பாக, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்கள் பாராட்டுக்குரியவையாகும். இந்த ஆட்சி உதயமான உடனேயே அது 19 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தமை ஜனநாயகத்தை இந்த அரசு எவ்வளவு தூரம் மதிக்கின்றது

> அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்ததால் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் இனிமேல் அவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் ஆட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர்.

என்பதைக் காட்டியது. இவை முழுமையாக இல்லாவிட்டாலும் மகிந்த அரசுடன் ஒப்பிடுகையில், இந்தச் செயற்பாடுகள் வியக்கத்தக்கவை என்றே சொல்ல வேண்டும். மகிந்த அரசில் ஜனநாயகம் என்ற சொல்லுக்கே இடமில்லாமல் இருந்த நிலைமையுடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால் பெரும் மாற்றம் இருப்பதை உணரலாம். அதேபோல், தமிழர்களின் உரிமைகளை மதித்து – அவர்கள் கடந்த காலங்களில் அனுபவித்த துன்பங்களைக் கருத்தில்கொண்டு அவர்களுக்காகப் பல விடயங்களை இந்த அரசு செய்துவருவதையும் நாம் அவதானிக்கின்றோம். அந்த வகையில், காணாமற்போனோர் விவகாரத்துக்கு ஒரு முடிவைக்காணும் நோக்கில், அரசு இப்போது காணாமற்போனோர் என்ற பெயரில் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு முடிவெடுத்துள்ளது. அதற்கான சட்டவரைவு இப்போது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பலவந்தமாகக் காணாமற் போவதைத் தடுக்கும், சர்வதேச பிரகடனத்தில் இலங்கை அரசு கடந்த வருடம் டிசம்பர் மாதம் நியூயோர்க்கில் வைத்துக் கைச்சாத்திட்டத்தைத் தொடர்ந்துதான், இந்தச் சட்டவரைவு இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழர்கள் சார்பாக இந்த அரசு எதைச் செய்தாலும் அதை இனவாதக் கண்கொண்டு பார்க்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் நடவடிக்கையையும் அவ்வாறுதான் பார்க்கின்றார். காணாமற்போனோரின் விவகாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் இந்த நகர்வை அவர் இராணுவத்துக்கு எதிரான நகர்வாகச் சித்திரித்துள்ளார். இராணுவத்தினரைப் பழி வாங்குவதற்காகவே இந்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளது என்று உளறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மகிந்தவின் ஆட்சியில் தான் அதிகம் இடம்பெற்றன என்பதற்காகத்தான், இந்த அலுவலகத்தை அவர் எதிர்க்கின்றாரோ என்று எண்ணவும் தோன்றுகிறது.

காலத்துக்குக்காலம் இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்து வந்த இரண்டு பிரதான கட்சிகளின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வந்தமை உண்மை. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், இந்த இரண்டு கட்சிகளின் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைப் பட்டியல்போட்டுக்கொண்டே போகலாம். தமிழர்களுக்கு எதிரான ஜூலைக் கலவரம், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் எனப் பல கொடுமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக உரிய முறையில் தண்டனை வழங்கப்படாமல் காலம் உருண்டோடி விட்டது.

ஆனால், அண்மைக் காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்ததால் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் இனிமேல் அவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் ஆட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டு வெளிப்பட்டுவிடும் என்று அஞ்சுகிறாரோ?

குறிப்பாக, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போதும் அதனை முழுப் போரை ஒட்டியதாகவும் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது.

இந்த இறுதிக் கட்டப் போரின்போது அப்பாவித் தமிழர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலதரப்பட்ட பிரிவினர்கள் காணாமற் போயுள்ளனர், கடத்தப்பட்டுள்ளனர் மற்றும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அந்தக் காலப்பகுதியில் வெள்ளைவான் என்ற சொல் மிகவும் பிரபல்யமானதாக இருந்தது. இலங்கையில் இடம்பெற்ற அனேகமான கடத்தல் சம்பவங்களுக்கு இந்த வான்கள்தான் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு கடத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பவங்கள் மகிந்தவின் ஆட்சியில்மலிந்துகாணப்பட்டன.

அவரது ஆட்சிக் காலத்தின் போதே அவற்றுக்கு எதிராக உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் குரல்கள் எழுப்பப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் ஒன்றுக்கும் மகிந்த அரசு பொறுப்பேற்காதது மாத்திரமன்றி, அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்பது போலவே கருத்துக்களையும் வெளியிட்டு வந்தது. சிலர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகவும் குடும்பப் பிரச்சினை காரணமாகவும் ஒளிந்துகொண்டு கடத்தப்பட்டதாக நாடகமாடுகின்றனர் என்று மகிந்த அரசு கூறியது. அத்தோடு, சில பெண்கள் காதலித்து ஓடிப்போவதும், காணாமற்போதல் பட்டியலில் சேர்க்கப்படுகின்றது என்று மகிந்த அரசு பொறுப்பற்ற வித்தத்தில் கூறியதையும் நாம் மறக்கவில்லை.

கடத்தல் மற்றும் காணாமற்போதல் சம்பவங்களை இவ்வாறு மறுத்ததோடு மாத்திரமன்றி, உண்மையா? அல்லது பொய்யா? எனத் தேடிப் பார்ப்பதற்குக் கூட அரசு முயற்சி செய்யவில்லை. குற்றச்சாட்டு ஒன்று எழுகின்றபோது, அதை எடுத்த எடுப்பில் மறுக்காமல், அது தொடர்பில் தேடிப்பார்த்து பதிலளிக்கின்ற ஒரு சாதாரண தார்மீகப் பண்புகூட மகிந்த அரசிடம் இருந்ததில்லை.

இதனால் கடத்தப்பட்ட மற்றும் காணாமற்போனவர்களின் உறவினர்கள், பொது அமைப்பினர் மற்றும் சர்வதேச சமூகத்தினர் போன்றோர் இதற்கு எதிராக நீதி கேட்டு சர்வதேச நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால், சர்வதேசம் இதில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

சர்வதேசத்தின் எந்தவொரு கரிசனையையும் அழுத்தங்களையும் கவனத்தில் எடுக்காமல் மகிந்த இருந்தமையால் கடத்தல் மற்றும் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரிக்கவே செய்தன. அரசுக்கு எதிராக எவர் பேசுகிறார்களோ? எவர் எழுதுகிறார்களோ? அவர்கள் கடத்தப்படுவதும் கொல்லப்படுவதும் நிச்சயிக்கப்பட்ட நிகழ்வுகளாக இருந்தன.

பொதுவாக, ஊடகவியலாளர்களால் அரசுக்கு எதிராக வாய் திறக்கவே முடியவில்லை. அவ்வாறு மீறித் திறந்த தால்தான் ஊடகவியலாளர்கள் லசந்த விக்கிரமதுங்க, தராக்கி போன்றவர்கள் கொல்லப்பட்டனர். 'உதயன்' பல தடவைகள் மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது. பிரதீப் எக்னெலிகொட கடத்தப்பட்டார். இன்னும் பலஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டனர், மிரட்டப்பட்டனர்.

இது ஊடகங்களுக்கு ஏற்பட்ட கதி. அதே போல், எத்தனையோ அப்பாவித் தமிழர்கள் காணாமற்செய்யப்பட்டனர். சர்வதேசத்துக்கு அஞ்சாது - பின் விளைவுகளைப்பற்றி யோசிக்காது இந்தக் கொடுமை தொடர்ந்தது.

ஆனால், மகிந்த அன்றும் சரி, இன்றும் சரி, அவ்வாறான சம்பவங்கள் எவையும் இடம்பெறவில்லை என்பது போலவே காட்டிக்கொள்கிறார். அது தொடர்பாகத் தேடிப் பார்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்போது, அதற்கு இனவாதச் சாயம் பூசுகிறார். படையினரை அரசுக்கு எதிராகத் திருப்பிவிடும் சதியைச் செய்கிறார். தனது குட்டு வெளிப்பட்டுவிடும் என்று அவர் அஞ்சுகிறார் என்பதாகவே இதை எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கின்றது.

எது எப்படியோ அரசு காணாமற்போனோர் விவகாரம் தொடர்பில் அதன் கடமையை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். கடந்தவருடம் நியூயோர்க்கில் செய்துகொள்ளப்பட்ட சர்வதேச பிரகடனத்தின் பிரகாரம், எதிர்காலத்தில் காணாமற்போவதைத் தடுப்பதோடு, இதுவரைக் காணாமற்போனவர்களைக் கண்டு பிடிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது அமைக்கப்படவுள்ள அலுவலகம் வெறும் கண் துடைப்பாக - சர்வதேசத்தை ஏமாற்றும் செயலாக அல்லாது அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றே காணாமற் போனோரின் உறவினர்கள் விரும்புகின்றனர்.

> **"தமிழர்கள் சார்பாக இந்த அரசு எதைச் செய்தாலும், அதை இனவாதக்கண் கொண்டு பார்க்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும் நடவடிக்கையையும் அவ்வாறுதான் பார்க்கின்றார். காணாமற்போனோரின் விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்த நகர்வை அவர் இராணுவத்துக்கு எதிரான நகர்வாகச் சித்திரித்துள்ளார். இராணுவத்தினரைப் பழிவாங்குவதற்காகவே இந்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளது என்று உளறியுள்ளார். காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் மகிந்தவின் ஆட்சியில் தான் அதிகம் இடம்பெற்றன என்பதற்காகத்தான் இந்த அலுவலகத்தை அவர் எதிர்க்கின்றாரோ என்று எண்ணவும் தோன்றுகிறது."**

## ஜூலைப் படுகொலை ஒரு நினைவு தினமில்லை!

இறுதிப் போரில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி, நினைவுத் தூபி என்று மே மாதத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் அரசியல்வாதிகளாலும் கட்சிகளாலும் முன்னெடுக்கப்படுகின்றன. நிகழ்வில் கலந்துகொள்ள அரசியல்வாதிகள் முண்டியடித்துக்கொண்டு ஓடிப்போகிறார்கள். அவற்றின் ஒளிப்படங்களும் அடுத்த நாள் பத்திரிகையில் வெகு விமரிசையாக வெளிவருகின்றன. ஆனால் இந்தப் பேரழிவுக்கு வித்திட்ட முதன்மைக் காரணிகளில் ஒன்றான ஜூலைக் கலவர தினம் பற்றி அரசியல்வாதிகளிடமிருந்தோ வேறு எவரிடமிருந்தோகூட எந்தவொரு அசுமாத்தத்தையும் காணவில்லை.

ஜூலைக் கலவரத்தில் காவுகொள்ளப்பட்டவர்கள் தமிழர்கள் இல்லை என்று வடக்கு - கிழக்கிலுள்ள மத்திய, மாகாண அரசியல்வாதிகள் எண்ணி விட்டார்கள் போலுள்ளது. அதனால்தான் ஜூலைக் கலவர நினைவு நாள் என்று ஒன்றைப் பற்றி அவர்கள் அலட்டிக்கொள்ளவேயில்லை. பத்திரிகைகள் தம் கடமைக்கு ஒரு கட்டுரையுடன் முடித்துக் கொண்டன.

நாம் மறந்துவிட்டோம். ஜூலையை மறந்து அதற்காக நீதி கேட்காமல் இப்போது எம்மால் இருக்க முடியுமாயின், இன்னும் சில காலத்தின் பின்னர் இறுதிப் போர் அழிவுகளையும் படுகொலைகளையும் கூட மறந்து விடுவோம். பிறகேன் நாம் போர்க்குற்ற விசாரணையையும், நீதி, பொறுப்புக்கூறலையும் கேட்கிறோம்? காலப் போக்கில் எல்லாமும் மறக்கப்படக் கூடியவை, எட்டிக் கடந்துவிடக் கூடியவை என்பதைத்தானே கண்டுகொள்ளாமல் விடப்பட்ட ஜூலை 23ஆம் திகதி எடுத்துக்காட்டுகிறது. அன்று உயிரிழந்தவர்களுக்காக ஓர் அகல் விளக்காவது கொளுத்தப்படவில்லை என்றால், முள்ளிவாய்க்காலில் மட்டும் ஏன் நினைவுத் தூபி? எது வேண்டும் என்பதை அரசியல்வாதிகளே நன்றாகச் சிந்தித்துச் செயற்படுங்கள். வார்த்தைகளில் மட்டும் அரசியல் செய்தால் உங்களை வரலாறு மன்னிக்காது. நினைவுகளின் வரலாறும் அரசியலுமே என்றும் நிரந்தரமானது. புரிந்து செயற்படுங்கள்.

**குணம், மல்லாகம்.**

## குற்றவாளிகள் பெருகிக்கொண்டே போகிறார்களா?

செய்தித் தாள்களில் தினமும் வரும் செய்தி கஞ்சா கடத்தல் முறியடிப்பு, சந்தேக நபர் கைது. இடைக்கிடை வரும் செய்திகள் கசிப்புக் காய்ச்சியவர் கைது, கசிப்பு உற்பத்தியிடம் கைப்பற்றல் மற்றும் மரம், மணல் கடத்திய வாகனம் கைப்பற்றல். இந்தச் செய்திகளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு ஒரு சந்தேகம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. பொலிஸார் குற்றவாளிகளைக் கைதுசெய்யக் கைதுசெய்ய குற்றவாளிகள் பெருகிக் கொண்டே போகிறார்களா? எப்படி இது போன்ற குற்றங்கள் மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன?

பிடித்த பொருள்களுடனும் சந்தேகநபர்களுடனும் ஊடகங்களுக்கு காட்சி கொடுக்கும் பொலிஸ் அலுவலர்களுக்கும், நீதித்துறைக்கும் மட்டுமே இந்த மர்மத்தின் உண்மை தெரிந்திருக்க நியாயம் உண்டு. அதை உதயன் பத்திரிகை எங்களுக்கும் விளங்க வைத்தால் நியாயம் உண்டு.

**மணிகண்டன், கோண்டாவில்.**

## சங்கானை பிரான்பற்று வீதியின் பள்ளம் நிரப்பப்படுமா?

சங்கானை பிரான்பற்று வீதி தற்போது வடக்கு மாகாணசபையின் நிதி மூலம் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வீதியில் மழைகாலத்தில் நீர்தேங்கி நிற்கக் கூடிய பள்ளம் ஒன்று உள்ளதால் சங்கானைச் சந்தைக்குத் தமது விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாமல் விவசாயிகளும், பாடசாலைக்குச் செல்வதில் மாணவர்களும், சங்கானை வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் பெரும்சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே வீதி அதிகார சபையினர் இந்த வீதியில் உள்ள பள்ளத்தைப் பார்வையிட்டு கண்டக் கல் இட்டு குறித்த 50 அடி பள்ளத்தை நிரப்ப வேண்டும் என பொதுமக்கள் சார்பாக வேண்டி நிற்கின்றோம்.

**கு.குணஸ்ரீ.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிஉச்சவெப்பம் குவைத்தில் பதிவு



குவைத், ஜூலை 25
உலகில் இதுவரை இல்லாத அளவு குவைத்தில் அதியுச்ச வெப்ப நிலை பதிவாகியது. கடந்த வியாழக்கிழமை குவைத்தில் 54 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதியப்பட்டது. கிழக்கு அரைக்கோளப் பகுதியில் இவ் வாறான உயர் வெப்ப நிலை இதுவரைபதியப்படவில்லை.

வானியல் ஆராய்ச்சி மையத்தின் தகவலில், கடந்த வாரம் மத்திய கிழக்கு நாடுகளில் கடும் வெப்பம் தாக்கியது என தெரிவிக்கப்பட்டது. அதே தினத்தில், ஈராக்கின் புராதன நகரான பஸ்ராவில் 53.9 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதியப்பட்டது.

1913ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 56.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை கலிபோர்னியாவில் பதியப்பட்டது.

ஆனால், இந்தப் பதிவை விஞ்ஞானிகள் சாதனைப் பதிவாக ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தக்கால கட்டத்தில் இருந்த சாதனங்கள் மிகத் துல்லியமான வாசிப்பை ஏற்படுத்தி இருக்கமாட்டா என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். குவைத்தில் தற்போது பதியப்பட்ட வாசிப்பு உலக சாதனைப்பதிவாக கருதப்படுகின்றது. (ற-ரி4)



சீனாவில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில், உயிரிழந்தவர்களின் எ
124 பேர் காணாமற்போயினர். வெள்ளம் தொடர்பான போதிய எச்சரிக்கையை வழங்க
பேர் வீடுகளை விட்டு வெளியேறினர்.

# கட்டுக்கடங்காது பரவுகின்றது கலிபோர்னியாவில் காட்டுத் தீ

## 20 ஆயிரம் ஏக்கர் நிலம் நாசம்



வொஷிங்டன், ஜூலை 25
அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் கடும் காட்டுத் தீ பரவுகின்றது. லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்களை வீடுகளை விட்டு உடனடியாக வெளியேறுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம்வரை சுமார் 20 ஆயிரம் ஏக்கர் பகுதி தீயில் நாசமாகியது. சன்ரா கிளரீட்டா நகரில் இருந்து 300 பேர் வெளியேற்றப்பட்டனர்.

வேகமாக வீசும் காற்றால் தீ கட்டுக்கடங்காது பரவி வருகின்றது. 900 தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்படுத்த முயன்று வருகின்றனர். அவர்களுக்கு உதவியாக உலங்கு வானூர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆயிரம் வீடுகள் ஆபத்தில் உள்ளன என்று அங்குள்ள தீயணைப்புப் படை அதிகாரி தெரிவித்தார். அங்குள்ள வன விலங்குக் காப்பகத்தில் இருந்து இதுவரை 400 விலங்குகள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-ரி4)

# இரண்டு கைகளைப் பொருத்தி மருத்துவர்கள் சாதனை





லண்டன், ஜூலை 25
இரு கைகளையும் இழந்தவருக்கு வேறு இரு கைகளைப் பொருத்தி சாதனை படைத்தனர் பிரிட்டன் மருத்துவர்கள். இவ்வாறான அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கைகளை இழந்த 57 வயதான கிறிஸ்கிங்என்பவரேபுதியகைகளைப் பெற்றுக் கொண்டார்.

சீமோன் கே என்ற வைத்தியர் இந்த அறுவைச் சிகிச்சைக்குத் தலைமை வகித்தார். லீட்ஸ் என்ற மருத்து நிறுவனத்தால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட இரண்டாவது உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை இதுவாகும். "எனது கைகள் கிடைத்தது மகிழ்ச்சியளிக்கின்றது. கச்சிதமாக எனது கைகள் பொருந்தியுள்ளன" என்று தெரிவித்தார் கிறிஸ் கிங். (ற-ரி4)

# மாய

# தேடு

புதுடில்லி, ஜூலை. 2
சென்னையில்இருந்
காலை 8.30 மண
போது காணாமற
இராணுவ விமானத்
நடைபெறுகின்றது.
தமிழக வீரர் உள்ள
குறித்து தகவல் எது
காணாமற்போன வி
இஸ்ரோவிடம் உத
இஸ்ரோ தரும் செ
படங்கள் விமானத்
யாக இருக்கும். விமா

# பொலிஸ் தாக்கி இளைஞர் சாவு; எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்



பாரிஸ், ஜூலை 25
பிரான்ஸின் பரிஸ் நகரின் வட பகுதியில் பொலிஸாரின் விசாரணையின் போது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் 4 நாள்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர். அரச வாகனங்களுக்கு தீவைத்தனர். இந்தச் சம்பவங்களில் 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 4 பொலிஸார் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 24 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் பொலிஸ் விசாரணையில் உயிரிழந்தார். குறித்த இளைஞர் கடும் காயங்களால் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று கூறப்படுகின்றது. பொலிஸார் தாக்கியதில் தனது சகோதரன் உயிரிழந்தார் என்று உயிரிழந்தவரின் சகோதரி கூறினார்.

சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். ஆர்ப்பாட்டத்தை அடக்கப் பொலிஸார் களமிறக்கப்பட்டதை அடுத்து மோதல்கள் ஏற்பட்டன. அவை வன்முறைகளாக மாற்றமடைந்தன. (ற-ரி4)



அமெரிக்காவி
கேளிக்கை நி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதுவரை 154 பேர் உயிரிழந்தனர். ழங்க அதிகாரிகள் தவறிவிட்டனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.3 லட்சம் (ற-ரி4)


## மனிதக் குண்டு தாக்குதலில் ஈராக்கில் 12 பேர் உயிரிழப்பு

பக்தாத், ஜூலை 25
ஈராக்கில் நேற்று நடத்தப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர். வடக்கு பாக்தாத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பாதுகாப்புத் தரப்பினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.
ஷியாப் பிரிவு முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள சோதனைச் சாவடி ஒன்றுக்கு அருகில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. உயிரிழந்தவர்களில் மூவர் பொலிஸார். ஏனையோர் பொதுமக்கள். தாக்குதலில் 32 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ற-ரி4)

# காற்றுச் சுத்திகரிப்புக் கருவி நெதர்லாந்தில் கண்டுபிடிப்பு

## பீஜிங்கில் பொருத்த சீனா முடிவு

லண்டன், ஜூலை 25
நெதர்லாந்தைச் சேர்ந்த ரோசெகார்டே என்பவர் காற்றுச் சுத்திகரிப்புக் கருவியை தயாரித்தார். இந்தக் கருவி 23 அடி உயரம் கொண்டது.
மிகச் சிறிய அளவிலான அடுக்குமாடி கட்டடத்தைப் போன்று வடிவம் உடையது. அதன் உள் பகுதியில் புகையை உறிஞ்சும் தொழில் நுட்பங்களுடன் கூடிய கருவிகள் பொருத்தப்பட்டன. அவை ஒரு கால்பந்து மைதான அளவு உள்ள இடத்தில் 36 மணி நேரத்தில் 70 முதல் 80 சதவீதம் வரையிலான மாசுபட்ட காற்றை வெளியேற்றி சுத்தம் செய்து புதிய காற்றாக தருகிறது. இந்தக் கருவியை அதிக அளவு காற்று மாசுபட்டுள்ள பீஜிங்கில் நிறுவ சீனா முடிவு செய்தது. எதிர்வரும் செப்ரெம்பரில் அங்கு இந்தக் கருவி நிறுவப்பட உள்ளது. அதைத் தொடர்ந்து சீனாவின் மிகப் பெரிய நகரங்களிலும், அடுத்த ஆண்டில் இக்கருவி நிறுவப்பட உள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. (ற-ரி4)




# யமான இந்திய விமானத்தை டும் நடவடிக்கையில் இஸ்ரோ

லை. 25
ல் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை 0 மணிக்கு அந்தமான் சென்ற னாமற்போன ஏ.என்-32 ரக மானத்தைத் தேடும் பணி தொடர்ந்து ன்றது. அதில் பயணம் செய்த உள்ளிட்ட 29 பேரின் நிலமை ல் எதுவும் அறியப்படவில்லை. ான விமானத்தைக் கண்டுபிடிக்க ் உதவி கோரப்பட்டது.
ம் செயற் கைக்கோள் புகைப் மானத்தைக் கண்டுபிடிக்க உதவி . விமானத்தைத் தேடும் பணியில் அதிகமான கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன. "விமானப்படை விமானங்கள், உலங்கு வானூர்திகள், கடலோர காவல்படை கப்பல்கள் விமானத்தைத் தேடும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன" என்று இந்திய கடற்படையின் கிழக்கு பிராந்திய தலைவர் பிஷ்ட் தெரிவித்தார்.
செயற்கைக் கோள் புகைப்படங்களை நாம் ஆய்வு செய்கின்றோம். நுண் அலைத் தொழில் நுட்பம், மற்றும் இதர வசதிகளைப் பயன்படுத்தி, தேடுதல் முயற்சிகள் நடத்தப்படவுள்ளன. இயற்கை இடரை அவதானிக்கும் காட்டிகளையும் பயன்படுத்தவுள்ளோம்.- என்று இஸ்ரோ தலைமை அதிகாரி கிரண்குமார் கூறினார். நேற்று வானம் மேகமூட்டமின்றி தெளிவாக இருந்ததால், விமானத்தைத் தேடும் பணி முழு வீச்சில் நடைபெற்றது என்று கடலோர காவல்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
விமானப்படை விமானம் மாயமானது தொடர்பாக தாம்பரம் அருகேயுள்ள சேலையூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. ஏ.என்-32 விமானம் குறித்தும் விமானத்தில் சென்றவர்கள் தொடர்பாகவும் தாம்பரம் விமானப்படை தளத்தில் உள்ள அதிகாரிகளிடம் சேலையூர் பொலிஸ் பொறுப்பதிகாரி விசாரணை நடத்துகின்றார். (ற-ரி4)



க்காவின் கலிபோர்னியா நகரில், திரைப்பட விசித்திர கதாபாத்திரங்களின் அணிவகுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. கலாசார கை நிகழ்வாக இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வைப் பார்வையிட 6 ஆயிரத்து 500 பார்வையாளர்கள் வந்திருந்தனர். (ற-ரி4)

# 4,500 வருடங்கள் பழைமையான எழுத்துருக்கள் கண்டு பிடிப்பு



கைரோ, ஜூலை 25
எகிப்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கிட்டத்தட்ட 4 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழைமையான எழுத்துருக்களைக் கண்டுபிடித்தனர். இது அந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழைமை வாய்ந்த எழுத்துருக்கள் எனத் தெரிவிக்கப்பட பார்வோன் குபு ஆட்சிக்காலத்தில் (2589 கி.மு 2566 கி.மு.) பிரமிட்டை கட்டிய வேலையாள்கள் அன்றாட தகவல்களை இது கொண்டிருக்கின் என்று கருதப்படுகின்றது.
இந்த ஆவணங்கள் 2013ஆம் ஆண்டு வடி ஜார்ப் கோட்டையினருகேயுள்ள குகைத் தொடர்க பிரே ரலட் மற்றும் சாயித் மாபோஸ் எனும் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டிரு ஆனால் அவை தற்போது அதிகாரபூர்வ வெளியிப்பட்டன.
இந்தச் சுவடுகளைப் பார்க்க இதுவரை எ அனுமதிக்கப்படவில்லை. இதன் 30 பக்க எகிப்து அருங்காட்சியகத்தில் பார்வைக் வைக்கப்படவுள்ளன. இதில் பொறிக்கப்பட் தகவல்கள் எகிப்து அக்காலத்தில் எவ்வாறு செய்யப்பட்டது என்றும், எவ்வாறு பிரமிட் பட்டது என்பவை பற்றிக் கூறுகின்றன.
இந்த ஆவணங்கள் குபு ஆட்சிக்காலத்தின் மிக மையான நிர்வாகத்தையே காட்டி நிற்கின் எத்தனை வேலையாள்கள், அவர்களுக்கு கப்பட்ட கூலிகள் சம்பந்தப்பட்ட விடயங்களும் உள்ளன. (ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி?

குரு ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18 ,ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு மாறுகிறார். கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார், அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளைப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் -இடபம்,சிம்மம்,விருச்சிகம்,மகரம்,மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுப பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.



## மேடம்

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம் வரை

மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லும் மேடராசி அன்பர்களே!

தைரியமும், தன்னம்பிக்கையும் மிக்கவர்கள் நீங்கள். தானாக வலியச் சென்று உதவும் மனம் கொண்டவர்கள். வீணாகப் பணத்தைச் செலவழிக்க விரும்பமாட்டீர்கள். போனால் போகட்டும் என்று மன்னிக்கும் பக்குவமும் உங்களுக்கு உண்டு. எந்த ஒரு காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கும் திறமை பெற்றவர்கள். உங்களுக்கு உடல் வலிமையாக இருக்கிறதோ, இல்லையோ உள்ளம் வலிமையாக இருக்கும். கடல்போல் பரந்த மனம் பெற்றிருப்பதால், தன்னைச் சார்ந்தவர்களும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்கள். ஆணையிடக் கூடிய தொழில், அதிகாரம் செய்யும் தொழில் போன்றவற்றில் உங்கள் மனம் லயிக்கும். பூமிகாரகன் செவ்வாய் உங்களின் ராசிநாதனாக இருப்பதால், மண் ஆளக் கூடியவர்கள் நீங்கள்.

தளராத உறுதியும், தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றிக் கொள்ளும் ஆற்றலும் பெற்ற உங்களுக்கு, சப்தமாதிபதி சுக்ரனின் பலத்தைப் பொறுத்தே வாழ்க்கைத் துணையும், வருமானமும் அமைகின்றது. புதனின் பலத்தைப் பொறுத்தே உத்தியோக அமைப்பா? இல்லை தொழிலா? என்பதை நிர்ணயிக்க முடிகின்றது. உங்களுக்கு ஆடி 18இல் வரும் குருப்பெயர்ச்சி தேடி வந்து நற்பலன்களைக் கொடுக்குமா? என்பதைப் பார்ப்போம்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான், ஓகஸ்ட் 2ஆம் திகதி முதல் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். குரு வந்திருக்கும் இடமோ ஆறாமிடம். அவரது பார்வை பதியும் இடங்களோ 2, 10, 12 ஆகிய இடங்கள். ஆறிலே குரு வந்தால் ஊரிலே பகை என்பது பழமொழி. அதனால் நட்பெல்லாம் பகையாகிவிடுமோ என்று கவலைப்படவேண்டாம். விதிக்கப்பட்ட விதியின் கடுமையைக் குறைப்பது வழிபாடுகளும், பரிகாரங்களும்தான். எனவே உங்கள் ஜாதகத்தை ஒரு முறை புரட்டிப் பாருங்கள். உங்களுக்கோ, உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ, குரு இருக்குமிடம் அறிந்து அதைப் பார்க்குமிடம், பாதசார பலமறிந்து அதற்குரிய சிறப்பு பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்தால் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப்பிடிக்க இயலும்.

பொதுவாக ஆறாமிடம் எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் இடமாகும். அதுமட்டுமல்லாமல் வழக்குகள், வீண்பழிகள், இடையூறு சக்திகள், மனக்கவலை, அலைச்சல் போன்ற பிரச்சினைகளையும், மறைமுகப் பிரச்சினைகளையும் ஆறாமிடத்தின் வாயிலாக அறிய முடியும்.

அப்படிப்பட்ட வலிமையான இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயத்தைக் கண்டிப்பாகக் கொடுப்பார். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும். உற்சாகமும், தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

உங்கள் ராசிக்கு 9,12க்கு அதிபதியானவர் குரு. அவர் 6இல் சஞ்சரிக்கும் பொழுது சீறும் குணத்தை மாற்றி, சிரிக்கும் குணத்தைக் கைப்பற்றிக் கொள்ளுங்கள்.


(தொடரும்)

# முன்னேற்றப் பாதை

## பெஞ்சமின் பிராங்ளின்

மூர்த்தி

இறப்புக்குப் பின்னரும் மக்கள் உங்களை மறக்காமலிருக்க வேண்டுமா? படிக்கத் தகுதியான புத்தகங்களை எழுதுங்கள். அல்லது புத்தகங்களில் எழுதப்படத் தகுதியான காரியங்களைச் செய்யுங்கள்.
- பெஞ்சமின் பிராங்ளின்



பதினேழாம் நூற்றாண்டு. அமெரிக்காவின் பாஸ்டன் நகரம். ஜோசையா என்பவர் தன் வீட்டில் குடிசைத் தொழிலாக சோப், மெழுகுவர்த்திகள் தயாரித்து விற்று வாழ்க்கையை ஓட்டி வந்தார். வருமானம் குறைவானாலும், வாரிசுகளுக்குப் பஞ்சமில்லை. இரண்டு மனைவிகள், பதினேழு குழந்தைகள். பெஞ்சமின் பதினைந்தாவது குழந்தை. எட்டு வயதில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினார்கள். பையனுக்குக் கற்பூரப் புத்தி. ஆனால் ஏனோ, கணிதம் மட்டும் மூளையில் ஏறவேயில்லை.

"படித்து என்ன கிழித்து விடப்போகிறான்?" அப்பா படிப்பை நிறுத்தினார். தன் சோப், மெழுகுவர்த்தி தயாரிப்பில் உதவியாளாக வைத்துக்கொண்டார்.

பெஞ்சமினுக்கு பன்னிரண்டு வயதானது. அண்ணன் ஜேம்ஸ் நடத்திய அச்சகத்தில் எடுபிடி வேலைக்குச் சேர்க்கப்பட்டான். அச்சகத்தில் பிரசுரமாகும் அத்தனையையும் படிப்பான். அடுத்தபடியாக வீட்டில் இருந்த புத்தகங்களையும் படிப்பான். அறிவுத் தாகம் தீரவில்லை. ஊரில் இருந்த துறைமுகத்துக்கு அடிக்கடி போவான். அங்கே வரும் பயணிகள், மாலுமிகளிடம் அவர்கள் படித்து முடித்த பழைய புத்தகங்களைக் கெஞ்சிக் கேட்டு வாங்குவான். புரிந்தாலும், புரியாவிட்டாலும், ஆர்வத்துடன் படித்து முடிப்பான். அச்சுக்கோர்க்கும், கட்டுரைகள் எழுதும் அளவுக்கு அவன் திறமை வளர்ந்தது. வீட்டில் அவனைப்பற்றி யாருமே கவலைப்படவில்லை. ஆகவே, பெஞ்சமினின் திறமைகள் பற்றி யாருக்குமே தெரியாது.

1721. பெஞ்சமினுக்கு வயது 15. பாஸ்டன் நகரிலிருந்து அப்போது இரண்டு நாளிதழ்கள் வெளியாகிக் கொண்டிருந்தன. அவை வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை மறுவெளியீடு மட்டுமே செய்துகொண்டிருந்தன. பெஞ்சமினின் அண்ணன் சாமர்த்தியசாலி. உள்ளூர்ச் செய்திகளை வெளியிடும் செய்தித்தாளைத் தொடங்கினார். விற்பனை சூடு பிடித்தது.

பெஞ்சமின், அண்ணனின் இதழில் கட்டுரைகள் எழுத விரும்பினார். அண்ணனுக்கோ, தம்பி பள்ளிக்கூடமே போகாத அடிமுட்டாள் என்ற நினைப்பு. ஆகவே, தன் படைப்புகளைப் படிக்காமலேயே, குப்பைக் கூடைக்குள் கடாசி விடுவார் என்று பெஞ்சமினுக்குப் பயம். ஆகவே, சைலன்ஸ் டூகூ - என்னும் புனைபெயரில் எழுதத் தொடங்கினார். கட்டுரையை எழுதி, இரவில் அச்சகத்தின் கதவுக்கு வெளியே வைத்துவிடுவார். அண்ணன் படித்தார், ரசித்தார். யார் எழுதினால் அவருக்கென்ன? நல்ல கட்டுரை ஓசிக்குக் கிடைக்கிறது. தொடர்ந்து வெளியிட்டார். பெண்ணுரிமைக்காக ஒரு பெண் வாதாடும் பாணியில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைகளுக்கு வாசகர்களிடம் எக்கச்சக்க வரவேற்பு.

ஒரு நாள். பெஞ்சமினின் குட்டு வெளிப்பட்டது. அண்ணன் என்ன செய்தார்? கட்டிப் பிடித்து, உச்சி மோர்ந்தாரா? இல்லை. இல்லை. பொறாமையால் கொதித்தார். திட்டினார், அடித்தார், உதைத்தார். உடலிலும், மனதிலும் தாங்கமுடியாத வலிகள்.

பெஞ்சமினுக்குப் பதினேழு வயதானது. அண்ணன் எப்போதுமே தன்னை அடிமையாகத்தான் நடத்துவார், சிறகு விரிக்க அனுமதிக்கமாட்டார் என்று தெளிவாகத் தெரிந்தது. அப்பாவிடம் முறையிட்டார். அவர் தலையிட மறுத்துவிட்டார். தன் தலைவிதியைத் தானேதான் நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் என்று பெஞ்சமினுக்குத் தெரிந்தது. பாஸ்டன் நகரில் இருந்த பிற அச்சகங்களில் வேலை தேடினார. (தொடர்ச்சி 23 பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களின் கனவை நனவாக்க வருகிறது நெடுந்தாரகை

**லக்ஸ்மன்**

நெடுந்தீவு மக்கள் அனுபவித்துவரும் கடற் போக்குவரத்துத் துன்பங்களில் இருந்து தமக்கு விடிவு தேவை என எதிர்பார்த்துக் காத்திருப்பது பல தசாப்தங்களாக நடக்கிறது. மக்களின் துன்பங்களுக்கு ஒருமுடிவு தேவை என வற்புறுத்தாத எவருமே அங்கு இல்லை எனலாம். அந்த அளவுக்கு முக்கியம் மிக்க கடற் பயணத்துக்கு விடிவு கிடைக்கும் வகையில் 'நெடுந்தாரகை' அடுத்த ஜனவரியில் நெடுந்தீவுக் கடலைக் கிழித்துச் செல்ல உதயமாகப் போகிறது என்ற செய்தி மக்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சியான ஒன்றாகும்.

டொக்யாட் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகிக் கொண்டிருக்கும் 'நெடுந்தாரகை', எதிர்வரும் டிசெம்பர் முதல் வாரத்தில் மாகாண சபையிடம் கையளிக்கப் படவுள்ளது. படகைக் கட்டுவதற்கான பணிகள் தற்சமயம் இடம் பெற்றுவருகின்றன. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே இந்தப் படகைக் கட்டுவதற்கான நடவடிக்கைகளுக்காக நெல்சிப் திட்டத்தில் நிதி கிடைத்திருந்தபோதும் அந்த வேலைத்திட்டம் தடைப்பட்டிருந்தது.

மக்கள் தமது போக்குவரத்துச் சேவைக்கு ஒரு நல்ல தீர்வு தேவை என்பதை அடிக்கடி வலியுறுத்திக் கொள்வதால், மாகாணசபை இந்த விடயத் துக்கு முக்கியத்துவம் கொடுத்து புதிய படகைக் கட்டுவதற் கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. உலக வங்கி மக்களுக்கு ஒரு உன்னதமான சேவையை வழங்கும் வகையில் ஏற்கனவே வழங்கிய நிதியிலும் பார்க்கக் கூடுதல் நிதியை இதற்கென வழங்கியுள்ளது. ரூபா 150 கோடி செலவில் புதிய படகைக் கட்டுவதற்கான பணிகள் கடந்த 8.02.2016 செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக ஜூன் 7ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன. 'நெடுந்தாரகை' ஒரு கப்பலுக்கு இணையான அனைத்து சாதனங்களையும் உள்ளடக்கியதாக உருவாகிறது. வடதாரகைப் படகைவிட நவீன வசதிகள் கொண்ட இந்தப் படகு 22 மீற்றர் நீளமும் 5.2 மீற்றர் அகலமும் கொண்டது இது முற்று முழுதாக உருக்கினால் செய்யப்பட்ட படகாகும். இந்தப் படகைக் கட்டுவதற்கு முன்னர் ஆறு பேர்கள் கொண்ட கடல் தொடர்பான பாஸ் மெற்றிக் சேவையர்கள் கடலின் அலை, காற்றுக் காலங்களின் நிலமைகள், காற்றின் அடிக்கடி மாறும் தன்மைகள் என கடல் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கமைவாக படகை வடிவமைத்தனர். கண்ணாடி இழையிலான படகுகள் நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக் கூடியதல்ல என்பது நிபுணர்களின் கருத்து. அதனாலேயே இந்தப் படகு உருக்கினால் அமைக்கப்படுகின்றது. குமுதினி போன்ற இரண்டு படகுகளை இந்தத் தொகைக்கு கட்டியிருக்கலாம் என்பதும் நெடுந்தீவு மக்களிடையே உள்ள கருத்தாகும். எனினும் நல்ல மரங்கள் கிடைக்கும் சூழ்நிலை இல்லை. அதனால் உருக்கைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாண முதலமைச்சர் நெடுந்தீவு மக்களுக்கு ஒரு நல்ல வசதியான படகை வழங்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளார். அவரது நோக்கத்துக்கு அமைவாக அனைத்து வசதிகளையும் கொண்ட படகு ஒன்றைத் தருவிப்பதில் உலக வங்கியும் உறுதுணையாகவே உள்ளது. நெல்சிப் திட்டத்தின் பெறுகை நிபுணரும் பொறியியலாளருமான வே.த.இராஜவரதன் நெடுந்தாரகையின் வேலைகள் குறித்து தினமும் டொக்யாட் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கண்காணித்து வருகிறார்.

80 இருக்கைகளைக் கொண்ட 'நெடுந்தாரகை' ஒரு கப்பலுக்குரிய அனைத்து நிலைகளையும் கொண்டிருக்கும். படகு மூன்று அல்லது நான்கு மீற்றர் கடலுள் மூழ்கக்கூடிய நிலையில், அதற்குள் இருந்தபடியே உரிய இடங்களுக்குத் தொடர்புகொள்ள முடியும். கடலில் உள்ள ஆழப் பாறைகள் தடைகள் இருப்பின் அதற்கான சமிக்ஞைகள், கரைகளை அவதானிப்பதற்கான வெளிச்ச வசதிகள், இரண்டு சிறிய பாதுகாப்புப் படகுகள், சட்டலைட் தொடர்புகள், எந்தப் பகுதியில் படகு சிக்கலை எதிர்கொள்கிறது என்பதை அறிவிக்கக்கூடிய வசதிகள் அனைத்தும் கொண்டதாகவே நெடுந்தாரகை உருவாக்கப்பட வேண்டும் என்பதில் உலக வங்கி உறுதியாக உள்ளது. இந்தப் படகு ஒரு மீற்றர் கடல் ஆழத்திலும் மிதக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் 65 தொன் எடை

> **கண்ணாடி இழையிலான படகுகள் நெடுந்தீவுக் கடலைச் சமாளிக்கக் கூடியதல்ல என்பது நிபுணர் களின் கருத்து. அதனாலேயே இந்தப் படகு உருக்கினால் அமைக்கப்படு கின்றது. குமுதினி போன்று இரண்டு படகுகளை இந்தத் தொகைக்கு கட்டியிருக்கலாம் என்பதும் நெடுந்தீவு மக்களிடையே உள்ள கருத்தாகும். எனினும் நல்ல மரங்கள் கிடைக்கும் சூழ்நிலை இல்லை. அதனால் உருக்கைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.**
> **வடக்கு மாகாண முதலமைச்சர் நெடுந்தீவு மக்களுக்கு ஒரு நல்ல வசதியான படகை வழங்க வேண்டும் என் பதில் குறியாக உள்ளார்.**

கொண்டது. பொது மக்கள் தமது பயணப் பொதிகளுடன் தடைகளின்றிப் பயணிக்கக் கூடியதாக அமைக்கப்படுகிறது. படகின் வேகம் அதிகரிக்கப்பட வாய்ப்பில்லை. கொந் தளிக்கும் கடலில் மிகவும் வேகமாகச் செல்வது தவிர்க்கபட வேண்டும் என்பதால் நெடுந்தாரகையின் நெடுந்தீவு - குறிகாட்டுவானுக்கான பயணநேரம் முக்கால் மணித்தியாலமாகவே இருக்கும். நவீன தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய நெடுந்தாரகைக்கென ஐந்து படகு ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டு, உரிய பயிற்சிகள் வழங்கப் படவுள்ளதாகவும் பெறுகை நிபுணர் இராஜவரதன் தெரிவித்தார். நெடுந்தீவைச் சேர்ந்தவர்களே படகில் ஊழியர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் ஒப்புக்கொண்டார். படகின் அனைத்து கட்டுப்பாடுகளும் வடக்கு மாகாண சபையிடமே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நெடுந்தீவு பிரதேச சபையின் கண்காணிப்பு நெடுந்தாரகைக்கு உண்டு என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப்படகுச் சேவை குறித்து வடக்கு மாகாண சபையின் உறுதியான கட்டுப்பாடுகள் அவசியம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பென்சில் மனசு

தன்னைப் பெயர் சொல்லி அழைத்தது எவராக இருக்கும் என்று பார்த்த ராமுவுக்கு, ஆச்சரியம். அலுமாரி அருகே சென்று, "பொம்மைகளே, நீங்களா அழைத்தீர்கள்?" என்று கேட்டான்.

"ஆமாம். எங்களை அலுமாரியில் பத்திரமாக எடுத்து வைத்தாய். அந்தப் பென்சிலை மட்டும் மேசை மீது வைத்துவிட்டுப் போகிறாயே, பென்சிலிடம் நாம் கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றன" என்றது கரடி பொம்மை.

"சாதாரண பென்சிலிடம் கற்றுக்கொள்ள என்ன இருக்கிறது?" எனக் கேலியாகச் சிரித்தான் ராமு.

"எவரையும் எளிதாக நினைத்துவிடாதே. பென்சிலை எழுத, எழுத அதன் முனை மழுங்கிவிடும். அப்போது, தன்னைக் கூர்மை செய்தால்தான் இன்னும் தெளிவாக எழுதமுடியும் என்பதை உணர்ந்து, வலியைப் பொறுத்துக்கொள்கிறது. அதுபோல, நமது வாழ்வில் வரும் துன்பங்களைப் பொறுத்துக்கொண்டால்தான், சிறந்த மனிதனாகலாம்" என்றது முயல் பொம்மை.

"சரிதான்" என்றான் ராமு.

"பென்சில் தவறாக எழுதிவிட்டால், அழிப்பதற்கு அனுமதிக்கிறது. தான் எழுதியதே சரி என்று சொல்வது இல்லை. அதுபோல, நாம் அறிந்தோ, அறியாமலோ தவறுகள் செய்துவிட்டால், ஒப்புக்கொள்ள வேண்டும்" என்றது கிளி பொம்மை.

"இதுவும் சரிதான்" என்றான் ராமு.

"பென்சிலைச் சுற்றி மரக்கட்டையால் மூடப்பட்டு, வண்ணம் கொடுக்கப்படுகிறது. ஆனால், உள்ளே இருக்கும் கிராஃபைட் கரியால்தான் எழுத முடியும். அதுபோல, வெளித்தோற்றத்தை விட உனக்குள் இருக்கும் திறமையும் தன்னம்பிக்கையுமே வெற்றிகளைத் தீர்மானிக்கும்" என்றது புலி பொம்மை.

ராமுவின் முகத்தில் புன்னகை.

"பென்சில், தவறாக எழுதியதை எவ்வளவு அழித்தாலும், ஒரு சின்னத் தடத்தையாவது விட்டுச் செல்லும். அதுபோல, வாழ்வில் நாம் செய்யும் தவறு, ஏதேனும் ஒரு பாதிப்பை உருவாக்கலாம். எனவே, ஒவ்வொரு நிமிடமும் எச்சரிக்கையுடன், தவறுகள் இன்றி இருக்கப் பழக வேண்டும்" என்றது யானை பொம்மை.

"அற்புதம்" என்றான் ராமு.

குரங்கு பொம்மை, "இறுதியாக, ஒன்றை நான் சொல்கிறேன். பென்சிலை நேராகப் பிடித்தாலும், சாய்த்துப் பிடித்தாலும் அது தன் கடமையில் இருந்து விலகாமல் எழுதும். அதுபோல, எத்தகைய இடையூறுகள் வந்தாலும், உன் கடமையில் இருந்து விலகாமல் துணிவோடு செயலாற்ற வேண்டும்" என்றதும், ராமு பலமாகக் கைதட்டினான்.

"ராமு... ராமு என்னாச்சு?"

யாரோ தன்னை உலுக்குவதை அறிந்த ராமு, சட்டென்று கண் விழித்தான். அவன் முன்னே அம்மா நின்றிருந்தார்.

தான் இதுவரை கண்டது கனவு எனப் புரிந்தது. பொழுது நன்றாக விடிந்திருந்தது. ராமு எழுந்து சென்று மேசையில் பார்த்தான். நேற்று, தன் பிறந்தநாள் பரிசாக, நண்பன் குமார் கொடுத்த நீல நிற பென்சில் அங்கே இருந்தது. மற்ற நண்பர்கள் பரிசாகக் கொடுத்த விலை அதிகமான பொம்மைகளைப் பெருமையாக அலுமாரியில் வைத்தேன். குமார் கொடுத்த பென்சிலை மேசை மீதே வைத்துவிட்டேன். பென்சிலும் மதிப்புமிக்கதே எனப் புரிந்துகொண்டவனாக அந்தப் பென்சிலைச் சீவிக் கூர்மையாக்கினான்.





# வரலாற்றில் இன்றைய தினம்

1547 - இரண்டாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக முடிசூடினான்.

1603 - ஸ்கொட்லாந்தின் ஆறாம் ஜேம்ஸ் பிரித்தானியாவின் முதலாவது மன்னனாக முடிசூடினான்.

1894 - முதலாவது சீன-ஜப்பானியப் போர் ஆரம்பமானது.

1907 - கொரியா ஜப்பானின் ஆட்சியின் கீழ் வந்தது.

1908 - அஜினமோட்டோ கண்டுபிடிக்கப்பட்டது.

1925 - சோவியத் செய்தி நிறுவனம் டாஸ் நிறுவப்பட்டது.

1934 - ஆஸ்திரிய அதிபர் எங்கல்பேர்ட் டொல்ஃபஸ் நாசிகளினால் கொலை செய்யப்பட்டார்.

1943 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

1973 - சோவியத்தின் மார்ஸ் 5 விண்கலம் ஏவப்பட்டது.

1993 - இஸ்ரேல் லெபனான் மீது பெரும் தாக்குதலை ஆரம்பித்தது.

1993 - மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது.

1993 - தென்னாபிரிக்காவில் சென் ஜேம்ஸ் தேவாலயத்தில் 11 மதகுருக்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

2007 - பிரதிபா பாட்டேல் இந்தியாவின் முதலாவது பெண் குடியரசுத் தலைவரானார்.



# காண்டாமிருகம்

வனவிலங்குகளில் வலிமை வாய்ந்த மிருகம் காண்டாமிருகம். காண்டாமிருகம் உயிரோடு இருக்கும்வரை அதன் தோல் மிருதுவாகத்தான் இருக்கும். ஆனால் அதே காண்டாமிருகம் இறந்துவிட்டால் தோல் உலர்ந்து குண்டுகள் துளைக்க முடியாத அளவுக்கு கடினமாகி உறுதியாகிவிடும். இதன் மூக்கில் இருந்து வளர்ந்திருக்கும் கொம்பு எதிரிகளைத் தாக்கப் பயன்படாது. மாறாக கிழங்குகளைத் தோண்டி எடுக்க மட்டுமே இது பயன்படும்.

எதிரிகளை இந்த மிருகம் பற்களாலேயே கடித்துக் கொன்றுவிடும். யானையைக் கூட கொன்றுவிடக் கூடிய சக்தி படைத்தது. இவை வேகமாக ஓடும். கேட்கும் சக்தி மற்றும் பார்க்கும் சக்தி இவற்றுக்கு மிகவும் குறைவு.

பிராணிகளைக் கொன்ற போதிலும் அவற்றை உணவாக உண்பது இல்லை. புல் மற்றும் கிழங்குகளையே சாப்பிடும். தனித்து வாழ்வதையே விரும்பும். சேற்றில் விழுந்து புரள்வது பிடித்தமான பொழுதுபோக்கு. இந்த மிருகம் இரவில்தான் இரைதேடும். ஒரு முறை-ஒரு குட்டியை மட்டுமே போடும்.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கறை இருந்தால் போதாது..! தீர்வைத்தர முயற்சிக்க வேண்டும்...!

இலங்கைத் திருநாடு அழகானது. அங்கு பல்லின சமூகங்கள் வாழ்கின்றன. ஒவ்வோர் சமூகங்களும் தமக்கான மொழி, கலை கலாசார பண்பாட்டுச் சிறப்புக்களைக் கொண்டுள்ளன. இவர்களுள் தமிழர்கள் அனைத்திலும் சிறப்புக்குரியவர்களாக, தனித்துவமானவர்களாக விளங்குகின்றனர். ஆனாலும் அவர்களுக்கென்று நியாயம் செய்யப்பட வேண்டிய, உரித்தான உரிமைகள் மறுதலிக்கப்பட்டிருக்கின்றன. மறுத்துரைக்கப் படுகின்றன.

அவர்கள் கூடிக் களித்திருந்த தாய் நிலங்கள் இராணுவ மயப் பட்டிருக்கின்றன. கந்தக வாடையும் முட்கம்பி வேலிகளும் அரண் செய்ய, பாதுகாப்பு வலயங்களாக அடக்குமுறையின் விலங்கு கொண்டு வளையமிடப்பட்டு மீட்சியற்ற உறுத்தலாக எங்கும் உலவியிருக்கிறது. நலன்புரி நிலையங்களுள் மக்களின் ஆயுள் ஆர்ப்பரிப்போடு அமிழ்ந்து உயிரற்ற நடைப் பிணமாக அடக்கமாகிப்போகிறது. வனவாசம் செய்கின்றது. அஞ்ஞாத வாசம் புரிகின்றது. எத்துணை வேதனைக்குரிய விடயங்கள் இவை...!

இந்த நிலையிலே காலனித்துவங்கள் இந்த நாட்டிலிருந்து குடி பெயர்ந்த தருணங்களில் செய்துவிட்ட தவறுகள் இப்போதும் எம்மூடு வன்மம் செய்கின்ற, துன்பங்களை சகாயம் செய்கின்ற காலநீடிப்பின் ஆரம்பப் புள்ளியாக துருத்திக் கொண்டிருக்கின்றன. ஒற்றுமை, நம்பிக்கை, நல்லிணக்கம், சமத்துவம் என்ற அடிப் படையில் அவை சிங்களத் தரப்பிடம் நாட்டை ஒரேவிதமாக ஒப்புவித்தமை பாரிய பாதகங்களை தமிழர்கள் சார்ந்து செய்து விட காரணமாக அமைந்துவிட்டது. காலப் போக்கில் பெரும் பான்மையினம் என்ற எதேச்சாதிகாரமும் அதிகாரத்தொனியும் அடக்கி ஆளும் தந்திரமும் தலைதூக்க தமிழினம் அழிவு நிலையினுள் அமிழத் தொடங்கியது. தன்னிலை பெறலுக்கான உரிமை வேட்கையாக உருவம் கொண்டு விடுதலைக்கான போராட்டமாக மாற்றங்கண்டது. வேகம் கொண்டது.

ஆனாலும் மீண்டும் மேலாதிக்கங்கள் ஒன்றுதிரண்டு புரிதலின்றி தமிழர்களை அழிவின் எல்லைக்கு அழைத்துச் சென்றுள்ளன. நீதி என்பதும் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதாகத் தெரிய வில்லை..! மீண்டும் மீண்டும் ஆரம்பப் புள்ளியிலிருந்து அறிவுரை களையே வழங்கி நகர்கின்றன. இதுவே யதார்த்தம்...! இந்த நிலைகளிலிருந்து பின்னகர்ந்து தமிழர்களுக்கான இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயங்களைக் கையாளுவதில் திடமாக அரசு முன்னகர வேண்டும்...! புரிந்து கொள்ள வேண்டும்...! ஆக, ஆட்சி பீடத்தில் அலங்காரம் செய்பவர்கள் கடந்த கால அரசுகளின் அரிச்சுவடிகளைத் தூக்கி வைத்துக் கொண்டு ஏது மறியாதவர் போல ஆர்ப்பரிக்கக்கூடாது...!

அதிகாரப் பகிர்வு விடயத்தில் அக்கறையுடன் இருக்கிறோம் என்று சொல்லுவதால் பயனில்லை. மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் பிரதேச சபைகளுக்கும் இடையிலான தொடர்புகளை பலப்படுத்தி அதிகாரங்களை உரிய முறையிலே பகிர் வோம் என்று புறு புறுத்திருப்பதால் எதுவும் சாத்தியப்படப் போவதில்லை. அதனைச் சரியான முறையிலே பங்கீடு செய்வதற்கான காரண காரியங்களைத் துரிதமாக, நிதர்சனத்தோடு செய்திருக்க வேண்டும். சிங்கள மக்களை ஒற்றுமைப்படுத்துவதிலும் தம்முள் உள்ள கட்சிகளிடையே இனவாதம், அரசியல்அதிகாரம் என்பவற்றைப் பற்றுவதில் இருக்கின்ற காழ்ப்புணர்வுகளைக் களைந்து தமிழர்கள் தொடர்பில் ஒருமுகப்பட்டுக் கொள்ள வேண்டும்..!

ஒரு வீட்டில் இரண்டு பூனைகள் நண்பர்களாயிருந்தன. ஆனால் அவைகள் இரண்டும் ஒற்றுமையில்லாது அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தன. ஒரு நாள் அப்பூனைகளுக்கு அப்பம் ஒன்று கிடைத்தது. இரண்டுமாக அதைச் சாப்பிட முனைந்த போது அதனைச் சரிசமமாக பிரிப்பதில் அவைகளுக்குள் பிரச்சினை எழுந்தது. அப்பத்தைச் சரிசமமாக பங்கிட்டுத் தருவதற்கு ஒருவரை நாடலாம் என்ற எண்ணம் கொண்டன. அந்தச் சந்தர்ப்பத்தில் குரங்கு ஒன்று அங்கு வந்தது.

குரங்கிடம் அப்பத்தைக் கொடுத்தன. அதைச் சமமாகப் பிரித்துத் தரும்படி கேட்டன. குரங்கும் மிக மகிழ்வுடன் அதற்குச் சம்மதித்துக் கொண்டது. தராசு ஒன்றை அங்கு கொண்டு வந்து அப்பத்தை இரண்டாக பிய்த்து தராசின் ஒவ்வொரு தட்டிலும் இட்டு நிறுத்தது.

அப்பத் துண்டுகள் சிறிதும் பெரிதுமாக இருந்ததனால் தராசின் தட்டுகள் சற்று மேலும் கீழுமாகப் பதிந்தன. குரங்கும் சமனிலையை எய்தல் என்ற போர்வையில் அப்பத் துண்டை எடுத்து ஒரு கடி கடித்துச் சாப்பிட்டுவிட்டு மீதியைத் தட்டில் போடுவதும் பின்னர் சமனிலை தென்படாமல் போக மாறி மாறி அப்பத் துண்டுகளைக் கடித்துச் சாப்பிடுவதுமாக இருந்தது.

ஆபத்தை சற்றே உணர்ந்துகொண்ட பூனைகள் இனி நீங்கள் அப்பத்தைப் பிரிக்க வேண்டாம் என்றும் மீதமுள்ள அப்பத்தைத் தருமாறு கேட்டன.குரங்கோ, மீதமிருக்கும் அப்பம் நான் இது வரை செய்த வேலைக்கான கூலி என்று சொல்லிவிட்டு அதையும் வாயில் போட்டுக்கொண்டது..! பூனைகள் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்து ஒற்றுமையாக இருந்திருந்தால், அப்பத்தை பசியாறச் சாப்பிட்டு இருக்கலாம். சிங்கங்களும் தமிழர்களுக்கு தீர்வுதரும் விடயங்களில் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டுக் கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கதைகூறல்...!





# பெண்களே இனியொரு விதி செய்ய வாரீர்!

உடுவிலூர் கலா

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் சமுதாயத்தில் ஆழமாக நிலைகொண்டுவிட்டன. நாளாந்தம் பத்திரிகைகளிலும் இணையத் தளங்களிலும் வெளியாகும் பாலியல் வன்புணர்வுகளைவிடப் பாலியல் வதைகள் வகை வகையாக இடம்பெறுகின்றன. குடும்ப மதிப்பு, எதிர்விளைவுகள் போன்ற காரணங்களால் இவற்றில் பல வெளிச் சத்துக்கு வருவதேயில்லை. பெண், கல்வி அறிவற்றிருந்த காலத்தைவிட கல்வியால் முன்னேறிவிட்ட இந்தக் காலத்திலேயே பெண்கள் மீதான வன்முறைகள் பெருகியுள்ளன.

ஆண்களைவிட திறமையானவர்களாக சாதனையாளர்களாகப் பெண்கள் இருந்தாலும் ஆணாதிக்க வக்கிர கரங்களில் வதங்கித் தம்மை வேதனைக் குள்ளாக்குகின்றனர். அதற்காக இந்த வன்முறைகளுக்கு ஆண்கள் மட்டுமே காரணமல்லர். பெண்களும் பாதிக்



காரணமானவர்கள். பழமைவாதக் கோட்பாடுகளை இன்றும் சுவாசிப்பவர்களாக வாழும் பெண்களால் பாலியல் வன்முறைகளும் குடும்ப வன்முறைகளும் புத்துயிர் பெறுகின்றன. "பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்" என்னும் வாக்கையும், "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்", "பின் தூங்கி முன்னெழுவாள் பெண்" எனும் சமுதாய இடித்துரைப்புகளையும் விசுவாசத்தோடு சுவாசிக்கிறாள். வன்முறைகள் நடைபெறும் இடங்களில் தட்டிக்கேட்காது வேதனையோடு அமைதியாகும் பெண்களால் வன்முறைகள் தொடர்கின்றன. தட்டிக் கேட்டால் வாயாடி என்னும் சிறப்புப் பட்டம் கிடைத்துவிடும் என்ற பயத்தால் அடங்கிப் போகின்றனர். இன்று மட்டுமல்ல அன்றும் இதேதான் நடந்தது.

இந்த உலகம் இன்றோடு அழிந்து விடலாம் என எண்ணி மகிழ்வாக வாழ்ந்தனராம் கோவலனும் கண்ணகியும். இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார். அவ்வாறு மகிழ்ந்திருந்த கோவலன், கண்ணகியின் மகிழ்ச்சிக்கு முழுக்குப் போட்டுவிட்டு, கண்ணீரைப் பரிசளித்துவிட்டு விலைமாதர் வழிவந்த மாதவியிடம் போய்விட்டான். பின்னாளில் கோவலன் கொலையுண்ட செய்திகேட்டு மதுரையை எரிக்கிறாள் கண்ணகி. தன்னைத் தனிமையில் விட்டுச்சென்ற கோவலனின் இறப்புக்கு நீதி கேட்டு மதுரை மாநகரையே எரித்தாள் கண்ணகி. ஆனால் கண்ணகியின் மகிழ்வான வாழ்க்கை பறிபோனதற்கு யார் நீதி கேட்டார்கள்? தன் வாழ்க்கையை மற்றொருத்தி பறித்துக் கொண்டபோது கண்ணகிகூட எதிர்த்துப் பேசாதது ஏன்? அன்று தன் கணவனைத் தன்னிடமிருந்து பிரித்த மாதவிக்குத் தண்டனை கொடுத்திருந்தால் இன்று சின்ன வீடுகள் இருந்திருக்காது அல்லவா?

நளாயினி தன் கணவனை கூடையில் சுமந்து (தலையில்) தாசி வீட்டுக்கு கொண்டு சென்றாளாம். கதை புனைந்து வைத்திருக்கிறார்கள். இப்படியும் பெண் இருப்பாளா? தாலியை எந்தப் பெண்ணும் பங்குபோடச் சம்மதிப்பதில்லை. இங்கு கணவனின் சுகத்துக்காக கூடையில் சுமந்தாளே, அவள் கணவனை மட்டுமல்ல தன் வேதனைகளையும் சுமந்தேதான் சென்றாள். ஆனால் எதிர்த்துப்பேசவில்லை.

தன் கணவனின் சாயலாக வந்தவனை கணவன் என நம்பி உறவுகொண்ட அகலிகையைச் சபித்துக் கல்லாக்குகிறார் கௌதம முனிவர். மீண்டும் அவள் இராமனின் பாதம்பட்டு சாபம் நீங்கிப் பெண்ணாகிறாள். அதே இராமன் தன் மனைவியை சலவைத் தொழிலாளியின் சொற்கேட்டு அக்கினிக் குளியல் செய்வித்தான். கொடூரம். குந்தியின் ஆணையால் ஐவர் பாஞ்சாலியை மணம் முடிக்க முடிவெடுத்த போது ஆம் என்று பாஞ்சாலி ஏன் சொன்னாள்? அவர்களோடு சேர்ந்து வாழ்ந்தது கொடுமையல்லவா? ஐவருக்கு மனைவியாக பொறுமை காத்ததன் விளைவு பின்னாளில் துரியோதனின் வன்முறைக்கும் ஆளாக நேர்ந்தது.

ஆண் எதுவும் செய்யலாம் பெண் மட்டும் அடங்கி ஒடுங்கி வாழ வேண்டுமா? பெண் எதையும் எதிர்த்துப் பேசாது அமைதிகாப்பதுதான் நல்லது என்கிறது நம் சமூகம். இது தான் ஆண்டாண்டு காலமாக வன்முறைகளுக்கு அடித்தளமிடுகிறது.

சபித்துக் கல்லாக்கிய கௌதம முனிவரை அன்றே அடித்துக் கொலை செய்திருந்தால் பெண்ணின் மீது கைவைக்க அல்ல மனம் வைக்கவே பயந்திருப்பார்கள் ஆண்கள். மாதவியையும் நிறுத்தி வைத்து மதுரையை எரித்திருந்தால் ஆண்களுடன் சேர்ந்து பெண்களுக்கு வன்முறை செய்யும் பெண்கள் அடங்கிப் போயிருப்பார்கள். அதையெல்லாம் விடுத்து ஆண் என்பதற்காக அடங்கிப் போவதும், கணவன் என்பதற்காக ஆசை களை அடக்கி வைப்பதுமே பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்குக் காரணமாகின்றன.

கண்ணகி போல் நாமும் நீதி கேட்க வேண்டும். தட்டிக் கேட்கும் மனநிலையை உருவாக்கவேண்டும். பெண்களாகிய எமது கற்பை நிரூபிக்க தீக்குளிப்பதை விடுத்து எம்மை வதை செய்யும் ஆணாதிக்க வன்முறைகளைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். இல்லத்து வன்முறைகளையும் ஆணாதிக்கக் கொடுமைகளையும் மூடிப் பாதுகாக்கும் மனநிலையை இனியாவது விட்டுவிடவேண்டும்.

குடும்பத் தலைவி என்பதற்காக கும்பிட்டு வாழும் நிலை வேண்டாம். பொறுமை கொண்டு அன்பு செய்து நீதி கேட்கவேண்டும். பழிச் சொற்களுக்கும் அவச் சொற்களுக்கும் பணிந்து போகாது தொடர்ந்து போராடவேண்டும். வன்முறைகளைப் பெண்களே வன்முறை செய்யவேண்டும். இனியும் பொறுமைகாத்து அடிமை வாழ்வு வாழ்ந்து எதிர்காலச் சந்ததியையும் வன்முறைகளால் கட்டிப்போட்டு விடும் பரிதாபத்தைத் தவிர்க்கவேண்டும். அன்று வன்முறைகளைத் தட்டிக் கேட்டிருந்தால் இசைப்பிரியா, கிருஷாந்தி, நிர்பயா, சுவாதி, வித்தியா, சேயா, டிலக்சனா, சர்மிளா, கஜேந்தினி போன்ற பெயர்கள் பாலியல் வன்முறையின் பட்டியலில் பதிவாகியிருக்கமாட்டா.

பெண்களே! எம் வாழ்வு எம் கையில். ஆண்களைப் போல் நாமும் நிமிர்ந்து வாழ வேண்டும். வன்முறைகளுக்கு இடமளிக்காதீர்கள், வன்முறைகளில் இருந்து பாதுகாப்புப் பெற மனதை திடப்படுத்திப் போராடுங்கள். பால் நிலை சமத்துவத்தை சமுதாயத்தில் நிலைநிறுத்த உறுதிகொண்டு முன்வாருங்கள். உடல் ரீதியான பாதுகாப்பை உங்களுக்கு நீங்களே ஏற்படுத்தி விழிப்பாயிருங்கள். உங்களுக்கு மட்டுமல்ல உங்களைச் சுற்றியுள்ள பெண்களுக்கும் பாதுகாப்பைக் கொடுங்கள். வன்முறைகளற்ற ஒரு குடும்பத்தை, சமுதாயத்தை, நாட்டை உருவாக்க பெண்களே தயாராகுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 6 |
| 2 | 7 | | | 8 | 4 | | 5 | |
| 4 | | 3 | 5 | 7 | | | | |
| | 2 | | 1 | | | | | 5 |
| | | 1 | | | | 8 | | |
| 8 | | | | | 6 | | 3 | |
| | | | | 4 | 5 | 9 | | 8 |
| | 4 | | 2 | 6 | | | 1 | 7 |
| 9 | | | | | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 6 | 8 | 2 | 9 | 1 | 3 | 5 |
| 5 | 8 | 1 | 3 | 6 | 4 | 7 | 9 | 2 |
| 3 | 2 | 9 | 7 | 1 | 5 | 8 | 6 | 4 |
| 9 | 5 | 8 | 4 | 3 | 1 | 6 | 2 | 7 |
| 6 | 1 | 4 | 2 | 7 | 8 | 3 | 5 | 9 |
| 7 | 3 | 2 | 9 | 5 | 6 | 4 | 1 | 8 |
| 1 | 9 | 7 | 6 | 8 | 2 | 5 | 4 | 3 |
| 2 | 6 | 3 | 5 | 4 | 7 | 9 | 8 | 1 |
| 8 | 4 | 5 | 1 | 9 | 3 | 2 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

டீச்சர்: இந்தப் பறவையோட காலைப் பார்த்து இது என்ன பறவை என்று கண்டு பிடி பார்ப்போம்.
பாபு: தெரியலை.
டீச்சர்: இது தெரியலையா? நீயெல்லாம் உருப்படவா போற.. உன் பேரு என்னடா?
பாபு: என் காலைப் பார்த்து நீங்களே கண்டுபிடிங்க பார்ப்போம்!
டீச்சர்: ???




# கபாலி இந்தியாவில் ஒருநாள் சாதனையாக 250 கோடி ரூபா வசூல்



இந்தியா மட்டுமல்ல உலகம் முழுவதும் ரஜினியின் கபாலிக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருந்தது. அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 50 நாடுகளில் ரசிகர்களின் கொண்டாட்டம் களை கட்டியது. தமிழ்நாட்டில் இதை திருவிழாவாகவே கொண்டாடி மகிழ்ந்தார்கள்.

'கபாலி' படம் உலகம் முழுவதும் 6 ஆயிரத்து 500க்கும் அதிகமான தியேட்டர்களில் திரையிடப்பட்டுள்ளது. இதில் 3 ஆயிரத்து 500 தியேட்டர்களில் அரங்கு நிறைந்த காட்சியாக நடந்தது. 2 ஆயிரம் தியேட்டர்களில் ஒரு வாரத்துக்கு அனைத்து டிக்கெட்டுகளும் முன்பதிவு செய்யப்பட்டன.

அமெரிக்காவில் முதன் முதலாக அதிக திரையரங்குகளில் வெளியான முதல் படம் என்ற பெருமையை பெற்றது. இந்த நிலையில் 'கபாலி' படம் வெளியான அன்று இந்தியாவில் மட்டும் ரூ.250 கோடி வசூல் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 'கபாலி' தமிழகத்தில் ரூ. 100 கோடியும் பிற மாநிலங்களில் ரூ. 150 கோடியும் வசூலித்தது என்று தயாரிப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**: கவிதையின் தோழி :** @mc

பல முறை கெஞ்சலுக்கு பின் எந்த பதிலும் இல்லாத போது நம் கோபம் கொலை வெறியை விட கொடியதாக வெளிப்படுகிறது.

**தினமும் உப்புமா கிண்டி தந்து நம்மளை சாவடிக்கிற பொண்டாட்டி, உனக்குத் தேவையா அப்பா.**





**நான் வந்திட்டன் என்று சொல்லு. திரும்பி வந்திட்டன் என்று சொல்லு. கபாலி டிக்கெட் 600 ரூபா என்று சொன்னதும், டிக்கெட்டுக்கு காசு இல்லாமல் அப்படியே திரும்பி வந்திட்டன் என்று சொல்லு. கபாலி டா காசு இல்லடாஆ....**

**பய பம்மியிருக்கிறதைப் பார்த்தா, மார்க் கம்மியா வாங்கியிருப்பானோ?**



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம் :** அவசரப் பணியால் நெருக்கடி உருவாகலாம். தொழில் வியாபாரத்தில் மந்தகதி ஏற்படலாம். இலாபம் சுமார். பெண்கள் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். பாதுகாப்பற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**இடபம் :** மனதில் இருந்த திட்டம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள். வருமானம் பெருகும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம் :** நீண்ட நாள் தாமதமான செயல் ஒன்று நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. இலாபம் கூடும். வீடு, வாகனத்தில் தேவையான மாற்றம் செய்வீர்கள்.

**கடகம் :** நண்பர்களால் தொந்தரவு ஏற்படலாம். பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரம் சுமாரான, பணவரவு கிடைக்கும். உடல்நலனில் அக்கறை தேவை.

**சிங்கம் :** அறிமுகமில்லாதவரிடம் நெருங்கிப் பேசவேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலையைச் சந்திக்க நேரிடலாம். வருமானம் மிதமாக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**கன்னி :** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். உற்சாகமுடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் விற்பனை அதிகரிக்கும். இலாபம் உயரும். நண்பருக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள்.

**துலாம்:** பெரியோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் ஆதாயம் காண்பீர்கள். பெண்களுக்கு வீட்டுத்தேவை பூர்த்தியாகும். மனைவியின் அன்பு கண்டு மகிழ்வீர்கள்.

**விருச்சிகம் :** பொது விடயத்தில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள், விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். உணவுப் பொருள் தரமறிந்து உண்பது அவசியம்.

**தனுசு :** நண்பர் மீதான நம்பிக்கை குறையும். தொழில் வியாபாரத்தில் குளறுபடியைச் சரி செய்வீர்கள். இலாபம் மிதமாக இருக்கும். வெளியூர் திட்டத்தில் திடீர் மாறுதல் உண்டாகும். புத்திரரின் செயல் ஆறுதல் அளிக்கும்.

**மகரம் :** மனதில் அன்பும், இரக்கமும் மேலோங்கும். தொழில் வியாபார வளர்ச்சியால், வருமானம் அதிகரிக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பெண்களின் நீண்டநாள் கனவு நிறைவேறும்.

**கும்பம்:** அவப்பெயர் வராத வகையில் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் சீராக விடாமுயற்சி தேவை. இலாபம் சுமார். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர். பணம், நகை பாதுகாப்பில், உரிய கவனம் தேவை.

**மீனம்:** சமுதாயத்தில் நல்ல மதிப்பு உருவாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பெருமளவில் குறையும். வருமானம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை ஆடி-11

செவ்வாய்க்கிழமை
-26.07.2016
திதி: ஸப்தமி மா.06.21 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப.12.26 வரை
ராகுகாலம்:
03.02-04.32 வரை
சுபநேரம்:
10.32-12.02 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 1000 | 700 | 800 |
| நண்டு | 250 | 600 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 500 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 500 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 600 | 600 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 200 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | 500 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 300 | 140 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 350 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 400 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 350 | – | – |



# இது புதுசு

ஆண்களுக்கான மேலை நாட்டு நாகரிகத் தொப்பி அறிமுகமாகியுள்ளது. இயற்கை நார்களால் உருவான இவை, வெயில் காலப் பாவனைக்கு உகந்தவை. இந்தத் தொப்பி, ஒன்று 450 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.



## பாகற்காய் சிப்ஸ்

**தேவையான பொருள்கள்:**

பெரிய பாகற்காய் – 250 கிராம்
பெருங்காயத்தூள் – ஒரு சிட்டிகை
நசுக்கிய உள்ளி – ஒரு மேசைக் கரண்டி
கடலை மா – 5 மேசைக் கரண்டி
அரிசி மா – 2 மேசைக்கரண்டி
மிளகாய்த்தூள் – 2 மேசைக்கரண்டி (அல்லது காரத்துக்கேற்ப)
மஞ்சள்தூள் – ஒரு சிட்டிகை
தயிர் – 2 மேசைக்கரண்டி
உப்பு – தேவைக்கேற்ப
எண்ணெய் – பொரிப்பதற்குத் தேவையான அளவு.

**செய்முறை:**

பாகற்காயை வட்டவட்டமாக நறுக்கி உள்ளே இருக்கும் விதையை எடுத்து விடவும். வெட்டிய பாகற்காயை ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் உப்பு, மஞ்சள்தூள், தயிர் சேர்த்துப் பிசைந்து 20 நிமிடங்கள் ஊறவிடவும்.
பிறகு தண்ணீர் விட்டுக் கழுவி நீர்போக பாகற்காயை வடிகட்டவும். (இப்படிச் செய்வதால் கசப்புத் தெரியாது).
வடிகட்டிய பாகற்காயுடன் கடலை மா, அரிசி மா, மிளகாய்த்தூள், பெருங்காயத்தூள், நசுக்கிய உள்ளி சேர்த்து சிறிதளவு நீர் சேர்த்துப் பிசையவும்.
தாச்சியில் பொரிப்பதற்குத் தேவையான எண்ணெய் ஊற்றி சூடானதும் பாகற்காயைப் போட்டு பொரித்து எடுக்கவும். எண்ணெய்யை வடியவிட்டு காற்றுப்புகாத போத்தலில் எடுத்து வைக்கவும். இவ்வாறு செய்து 4 நாள்கள் வரை பயன்படுத்தலாம்.



## எந்த நேரத்தில் உட்கொள்ள வேண்டும்

### இறைச்சி

மதியவேளையில் இறைச்சியைச் சாப்பிடுவது நல்லது. இறைச்சியில் புரோட்டீன் அதிகம் உள்ளது. இது உடல் வலிமையை அதிகரித்து ஒருமுகப்படுத்துதலையும் மேம்படுத்தும்.
இறைச்சி செரிமானமாகத் தாமதமாகும். எனவே இரவில் இறைச்சியைச் சாப்பிடக்கூடாது. ஒரு வேளை அப்படி எடுத்தால், அதில் உள்ள அதிகப்படியான புரோட்டீன் செரிமான மண்டலத்துக்கு மிகுந்த தீங்கை உண்டாக்கும்.



### வாழைப்பழம்

வாழைப்பழங்களை மதிய வேளையில் சாப்பிடுவது என்பது சிறந்தது. ஏனென்றால் வாழைப் பழத்தில் நார்ச்சத்துக்கள் அதிகம் உள்ளது. இது செரிமானத்துக்கு உதவும். மேலும் வாழைப்பழத்தில் உள்ள இயற்கை அமிலநீக்கி நெஞ்செரிச்சல் ஏற்படுவதைத் தடுக்கும்.
வாழைப்பழங்களை இரவில் சாப்பிடக்கூடாது. இப்படிச் சாப்பிட்டால் உடலில் சளி உருவாக்கம் அதிகரித்து சளி பிடித்துவிடும். மேலும் வாழைப்பழத்தில் மக்னீசியம் அதிகம் உள்ளது. இரவில் வெறும் வயிற்றில் வெறும் வாழைப்பழங்களை மட்டும் சாப்பிட்டால் அது வயிற்றுப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 120 | 40 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 80 | 120 | 100 | 80 | – | 70 |
| கரட் | 200 | 200 | 200 | 180 | 200 | 160 | – | 140 |
| மரவள்ளி | 100 | 100 | 100 | 80 | 120 | 80 | – | 50 |
| பயிற்றை | 120 | 120 | 120 | 120 | 120 | 140 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 200 | 240 | 200 | 160 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 200 | – | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 85 | 90 | 80 | 90 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 100 | 100 | – | 100 |
| பூசணி | 150 | 120 | 100 | 140 | 80 | 100 | – | 130 |
| தக்காளி | 180 | 160 | 160 | 160 | 140 | 150 | – | 200 |
| வாழைக்காய் | 180 | 120 | 100 | 120 | 120 | 80 | – | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 15 |
| பொன்னாங்காணி. | 25 | 30 | 30 | 35 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 550 | 500 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 70 | 80 | 70 | 100 | 100 | 80 | – | 60 |
| கோவா | 150 | 160 | 160 | 160 | 180 | 80 | – | 120 |
| வெண்டி | 100 | 80 | 80 | 120 | 100 | 80 | – | 80 |
| போஞ்சி | 200 | 160 | 160 | 220 | 160 | 160 | – | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 160 | 180 | 180 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 25–30 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 120 | 120 | 120 | 200 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 300 | 600 | 240 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 150 | – | 250 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 320 | 380-400 | 320 | 400 | – | 300 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நுட்பம்




### 'வாட்ஸ் ஆப்'செயலிக்கு பிரேசிலில் தடை

பிரேசில் நாட்டில் வாட்ஸ் ஆப் செயலிக்கு விதிக்கப்பட்ட திடீர் தடையால் 10 கோடிக்கும் அதிகமானோர் தகவல் பரிமாற முடியாமல் அவதிக்குள்ளாகினர்.

வாட்ஸ் ஆப், பாதுகாப்பு அம்சங்களுக்கு எதிராகச் செயற்படுவதாகவும், இதனால் சமூக விரோதச் செயல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாகவும், இதன் நிமித்தம் இந்தியாவில் வாட்ஸ் ஆப் செயலிக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் கேட்டு சமீபத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

ஆனால் இந்தியாவில் வாட்ஸ் ஆப் செயலியை தடை செய்ய முடியாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த நிலையில் பிரேசில் நாட்டில் நடந்த ஒரு குற்றச்செயலுக்காக குறிப்பிட்ட தகவல்களை வழங்குமாறு பிரேசில் பொலிஸார் வாட்ஸ் ஆப் நிறுவனத்தைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் தகவல்களை வழங்க அந்த நிறுவனம் மறுத்துவிட்டது.

இது குறித்து ரியோ டீ ஜெனீரோ நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட நிலையில், வாட்ஸ் ஆப் செயலுக்குத் தடைவிதிப்பதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனால் 10 கோடிக்கும் அதிகமானோர் தகவல் பரிமாற முடியாமல் அவதிக்குள்ளாகினர். ஆனால் சிறிது நேரத்திலே கீழ் நீதிமன்றத்தின் உத்தரவை நீக்கியது உயர் நீதிமன்றம்.

பிரேசில் நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளில் வாட்ஸ் ஆப் செயலிக்கு மூன்று முறை தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (டு)

### முடக்கப்பட்டது 'கிக்ஆஸ்'

உலகின் மிகப் பெரிய தகவல் திருட்டு இணையத்தளமான கிக்ஆஸ் டாரண்ட்ஸ் (Kickass Torrents) முடக்கப்பட்டது.

இந்த இணையத்தளத்தின் உரிமையாளரான உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஆர்டம் வாலின், போலாந்தில் கைது செய்யப்பட்டார்.

28 மொழிகளில் இயங்கக்கூடிய கிக்ஆஸ் டாரண்ட்ஸ் இணையத்தளம் அண்மையில் வெளியான கப்டன் அமெரிக்கா–சிவில் வார், பைண்டிங் டோரி உட்பட அனைத்துப் புதிய படங்கள், இசை ஆல்பங்கள் என அனைத்தையும் பதிவேற்றம் செய்தது.

கிக்ஆஸ் இணையத்தளம் 100 கோடி டொலர் மதிப்புள்ள படங்கள், இசை ஆல்பங்களைத் சட்டவிரோதமாகத் தரவேற்றியுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. தற்போது இணையத்தளம் முடக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகப் பார்க்கும் இணையத்தளங்களில் கிக்ஆஸ் இணையத்தளம் 69ஆவது இடத்தில் உள்ளது. வெளியான அன்றே திரைப்படங்கள் இந்த இணையத்தளத்தில் கிடைக்கும் அளவுக்கு செயற்பட்டு வந்தது. இந்த இணையத்தளத்தின் மதிப்பு 5.4 கோடி டொலராகும். இணையத்தளத்தின் விளம்பரங்கள் மூலம் வருமானம் ஆண்டுக்கு 1.25 கோடி டொலரில் இருந்து 2.23 கோடி டொலர் வரை கிடைத்துள்ளது.

# 139 வருட மாசற்ற மேன்மையுடன் சிங்கர் கடன் அட்டை அறிமுகம்

இலங்கையில் நீண்ட வரலாற்றைக் கொண்டதும், நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் நாமமுமான சிங்கர் ஸ்ரீலங்கா, இன்டர்நஷல் விசா உடன் இணைந்து தனது சொந்த வர்த்தக நாமத்திலமைந்த கடன் அட்டையை அறிமுகம் செய்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி இந்த அறிமுகம் முன்னெடுக்கப்பட்டது. வாடகைக் கொள்வனவு என்பதை உலகுக்கு அறிமுகம் செய்த நாம், வாடிக்கையாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும், அவர்களுக்கான பொருள்களை இலகுவான முறையில் கொள்வனவு செய்வதற்கு உதவிகளை வழங்குவதிலும் உன்னதமான வரலாற்றைக் கொண்டுள்ளதாகச் சிங்கர் நிறுவனம் தெரிவித்தது.



எனவே, சிங்கர் வர்த்தக நாமத்திலமைந்த கடன் அட்டை என்பது, நிறுவனத்தின் பாரம்பரியமான வாடிக்கையாளர் நட்புறவான செயற்பாடு என்பதன் நீடிப்பாக அமைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

புதிய சிங்கர் – விசா கடன் அட்டையை, நாடு முழுவதும் காணப்படும் 435 சிங்கர் காட்சியறைகளில் ஏதேனுமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சிங்கர் பொருள்களை வாடிக்கையாளர்கள் இலகுவான முறையில் கொள்வனவு செய்வதற்கு உதவும் வகையில் இது அமைந்துள்ளதுடன், நாடு முழுவதிலும் கடன் அட்டைகளை ஏற்றுக் கொள்ளும் சகல விற்பனை மற்றும் சேவை நிலையங்களிலும் இந்தக் கடன் அட்டையைப் பயன்படுத்த முடியும் என சிங்கர் கூறியுள்ளது.

அத்துடன், விசாவலையமைப்பில் இணைக்கப்பட்டுள்ள ஏ.ரி.எம்களிலிருந்து பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளவும் முடியும். உலகளாவிய ரீதியில் 14 மில்லியன் விற்பனை நிலையங்களில் இதனைப் பயன்படுத்த முடியும் என்பதுடன், 200க்கும் மேற்பட்ட நாடுகளில் காணப்படும் 2 மில்லியனுக்கும் அதிகமான ஏ.ரி.எம்களிலிருந்து பணத்தை மீளப் பெறவும் பயன் படுத்தலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் முன்னணி சில்லறை விற்பனை நிறுவனமாக பிரதானமாகக் கருதப்படும் சிங்கர், நிதித் துறையிலும் தனது பிரவேசத்தை சிங்கர் பினான்ஸ் நிறுவனத்தின் மூலம் ஏற்படுத்தியுள்ளதாகவும், இந்த நிறுவனத்தின் மூலமாக லீசிங் மற்றும் வாடகைக் கொள்வனவு முறைகள் மூலமாக வாகனங்களுக்கான நிதி உதவிகள் வழங்கப்படுவதுடன், கடன்கள் மற்றும் நுண்நிதிகள் போன்ற நுகர்வோருடன் தொடர்புடைய நிதிக் கொடுக்கல் வாங்கல்களும், வியாபாரம் – வியாபாரம் சம் பந்தமான நிதிச் செயற்பாடுக்ள் போன்றனவும் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் சிங்கர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் வியாபாரம் தொடர்பில் சிங்கர் ஸ்ரீ லங்கா குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில்:

"நிதிக் கொடுக்கல் வாங்கல்களை கையாள்வதில் நாம் பெருமளவு அனுபவம், அறிவு மற்றும் கட்டமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளோம். இன்றைய கால கட்டத்தில் பிரதான வங்கிகளுக்கு அடுத்ததாக, சிங்கர் தன்வசம் உயர்ந்த எண்ணிக்கையான வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. எனவே, கடன் அட்டை வியாபாரத்தில் பிரவேசிக்க தீர்மானித்தமை என்பது மிகவும் பொருத்தமான ஒரு தீர்மானமாக அமைந்துள்ளது" –என்றார். (டு)

## இலங்கை- மலேசியா இடையே ஈ-விசா

இலங்கையின் சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலா ஈ–விசாவுக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும், எதிர்வரும் நவம்பர் முதல் இது நடைமுறைக்கு வரும் என்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்த மலேசிய உதவிப் பிரதமர் அஹமட் ஷாஹிட் ஹமிடி தெரிவித்தார்.

மலேசிய செய்தி நிறுவனம் ஒன்று இதனை தெரிவித்தது.

இலங்கையில் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள சர்வதேச இஸ்லாமிய மாநாட்டின்போது தாமும் மலேசியாவின் பிரதமரும் பங்கேற்கவுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அதன் போது ஈ–விசா உடன்படிக்கை செய்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையின் அடிப்படையில் இலங்கையின் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க மலேசியா முன் வந்துள்ளது என்றும் உதவிப் பிரதமர் அஹமட் ஷாஹிட் ஹமிடி தெரிவித்தார். (டு)

## பெக்கோ குளிர்சாதனப்பெட்டி; அறிமுகம் செய்கின்றது சிங்கர்

நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்களின் விற்பனையில் நாட்டில் முன்னிலை வகித்து வருகின்ற சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி, கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் இடம்பெற்ற பிரமாண்டமான நிகழ்வொன்றில் புத்தம்புதிய பெக்கோ (Beko) வர்த்தக நாம குளிர்சாதனப் பெட்டிகளை இலங்கையில் அறிமுகம் செய்து வைத்தது. சிங்கர் ஸ்ரீலங்கா குழு மத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ் மற்றும் சிங்கர் ஸ்ரீ லங்கா பிஎல்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான குமார் சமரசிங்க ஆகியோரின் தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

பெக்கோ அறிமுகப்படுத்தியுள்ள புத்தம்புதிய குளிர்சாதனப்பெட்டி உற்பத்தி வரிசையானது உணவை தினசரி புத்துணர்ச்சியுடன் வைத்துப் பேண உதவுவரோடு, மிகவும் முக்கியமான விட்டமின்களை இழந்து விடாது பாதுகாத்து, முழுக் குடும்பத்துக்கும் ஒட்டுமொத்த நலச் செழுமையைத் தருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்புதிய குளிர்சாதனப்பெட்டி உற்பத்தி வரிசையானது, தனித்துவமான அம்சங்கள் மற்றும் நவீன வடிவமைப்புக்களுடன், நவீன தொழில்நுட்பத்தை இணைக்கும் இவென்ற் பிரெஷ் பிளஸ் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது.

தினந்தோறும் புத்துணர்ச்சி என்ற உற்பத்தி உறுதிமொழிக்கு இணங்க, ஈடுஇணையற்ற குளிரூட்டல் தீர்வுகளை வழங்கி, இலங்கையிலுள்ள நுகர்வோர்களுக்கு அவர்களின் புத்துணர்ச்சிக்கான தாகத்தை தினமும் ஈடுசெய்யும் வகையில், இப்புதிய உற்பத்தி வரிசை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக சிங்கர் நிறுவனம் கூறுகிறது.

சிங்கர் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ் குறிப்பிடுகையில்; "2013 ஆம் ஆண்டில் பெக்கோவுடன் நாம் ஏற்படுத்தியிருந்த பங்குடமை, மகத்தான வெற்றியை அளித்துள்ளதுடன், பெக்கோ விற்பனையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஐரோப்பாவில் முன்னிலை வகித்து வருகின்ற ஒரு வர்த்தகநாமமாக பெக்கோ திகழ்வதுடன், அண்மைக் காலங்களில் ஆசி யாவிலும் தனது பிரசன்னத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது"–என்றார்.



சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் துறை பணிப்பாளரான குமார் சமரசிங்க கூறுகையில்: "உள்நாட்டில் பெக்கோ உற்பத்திகளுக்கு நிலவுகின்ற அதிக கேள்வியை ஈடுசெய்யும் வகையில் நாம் இன்று பெக்கோ குளிர்சாதனப் பெட்டிகளின் புதிய உற்பத்தி வரிசையை அறிமுகப் படுத்தி வைத்துள்ளோம். ஐரோப்பாவில் முதல் நிலையில் திகழுகின்ற வர்த்தக நாமம் என்ற வகையில், இதன் கவர்ச்சியான உற்பத்தி வழங்கல்களுடனான, இலங்கை நுகர்வோர் மத்தியில் இந்த வர்த்தக நாமம் அடைந்துள்ள பிரபலமானது இன்னும் அதிகரிக்கும் என சிங்கர் உறுதியாக நம்புகின்றது"–என்றார். (டு)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீள்குடியேற்றச்

அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப் பட்டது. அமைச்சர் ரிசாத் பதியுதீனே, ஜனாதி பதியின் பரிந்துரையை உள்ளீர்ப்பதற்கு அனுமதிக்கவில்லை என்று நம்பகரமான வட்டாரங்கள் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தன.

வடக்கு மாகாண முதலமைச்சரை உள் ளீர்க்காமல் உருவாக்கப்பட்ட மீள்குடியேற் றச் செயலணிக்கு, வடக்கு மாகாண சபை தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. வடக்கு மாகாண சபையின் அமர்வு கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற போது, மீள்குடியேற்றச் செயலணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து தீர் மானமும் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறானதொரு நிலையில், மீள்குடி யேற்றச் செயலணிக்கு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன நான்காவது நபராக அமைச்சர் துமிந்த சில்வாவின் பெயரைப் பரிந்துரைத்துள்ளார். மீள்குடியேற்றச் செயலணியில் அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், பைசர் முஸ்தபா, டி.எம்.சுவாமி நாதன் ஆகியோர் ஏற்கனவே உள்ளடக் கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பரிந்துரையை அமை ச்சரவைத் தீர்மானத்தில் உள்வாங்காமை தொடர்பில் ரிசாத் பதியுதீனின் கருத்தை அறிவதற்கு தொடர்பு கொண்ட போதும் அது பலனளிக்கவில்லை.

கொழும்புத் தொலைக்காட்சி விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தி ருந்த ரிசாத் பதியுதீன், வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் – சிங்கள மக் களை ஒரு கட்டமைப்பின் கீழ் குடியமர்த்தி அவர்களை நிம்மதியாக வாழவைப்பதற்கு உருவாக்கப்பட்ட மீள்குடியேற்றச் செய லணியின் செயற்பாடுகளை முடக்கும் வகை யில் வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. செயலணியின் நோக்கங்களை திரிபுபடுத்தி அதன் எதிர் கால நடவடிக்கைகளை கறுப்புக் கண்ணோடு பார்த்துவரும் வடக்கு மாகாண சபையின் போக்கை வன்மையாகக் கண்டிக்கின் றேன் என்று தெரிவித்திருந்தார். (வ-5)

## பிள்ளைகளின்

களிலும் துர்நடத்தைகள் நடைபெறுகின் றன. புதிய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெய சுந்தரவின் உத்தரவுக்கமைய சிறுவர் துர் நடத்தைகளுக்கு எதிரான வேலைத்திட் டத்தை முன்னெடுத்துள் ளோம். ஆசிரியர் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்ட சிவில் அமைப்புக்கள் மூலம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவவேண்டும். எமது கிராமங் களில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது. பாடசாலை செல்லாது வீடுகளில் இருக்கும் சிறுவர் களைக் கண்டுபிடித்து பாடசாலைக்கு அனுப்ப ஒழுங்கு செய்யவேண்டும். கிராமங் களில் போதைப் பொருளுக்கு அடிமை யாகி துர்நடத்தையில் ஈடுபடுபவர்கள் என சந்தேகிக்கப்படுவோர் தொடர்பில் பொதுமக் கள் தகவல் தந்தால், உடனடியாக நடவ டிக்கை எடுக்கப்படும்.

சிறுவர் துர்நடத்தைகள் குறித்து பொலி ஸாருக்கு அறிவியுங்கள். அவை தொடர் பில் எனது அலுவலக தொலைபேசி எண் 024-2222856, 024-2224491, உத் தியோகபூர்வ அலைபேசி இலக்கம் 071-8591017, தொலைநகல் எண் 024-2222227, மின்னஞ்சல் முகவரி dig.vavuniyapolice.lk ஆகியவற்றுக்குத் தெரிவியுங்கள் – என்றார்.

நிகழ்வில், வவுனியா மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.சிசிர குமார, குருமார்கள், அரச அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்கள், பொருளாதார நல உத்தி யோகத்தர்கள், குடும்பநல உத்தியோ கத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிவில் அமைப்புக் கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந் தனர். (வ-4,402)

## ஐ.நா.

33ஆவது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு கனேடிய பிரதமர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ள தாவது:

1983ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தை நினைவுகூரும் சகல தமிழ் மக்களுடனும் கனடா இணைந்து கொள்கின் றது.

தமிழர் எதிர்ப்பு இனக் கல வரங்களால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் இலங் கையின் உள்நாட்டுப் போரால் உயிரிழந்த வர்கள் அனைவரையும் நாம் நினைவில் நிறுத் திக் கொண்டுள்ளோம். தமது குடும்ப உறவினர் கள், நண்பர்களை இழந்தவர்களுக்கு எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போர் மற்றும் பேரழிவினால் பாதிக்கப் பட்டவர்களது காயங்களை ஆற்றிக் கொள் வதற்கு, பாரபட்சமற்ற ஒருமைப்பாட்டை உருவாக்க ஊக்குவிக்கவேண்டும் – என்று கனேடிய பிரதமர் தெரிவித்தார். (வ-5)

## காவலூர்

கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை கடற்படையினரின் முகாமின் வெளிப்புறங்கள் தோறும் நவீன கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட நீருக்கு அடியில் இயங்கும் கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. (வ-101)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி அரியமலர் முருகேசபிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 7ஆம்கட்டை, சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. அரியமலர் முருகேசபிள்ளை 23.07.2016 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசபிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்ற மகேஸ்வரி மற்றும் இராஜ ரட்ணம் (இளைப்பாறிய மின் அத்தியட்சகர் மின்சாரசபை), குணரட்ணம் (லண்டன்), பரமானந்தம் (மானிப்பாய்), சிவநேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராஜா (இளைப்பாறிய உத்தியோகத்தர் -மத்திய வங்கி), இந்திராணி, பிறேமாவதி (லண்டன்), சத்தியவதி (இளைப்பாறிய உத்தியோகத்தர் -யாழ்.மாநகரசபை), தியாகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஜெயகுமார் (பிரான்ஸ்), பால குமார் (லண்டன்) ஆகியோரின் சிறிய தாயும், Dr.M. பிரிந்தா (யாழ். வைத்தியசாலை), உஷாந்தி, தவாணி (லண்டன்), Dr.பிந்தியா (லண்டன்), தர்சிகா (யாழ்.மாவட்ட செயலகம்), கயோறிக்கா (லண்டன்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

119/1,பொன்னாலை வீதி,
7ஆம் கட்டை, சண்டிலிப்பாய்.

தகவல்:
மு.இராஜரட்ணம்

(J/3207)
(11,18)

077 844 5138

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### சுப்பிரமணியம் அருந்தவநாதன்

(அருந்தவம் ஆச்சாரி)



தோற்றம்
26 . 08 . 1946

மறைவு
24 . 07 . 2016

நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் அருந்தவநாதன் (அருந்தவம் ஆச்சாரி) நேற்று (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான பொன்னையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமக னும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சசிக்குமார் (சசி), சசிகலா (கலா), சசிகரன் (பிரான்ஸ்), சசிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராதா, குமரராஜன் (குமரன்), தனுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், உமாரதி, ஸ்ரீரதி, கஸ்வினி, பரணிதரன், கிருஷாந், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.07.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/3209)
(11,17,18)

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு.

தகவல்: சசிக்குமார் -
(சசி-மகன்)
குமரராஜன் (குமரன் - மருமகன்)

## 16 பக்கத் தொடர்ச்சி...

பலர் வேலை கொடுக்க தயாராக இருந்தாலும், அண்ணன் அந்த வேலைகளை கிடைக்க விடாமல் செய்தார்.

வீட்டிலேயே இருந்தால் தன் வாழ்க்கை அஸ்தமனமாகிவிடும் என்று பெஞ்சமினுக்குத் தெரிந்தது. வீட்டைவிட்டு ஓடிப்போக முடிவு செய் தார். எங்கே போவது? என்ன செய் வது? குடும்பம் தவிர அவருக்கு யாரை யும் தெரியாது, படிப்பு கிடையாது, அச்சுப்பணி தவிர வேறு தொழில் தெரியாது.

பிலடெல்பியா நகரம் வந்து சேர்ந் தார். அச்சகத்தில் உதவியாளர் வேலை கிடைத்தது. சில வருடங்களில் சொந்த அச்சகம் தொடங்கத் திட்ட மிட்டார். ஊருக்குப் போய், அப்பா விடம் மூலதனத்துக்குப் பணம் கட னாகக் கேட்டார். அப்பா மறுத்து விட்டார்.

பெஞ்சமினுக்கு வயது இருபது. நெஞ்சில் இப்போது ஒரு வெறி தன் அண்ணன் முன்னால், அப்பா முன் னால் வாழ்ந்து காட்டவேண்டும், ஏறும் இடமெல்லாம் எவரெஸ்ட் ஆக்கவேண் டும். என்ன செய்யலாம்? அதற் குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்குப் 13 நற்குணங் கள் தேவை என்று பட்டியலிட்டார்.

**முன்னேற்றத்துக்குத் தேவையான 13 நற்குணங்கள்**

- உணவில் கட்டுப்பாடு
- தேவைப்படும்போது மட்டுமே பேசுதல்
- செய்யும் காரியங்களில் ஒழுங்குமுறை
- மன உறுதி முடிவெடுத்தல், அந்தத் தீர்மானங்களைச் செயற்படுத்துதல்
- சிக்கனம்
- கடும் உழைப்பு
- சொல்லிலும் செயலிலும் நேர்மை
- பாரபட்சமின்மை
- கருத்துகளில் மிதவாதம்
- சுத்தம்
- பதற்றமில்லா மனநிலை
- கற்பு
- தன்னடக்கம்

பலர் திட்டம் போடுவதில் கெட்டிக்காரர் கள். ஆனால், கனவுகளை நன வாக்க அர்ப்பணிப்பு வேண்டும், கட்டுப்பாடு வேண்டும், கடும் உழைப்பு வேண்டும். பெஞ்சமின் என்ன செய்தார் தெரியுமா? ஒரு கையளவு புத்தகம். அதில் ஒவ்வொரு நற் குணத்துக்கும் ஒவ்வொரு பக்கம். அதில் வாரத்தின் ஒவ்வொரு நாளும், குறிக்கோளை எட்டுவதில் செய்த சாதனைகள், சறுக்கல்கள் ஆகிய வற்றைப் பதிவு செய்வார். இவற்றை அடிக்கடி படித்துப் பார்த்துத் தன் பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் கொண்டுவருவார். இந்தக் கடும் முயற்சியால் விரைவில் இந்தப் பதின் மூன்று நற்குணங்களும், பெஞ் சமின் ஆளுமையின் அம்சங்களா யின, அவருடைய . ஒவ்வொரு செய லிலும் பிரதிபலித்தன.

பெஞ்சமின் கடன் வாங்கினார். சொந்த அச்சகம் தொடங்கினார். தொழில் நேர்த்தி, சகாய விலை. குறித்த நேரத்தில் பணிகளை முடிக் கும் வாக்குத் தவறாமை ஆகியவற் றால் வேலைகள்குவிந்தன.

1732. புதிதாக என்ன செய்யலாம் என்று பெஞ்சமினுக்கு எப்போதும் ஒரு துடிப்பு. வருடாந்த பஞ்சாங்கம் வெளியிட முடிவு செய்தார். அன் றைய பஞ்சாங்கங்களில் நாள் காட்டி, விவசாயிகள் விதை விதைக்க ஏற்ற நாள்கள், பருவநிலை விவரங் கள் ஆகியன இருந்தன. இவற்றைத் தாண்டி, சுய முன்னேற்ற அம்சங் கள், பழமொழிகள், கவிதைகள், கணித விடுகதைகள், சமையல் குறிப்புகள், ராசிபலன் எனப் பல புதுமைகளைச் சேர்த்தார். அடுத்த 27 வருடங்களுக்கு, பைபிளுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகம் விற்பனையான புத்தகம், பெஞ் சமினின் Poor Richard's Almanac.

1748. பெஞ்சமினுக்கு 42 வயது. தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த் தார். பணம் கொட்டும் தொழில். வசதிகள். அன்பான மனைவி, குழந்தைகள், சமுதாயத்தில் மதிப்பு. மாபெரும் சபையினில் நடந்தால் மலையென வந்து குவியும் மாலை கள்.......சாதாரண மனிதனுக்குத் திருப்தி வரும். இந்தச் சகலகலா வல்லவர் மனதிலோ, தன்னலம் தாண்டிப் பொதுநலச் சேவையில் முத்திரை பதிக்கும் ஆசைகள், பேரா சைகள்.

வெற்றிகரமான தொழிலிலிருந்து விலகினார். பிலடெல்பியா நகரத்தில் நூலகம், பொது மருத்துவமனை, தீயணைப்புத்துறை, ஆயுட்காப்பீட்டு நிறுவனம், கல்வி நிறுவனம் ஆகிய வற்றை மக்கள் ஆதரவைத் திரட்டி உருவாக்கினார்.

இந்தப் படிக்காத மேதைக்கு அறி வியல் ஆராய்ச்சிகளில் மிகுந்த ஈடு பாடு. சோதனைகள் பல நடத்தினார். எரிபொருள் சிக்கனமான ஸ்டவ், இடிதாங்கிக் கருவி, பைஃபோக்கல் மூக்குக் கண்ணாடி ஆகிய கருவி களைக் கண்டுபிடித்தார். "தன் சுய நலத்துக்கு அல்ல, சமுதாய நன் மைக்கே என்னும் உறுதியோடு, இந்தக் கருவிகளுக்குக் காப்புரிமை வாங்க மறுத்தார். இவற்றைத் தயா ரிக்கும் உரிமையை அனைவரும் பயன்படுத்தும் இலவசச் சொத்தாக் கினார்.

1750 காலகட்டத்தில் அமெரிக்கா பிரிட்டிஷ் காலனியாக இருந்தது. விடுதலைப் போராட்டம் முளைவிடத் தொடங்கியிருந்தது. பெஞ்சமின் இதன் முன்னணி வீரர்களில் ஒரு வரானார். இங்கிலாந்துடன் நடந்த பல பேச்சுகளில் பங்கேற்றுச் சுதந் திர முழக்கமிட்டார். சுதந்திரப் பிர கடன வரைவுக்-குழுவின் உறுப் பினராகப் பணியாற்றினார். பிரான்ஸ் நாட்டுடன் பேச்சு நடத்தி, அமெரிக்க விடுதலைப் போருக்கு அவர்களிடம் ஆதரவும், நிதியுதவியும் வாங்கி வந்தார்.

அமெரிக்கா, தேசத் தந்தையராக எழுவரைக் கொண்டாடுகிறது. அவர் கள் பெஞ்சமின் பிராங்ளின், ஜார்ஜ் வாஷிங்டன், ஜான் ஆடம்ஸ், தாமஸ் ஜெஃபர்ஸன், ஜேம்ஸ் மாடிசன், அலெக்சாண்டர் ஹாமில்ட்டன், ஜேம்ஸ் மன்றோ. இந்த நன்றியின் அடையாளமாக, 1914 இல், 100 டொலர் தாள்களிலும் பெஞ்சமின் ஃபிராங்க்ளினின் உருவப்படத்தை வெளியிட்டார்கள். 102 ஆண்டுகளா கத் தொடர்ந்து, இன்றைய 100 டொலர் தாள்களிலும் பெஞ்சமின் உலா வருகிறார்.

பெஞ்சமின் அச்சக, பதிப்புத் தொழில் களில் மாபெரும் வெற்றிகள் கண்ட மாபெரும் வர்த்தகர். ஆனால், இதையும் தாண்டி, ஒரு கண்டுபிடிப் பாளர், எழுத்தாளர், அயல் நாட்டுத் தூதர், அரசியல் சட்டத்தை உரு வாக்கிய சிற்பி, அமெரிக்காவின் தேசத் தந்தையர் எழுவரில் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

கட்டட நிர்மாண அலுவலகத்துக்கு வேலையாள்கள் தேவை.(பெண்கள்) தகைமை கணினி.ஆங்கில அறிவு.

077 3551631

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

077 847 3230

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி **ம.விஜயகுமார்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**காசிப்பிள்ளை லோகேஸ்வரன்**
அவர்கள் காலமானதையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்** (ஜே.3210) (13.18)
**யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை**

**வேலை வாய்ப்பு**

எமது DMI International நிறுவனமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது இதற்கான

*அலுவலர்கள் * மேற்பார்வையாளர்,
* உதவி முகாமையாளர்கள், * முகாமையாளர். எனும் பதவிவெற்றிடம் உள்ளது. தகைமை- 10 ஆம் ஆண்டு, O/L, A/L, படித்தவர்கள். உணவு, தங்குமிட வசதியுண்டு

தொடர்புகளுக்கு: 077 298 6763 077 077 1377

**துயர்பகிர்கின்றோம்**



எமது கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியை
**திருமதி தர்சினி சசிகரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**சிவகுரு அருளானந்தம் (அருள்)**
(வியாபாரி மூலை, பருத்தித்துறை)
அவர்கள் 23.07.2016 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வும் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர் சங்கம், யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.**

**அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு**



கடந்த 27.06.2016 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்
**அமரர்**
**அரியகுட்டி கனகசிங்கம்**

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.07.2016) திங்கட்கிழமை காலை 7.00 மணியள வில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந் நிகழ்விலும் நாளை (26.07.2016) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண் டீகரண நிகழ்விலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி வட கிழக்கு, புலோலி
076 803 4910
**குடும்பத்தினர்.**

# சிக்கன கடனுதவிச் சங்க அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கவேண்டும்

## ஆசிரியர்கள் கோரிக்கை

கல்விச்சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்கம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட வேண்டும். இதற்கென இதுவரை யாழ். மாவட்டத்துக்கென அலுவலகம் அமைக்கப்படாததால் சங்கத்தின் அதி உச்சப்பயனை யாழ். மாவட்ட ஊழியர்கள் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்று ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 85 ஆண்டுகளாக கல்விச் சேவை ஊழியர்களுக்கு கூட்டுறவு சிக்கன கடனுதவிச் சங்கம் ஆற்றி வரும் பணி அளப்பரியது. யாழ். மாவட்டம் தவிர்ந்த வேறு மாவட்டத்திலேயே சங்கத்தின் வடக்கு மாகாணத்துக்கான அலுவலகம் திறக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. யாழ் மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில் 7 ஆயிரத்து 487 ஆசிரியர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 684 ஆசிரியர்களும் மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 836 ஆசிரியர்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 573 ஆசிரியர்களும், வவுனியா மாவட்டத்தில் 2 ஆயிரத்து 347 ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இதனைவிட அந்தச் சங்கத்தின் உத்தியோகத்தர்களாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதிக அங்கத்துவத்தைப் பெற்றுள்ளனர். சங்கத்தினூடாக அதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் கிளைக்காரியாலயம் அமைக்கப்படவேண்டும். அத்துடன் வடக்கு மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வி அலுவலகம், ஆசிரியர் பயிற்சி கலாசாலைகள், பல்கலைக்கழகம், வெளிவாரி பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரி என்பனவும், யாழ். மாவட்டத்திலேயே அமைந்துள்ளன.

இதன்காரணமாக மேற்படி சங்கத்தின் கிளைக்காரியாலயம் யாழ். மாவட்டத்திலேயே அமைக்கப்பட வேண்டும் என ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-4)

# எந்த தடை போட்டாலும் பாத யாத்திரை நடக்கும்

## நாமல் எம்.பி சவால்

கொழும்பு, ஜூலை 25

எந்தத் தடைகள் வந்தாலும் நல்லாட்சி அரசை ஆட்சியிலிருந்து துரத்தும் நோக்கில் 28ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிய பாத யாத்திரை முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச.

மாத்தறையில் நேற்று மக்கள் சந்திப்பு நிகழ்வில் அவர் கலந்து கொண்டார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு கூட்டு எதிர்க் கட்சியின்போராட்டங்களைக்கண்டு அச்சமடைந்துள்ளது. அதனாலேயே ஊடகங்களை ஒடுக்குவதற்கும் எதிர்கட்சியினரை சிறையில் அடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதுதான் ஜனநாயகம். நல்லாட்சியில் நிலவும் ஜனநாயகமும் இதுதான். நல்லாட்சி என்று கூறிக் கொண்டு அடக்கு முறை ஊடாக ஊடகங்களை அச்சுறுத்துகின்றனர்.

எதிர்கட்சியினர் வீதிக்கு வந்தால் சிறையில் அடைப்போம் என்று கூறி சிலரை சிறையில் அடைக்கின்றனர். இதனைத்தான் பிரதமர் மறைமுகமாக கூறி வருகின்றார். நான் சிறைக்குச் சென்று திரும்பியுள்ளேன். மீண்டும் ஒரு முறை செல்வதற்கும் பிரச்சினை இல்லை. பிரதமர் தேர்தல் காலத்தில் காண்பித்த ஜனநாயகம் இன்று இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் இதுதான் நிலமை. ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சியிலும் இவ்வாறு தான் ஜனநாயகம் பறிக்கப்பட்டு இருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும் போது இதனைவிட வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது. ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் இணைந்து தேர்தலில் வாக்குறுதியளித்த மைத்திரி ஆட்சி இதுதானா என்று பிரதமரிடம் கேட்க விரும்புகின்றேன் - என்றார். (வ-5)

### அயலுறவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சராக இருந்த, ஹியூகோ ஸ்வயருக்குப் புதிய அரசில் இடமளிக்கப்படவில்லை.

ஹியூகோ ஸ்வயர், அயலுறவுத்துறை மற்றும் பொது நலவாய அலுவலக இணை அமைச்சராக இருந்த போது, இலங்கையின் மனித உரிமை விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்துபவராக இருந்து வந்தார்.

புதிய அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய அலுவலக இணை அமைச்சராக, நியமிக்கப்பட்டுள்ள அலோக் சர்மா, ஆசிய பசுபிக் பிராந்தியம் உலகின் மிக முக்கியமான பகுதி, பிரிட்டனின் பாதுகாப்பு மற்றும் செழிப்பில் இந்தப் பகுதி முக்கிய பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டார்.

இந்தப் பகுதியில் புதிய நண்பர்களுடன் இணைந்து நெருக்கமாகப் பணியாற்ற எண்ணியுள்ளதாகவும், வர்த்தக உறவுகள், முதலீட்டு வாய்ப்புகளை வலுப்படுத்துவது மற்றும் பிராந்தியத்தில் மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பவற்றில் கவனம் செலுத்தப் போவதாகவும் அலோக் சர்மா தெரிவித்தார். (வ-5)

**பணியாளர் தேவை**

கிளிநொச்சியில் உள்ள காட்வெயர் நிறுவனத்துக்கு காட்வெயர் பொருள்கள் விற்பதில் அனுபவமுள்ள பணியாளர் தேவை. மூன்று மொழிகளும் தெரிந்து இருத்தல் நன்று.
தொடர்பு: 077 8014 335,
077 439 2084

### கொக்காவில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புச் சிறுவர் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டான்.

யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர் வீட்டிற்குச் சென்ற குடும்பத்தினர், மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே விபத்து இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,101,ரி7)

**UNIVERSITY OF JAFFNA**
**FACULTY OF ARTS**
**AND**
**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**
**NOTICE**

Academic programmes for the first year students of Faculty of Arts and the academic programmes for the first year and fourth year students of Faculty of Management Studies & Commerce will commence on 25.07.2016.

Registrar

**காணவில்லை**



5/1, 3ஆம் ஒழுங்கை எ.வி.றோட் கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **பொன்னு இரத்தினம்** (வயது-86) நேற்று 24.07.2016 முதல் காணவில்லை. வெள்ளைநிற சறமும், றோஸ் கலர் சேட்டும் அணிந்திருந்தார். (காது கேட்பது குறைவு. பேசுவதற்கு சிரமம்)உள்ளவர். கண்டவர்கள் பின் வரும் தொடர்பு இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**கோகுலன் -077 1377506**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை செயலாற்றவேண்டும்

## பிரிட்டன் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 25

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு இன்னமும் அதிகம் செயற்படவேண்டியுள்ளது என பிரிட்டன் தெரிவித்தது.

பிரிட்டன் அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாய அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள, மனித உரிமைகள் முன்னுரிமை பற்றிய நாடுகளின் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான காலப் பகுதியை உள்ளடக்கி அறிக்கை வெளியிடப்பட்டது.

இலங்கை அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் வரவேற்புத் தெரிவித்துள்ளது. அதே வேளை, அண்மைய மாதங்களாக அதிகரித்துள்ள சிங்கலே போன்ற தேசியவாதப் பரப்புரைகள் குறித்தும் பிரிட்டன் கவலை எழுப்பியுள்ளது.

சித்திரவதைகள் தொடர்பான விவகாரத்தில், கடந்த ஏப்ரல் மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் ஜுவான் மென்டெசின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப் படுத்தவேண்டும் .

சித்திரவதைகள் உள்ளிட்ட தீவிரமான மனித உரிமை மீறல்களைக் குறைக்கும் நோக்கிலும், சட்டத்தின் ஆட்சி மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கவும், நிபுணத்துவம் வாய்ந்த பொறுப்புக்கூறும் பொலிஸ் துறையின் ஆற்றலை அபிவிருத்தி செய்யவும், இலங்கைக்கு உதவி வழங்க பிரிட்டன் தயாராக உள்ளது.

காணிகளை விடுவிக்கவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ள நிலையிலும், சில பகுதிகளில் பொது மக்களின் இயல்பு வாழ்வில் இருந்து படையினரை விலக்கும் அறிகுறிகள் தென்பட்டாலும், வடக்கு கிழக்கில் இன்னமும் சவால்கள் தொடர்கின்றன.

காணிகளை விடுவித்து வடக்கில் இருந்து படைகளைக் குறைப்பதை தீவிரப்படுத்துமாறு பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்துகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி பன்னாட்டுத் தரம்வாய்ந்த சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவேண்டும். நீண்டகாலப் போரில், முக்கிய பங்காற்றியுள்ள இராணுவம், மனித உரிமைகள் உள்ளிட்ட நல்லிணக்கச் செயற்பாடுகளிலும் கடப்பாடுகளைக் கொண்டிருக்கிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (வ-5)

# நாட்டின் நீதிக் கட்டமைப்பில் மக்களுக்கு நம்பிக்கையில்லை

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

நீதிமன்றம் மற்றும் சட்டம் தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கையில்லை. நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண வெளிநாடுகளின் உதவியைப் பெற சிலர் முயற்சித்து வருகின்றனர்.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பரப்புரைச் செயலருமான விஜித ஹேரத்.

கொழும்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் கலந்து கொண்டு தெரிவித்ததாவது:

சிலர் தமது சுயலாபத்துக்காக வெளிநாடுகளின் தலையீட்டை எதிர்ப்பார்க்கின்றனர். இலங்கையின் அரசமைப்பு மற்றும் ஜனநாயகத்துக்கு அவமரியாதையாகும்.கடந்த காலங்களில் நீதிமன்றம் மற்றும் சட்டத்தை செயற்படுத்துவதில் நடந்த விடயங்கள் குறித்து ஆராயும் போது, அதன் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகின்றது. உடைந்து போன இந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே அரசின் பொறுப்பு.

நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வெளிநாடுகளின் உதவிகளை எதிர்ப்பார்ப்பதன் மூலம், அந்தப் பிரச்சினைகள் மேலும் விரிவடைந்த நிலமைக்குச் செல்வதை தவிர்க்க முடியாது - என்றார் விஜித ஹேரத். (வ-5)

# ஜே.வி.பியால் ஒருபோதுமே ஆட்சி அமைக்க முடியாது

## பந்துல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

மக்கள் விடுதலை முன்னணியினால் ஒருபோதும் அரசை அமைக்க முடியாது என மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாணந்துறை வாத்துவ தல்பிட்டிய விடுதியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில்,

மக்கள் விடுதலை முன்னணி ஒருபோதும் வீட்டுக்கு வந்து அடையாள அட்டைகளை பறித்துச் செல்லவில்லை. களுத்துறை மாவட்டத்தில் உள்ளவர்கள் இதனை நன்கு அறிவார்கள். பொதுச் சொத்துக்களை சேதமாக்கவில்லை. நீதிமன்றத்திற்கு தீ வைத்ததில்லை. ஒருபோதும் மின்மாற்றியை வெடிக்கச் செய்ததில்லை. கால்வாய் எதனையும் உடைத்ததில்லை.

எப்போதும் நிராயுத பாணிகளான அப்பாவி மக்களைக் கொன்று முழங்காலுக்கு கீழ் புதையுங்கள் என்று கட்டளை யிடவில்லை என பந்துல குணவர்த்தன கடுமையாகச் சாடினார்.

1988 -1989ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்செயல்களின் போது, மக்கள் விடுதலை முன்னணியினர் மேற்கொண்ட வன்முறைகள் தொடர்பாகவே பந்துல குணவர்தன இவ்வாறு ஏளனமாகப் பேசினார். (வ-5)


## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் இராஜேந்திரா

(அகில இலங்கை சமாதான நீதிவான்)



கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுது என்று அன்பாக அழைக்கப்படும் இராசரத்தினம் இராஜேந்திரா கடந்த (22.07.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம்-பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெகதாம்பிகையின் அன்புக் கணவரும் சிவப்பிரியாவின் பாசமிகு தந்தையும் ஸிஸிந்தனின் அன்பு மாமனும் அர்சயாவின் அன்புப் பேரனும் ஜெயந்திரா.மகேந்திரா. சந்திரா. சந்திரிக்கா, சுகிர்தா, சுரேந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் வாழ்விடமான 213. கனகரத்தினம் வீதி. அரியாலையில் 22.07. 2016 அன்று நடைபெற்று பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

243, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 2223411

### திருமதி சிவபாக்கியம் மயில்வாகனம்



அல்வாய் கிழக்கு. பெரியார் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் மயில்வாகனம் 23.07.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் நவரத்தினம். கனகரத்தினம். சாந்தாதேவி. விஜயரத்தினம்(ஜேர்மன்). சோதிரத்தினம்(லண்டன்). கோபாலரத்தினம்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவாஈஸ்வரி, ராஜசுலோசனா. தனபாலன். வசந்தி (ஜேர்மனி). ராதா(லண்டன்). பராசக்தி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2016) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர் மடம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார்பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 226 2870

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுச்சாமி ஐயாத்துரை

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஈவினை மத்தி புன்னாலைக் கட்டுவனை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி ஐயாத்துரை நேற்று (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி-ஆச்சிமுத்து தம்பதிளின் அன்பு மகனும் அன்னமுத்துவின் அன்புச் சகோதரரும் செல்வரட்ணத்தின் மைத்துனரும் சிவானந்தன், சித்திரா (சுவீடன்) ஆகியோரின் மாமனாரும் வனஜா, ரவீந்திரன்(சுவீடன்) ஆகியோரின் சிறிய தந்தையும் பிரமீனா (சுவீடன்), யதுமதி, ரவிவர்மன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.07.2016) திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஈவினை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை மத்தி,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்:
ஆ.செல்வரத்தினம்
ரவீந்திரன் சித்திரா(சுவீடன்)

### நீக்கிலாப்பிள்ளை யோசேப்

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளையோசேப் நேற்று (24.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் எலிசபேத்தின் அன்புக் கணவரும் கீதபொன்கலன், பார்பரா, பெர்ணதேத் ஆகியோரின் அன்புத் தந்தையும் வடிவாம்பிகை, தேவசகாயம் , றெக்ஸ் ஆகியோரின் மாமனாரும் கெல்மெற்,சுவிற்றி, கென்றி, ஜெறோனா புஸ்பராஜா, கீதா, கெலன், சுகுமார், செல்வி,றொசான்,றெக்சி,றோய், நிஷி, யோன் பிரகாஸ், ஆன் ஜனனி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (25.07.2016) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
021 221 3003

### தில்லையம்பலம் சுதந்திரபாலன்

(சுதா)

தோற்றம்
1947
08
19



இறப்பு
2016
07
23

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சுதந்திரபாலன் கடந்த (23.07.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்கள்ான தில்லையம்பலம் - ஜெயமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், வேதநாயகியின் அன்புக் கணவரும், கௌரிசங்கர் (நியூசிலாந்து), கௌசிகன் (ஆஸ்திரேலியா), கௌரிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திவிஷா, வினிந்தித்தா ஆகியோரின் நேசமிகு மாமனும், காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும் தர்மலிங்கம், ஸ்ரீமுருகானந்தன், ஸ்ரீரங்கநாயகி, தயாளினி, சத்தியஸ்ரீ ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்திதேவி, சிதம்பரேஸ்வரி, சுவர்ணலதா, சுந்தரலிங்கம், சந்திரலிங்கம், சிவம், அன்னலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், செல்வராஜேஸ், சொர்ணலட்சுமி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், சன்விகா, பிரணீவ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.07.2016 புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஆடிய பாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 2314


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூட் இரட்டைச் சதம் பாகிஸ்தான் திணறல்

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றுமுன்தின இரண்டாம் நாளில் 589-8 என்ற நிலையில் இங்கிலாந்து ஆட்டத்தை இடைநிறுத்தியதுடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் நாள் முடிவில் 57-4 என்றுள்ளது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து குக், ரூட் இருவரும் சதம் கடக்க முதல் நாள் முடிவில் 314-4 என்றிருந்தது. ரூட் 141 ஓட்டங்களுடனும், வோக்ஸ் 2 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். பந்துப்பரிமாற்றத்துக்கு நான்கு ஓட்டங்கள் என்ற வகையில் இணைப்பாட்டம் நகர்ந்தது. 58 ஓட்டங்களுடன் வோக்ஸை வீழ்த்தினார் யாசீர் ஷா. ஸ்டோக்ஸும் சிறப்பாகத் தாக்குப் பிடித்தார். மறுமுனையில் ரூட்டின் இரட்டைச்சதம் பதிவானது. பரிஸ்ரெளவ், ரூட் இணைந்து 106 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். பரிஸ்ரெளவின் அரைச்சதம், ரூட்டின் 250 பாகிஸ்தானுக்கு அடிமேல் அடியாக வந்து விழுந்தன. 58 ஓட்டங்களுடன் பரிஸ்ரெளவை வீழ்த்தினார் ரியாஸ். அடுத்த சில நிமிடங்களில் ரூட்டின் இன்னிங்ஸும் ரியாஸால் முடிவு கண்டது. 589-8 என்ற நிலையிலிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது இங்கி லாந்து.
பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக ரியாஸ் 3 இலக்குகளையும், ஆமிர், ரகட் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும், யாசீர்ஷா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.
பதிலுக்குக் களமிறங்கியது பாகிஸ்தான். ஆரம்ப வீரர்களாக ஹபீஸ், மசூட். வோக்ஸின் பந்துப் பரிமாற்றத்தில் பாகிஸ்தானின் இன்னிங்ஸில் பலமான பதற்றம் ஏற்பட்டது. ஹபீஸ் 18 ஓட்டங்களுடனும், அசார் அலி ஒரு ஓட்டத்துடனும், ரகட் அலி நான்கு ஓட்டங்களுடனும் வோக்ஸிடம் வீழ்ந்தனர். யுனிஸ்கானை வெளியேற்றினார் ஸ்டோக்ஸ். நாள் முடிவில் பாகிஸ்தான் 57-4 என்ற நிலையில் உள்ளது. (ம)





# இந்தியாவின் பிடியில் மேற்கிந்தியத் தீவுகள்

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் 243 ஓட்டங்களுடன் தீவுகளின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. தொடர்ந்தும் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத் தாடும் அந்த அணி நாள் முடிவில் 21-1 என்ற நிலையில் உள்ளது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 566-8 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. அதிகபட்சமாக கோக்லி 200 ஓட்டங்களையும், அஸ்வின் 113 ஓட்டங்களையும், தவான் 84 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மேற்கிந்தியத்தியத் தீவுகளின் சார்பாக பிஸ்கூ, பிரீத்வைட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், கபிரியேல் இரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் இரண்டாம் நாள் முடிவில் 31-1 என்றிருந்தது. கே.பிரீத்வைட் 11 ஓட்டங்களுடனும், பிஸ்கூ ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் களமிறங்கினர். 17 பந்துப் பரிமாற்றங்களுக்கும் அதிகமாக இருவரும் தாக்குப் பிடித்தனர். பிஸ்கூவை வெளியேற்றினார் மிர்ஸா. ஒரு முனையில் கே.பிரீத்வைட் நிலைத்து நின்றாலும் மறுமுனை பலவீனமானதாகவே உணரப்பட்டது. பிராவோ, சாமுவேல்ஸ், பிளக்வூட் மூவரும் முறையே 11, 1, ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். மூவரையும் வெளியேற்றியவர்மொகமட்சமி. அரைச் சதம் கடந்த பிரீத்வைட்டை வெளியேற்றினார் யாதேவ்.
பின்வரிசை வீரர்களிடையே யாதேவ்வின் வேகம் எடுபட்டது. டவ்ரிச் நிலைத்து நின்றாலும் வேஸ், கோல்டர், சி.பிரீத்வைட் மூவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 243 ஓட்டங்களில் சுருண்டது மேற்கிந்தியத்தீவுகள்.
பந்துவீச்சில் இந்தியாவின் சார்பாக சமி, யாதேவ் இருவரும் தலா நான்கு இலக்குகளையும், மிஸ்ரா இரு இலக்குகளையும் கைப்பற்றினர்.
தொடர்ந்து களத்தடுப்புச் செய்யத் தகுதியற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடியது மேற்கிந்தியத் தீவுகள். முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே கே.பிரீத்வைட்டை வீழ்த்தினார் இசாந் சர்மா. நாள் முடிவில் தீவுகள் 21-1 என்றுள்ளது. சந்ரிகா 9 ஓட்டங்களுடனும், பிராவோ 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# கேத்லினுக்கு போல்ட் பதிலடி

உசைன் போல்டுக்கு ஏற்பட்ட காயம் குறித்து அமெரிக்க வீரரான ஜஸ்ரின் கேத்லின் சில விமர்சனங்களை முன் வைத்த நிலையில், குறித்த விமர்சனங்களுக்கு போல்ட் தனது கருத்தைத் தெரிவித்தார்.
இந்த மாத ஆரம்பத்தில் ஜமைக்காவில் நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிச் சுற்றில் காயம் காரணமாக போல்ட் பாதியில் வெளியேறினார். அடுத்த சில தினங்களில் வெளியான ஜமைக்கா ஒலிம்பிக் குழுவில் போல்ட்டும் இடம் பிடித்தார்.
இதனையடுத்து அமெரிக்க குறுந்தூர ஓட்டப்பந்தய வீரரான ஜஸ்ரின் கேத்லின் "தற்போது ஜமைக்காவில் என்ன நிகழ்கிறது? உசைன் போல்ட் திடீரென காயமடைகிறார். பின்னர் ஒலிம்பிக் குழாமில் இடம்பெறுகிறார். அவருடைய நாடு என்ன செய்கிறது? எங்களுடைய நாட்டில் இப்படிச் செய்ய முடியாது" எனத் தெரிவித்தார்.
கேத்லினின் கருத்துக்கு போல்ட், "இரண்டு முறை ஊக்கமருந்து விவகாரத்தில் சிக்கி தடை பெற்ற கேத்லின் என்னைப் பற்றி விமர்சனம் செய்வது சிரிப்பாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை இதை ஒரு நகைச் சுவையாகவே உணர்கிறேன்.
நான் போட்டியில் இருந்து பின் வாங்கியதாக அவர்கள் நினைப்பதை அவமரியாதையாக எண்ணுகிறேன். நான்தான் சிறந்த வீரர் என்பதை வருடத்திற்கு வருடம் நிரூபித்துக் கொண்டு வருகிறேன்.
ரியோ ஒலிம்பிக்கில் என்னை எதிர் கொள்ளப் பயமாக இருந்தால் வெளிப்படையாகத் தெரிவிக்கலாம்" எனத் தெரிவித்தார். (ம)



# போர்த்துக்கல் விமான நிலையத்துக்கு ரொனால்டோவின் பெயர்



போர்த்துக்கல் நாட்டின் பஞ்சால்நகரிலுள்ள விமான நிலையத்துக்கு, அந்த நாட்டில் தோன்றிய ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரராகக் கருதப்படும் கிறிஸ்ரியானோ ரொனால்டோவின் பெயர் சூட்டப்படவுள்ளது.
நடப்பு வருடத்தில் நடைபெற்ற யூரோ கிண்ணத் தொடரில் போர்த்துக்கல் அணி வாகை சூடியது. போர்த்துக்கல்லின் கால்பந்தாட்ட வரலாற்றில் அந்த அணி கைப்பற்றிய முதலாவது பன்னாட்டு மதிப்புள்ள கிண்ணம் இதுவேயாகும். இதனால் அணியின் தலைவரும், போர்த்துக்கல் நாட்டில் தோன்றிய ஆகச் சிறந்த கால்பந்தாட்ட வீரருமாகக் கருதப்படும் ரொனால்டோவின் பெயரை பஞ்சால் நகரிலுள்ள பெரியதொரு விமான நிலையத்துக்குச் சூட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கல்லில், ரொனால்டோவின் உயரத்துக்கு சமனான வெண்கலச் சிலை கடந்த வருடம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மட்டுமல்லாமல் போர்த்துக்கல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்த நட்சத்திரக் கூட்டத்துக்கும் ரொனால்டோவின் பெயரே சூட்டப்பட்டுள்ளது. போர்த்துக்கல் பல்கலைக் கழகங்களிலும் ரொனால்டோவின் வாழ்க்கை பாடமாகவும் கற்பிக்கப்படுகிறது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் இந்து இளைஞர் மத்தியின் தொடரில் சம்பியன்



யாழ்ப்பாணம், ஜூலை 25
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியனானது.
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில நேற்றுமுன் தினம் இரவு நடைபெற்ற இந்த இறுதி யாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளை ஞர் அணியை எதிர்த்து மன்னார் சென். மேரிஸ் அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத் தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:19, 25:17, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப் பற்றிய ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. சிறந்த வீரனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியின் எஸ்.ஜெனகன் தெரிவானார். (ம-23-422-108)

## அரியாலை திருமகளின் கரப்பந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 25
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகிறது.
குறித்த சனசமூக நிலைய மைதானத்தில் நாளை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமாரன் அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மல்லாகம் நியூவொரியஸ் அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா அணி மோதவுள்ளது.
(ம-23)

## வீனஸ் வி.க. முன்னேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
குரும்பைகட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நெல்லை பிளாசா அணியைத் தோற்கடித்து, சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற்றது பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகம்.
வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட அணி களுக் கிடையில் நடத்தப்படும் இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி நெல்லை பிளாசா அணியும் வீனஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று, முத லில் துடுப்பெடுத்தாடிய வீனஸ் அணி நிர்ணயிக் கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்கு களை இழந்து, 104 ஓட்டங்களைப் பெற்றது. அதிக பட்சமாக நிறோ 48 ஓட்டங்களைப் பெற்றார். 105 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லை பிளாசா அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்த போதிலும், 8 இலக்குகளை இழந்து 74 ஓட்டங் களை மட்டுமே பெற்றது. இதையடுத்து 30 ஓட்டங் களால் வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது வீனஸ் விளையாட்டுக் கழகம். (ம-108)

## கலைமதி, குறிஞ்சிக்குமரன் அணிகள் வெற்றி பெற்றன

மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி, குறிஞ்சிக்குமரன் அணிகள் வெற்றிபெற்றன.
இருதயராஜா வி.கழக மைதானத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற ஆட் டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து புங்குடுதீவு நண்பர்கள் அணி மோதியது. இதில் நவிண்டில் கலைமதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணி மோதி யது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை சென்ற இந்த ஆட்டத்தில் குறிஞ்சிக்குமரன் அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## ஒலிம்பிக் தீபத்தை பறிக்க முயற்சி பிரேஸிலில் ஒருவர் அதிரடிக் கைது

பிரேஸில் நாட்டில் வலம்வரும் ஒலிம்பிக் தீபத்தை அணைக்க முயற்சித்த ஒருவரை, தீபத்தை சுற்றி பாதுகாப்புக்காக வலம் வந்த பொலிஸார் அதிரடியாகக் கைது செய்தனர்.
பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. உலகைச் சுற்றிவந்த ஒலிம்பிக் தீபம், தற்போது தொடரை நடத்தும் நாடான பிரேஸிலின் நகர்கள் வழியாக வலம் வருகிறது. பாவ்லோ நகரினூடாக நேற்றுமுன்தினம் தீபம் வந்தபொழுது, பார்வையாளர்கள் வரிசையில் நின்ற நபர் ஒருவர், திடீரென்று உள் நுழைந்து வந்து அந்த தீபத்தை பறித்து அணைக்க முயன்றுள்ளார். பாதுகாப்புக்கு வந்த பொலிஸார் அவரை உடனடியாகக் கைதுசெய்தனர். பிரேஸிலில் வைத்து, ஒலிம் பிக் தீபத்தை அணைக்க முயற்சித்த நான்கா வது சம்பவமாக இது பதிவாகியது. இதற்கு முன்னர் இரு தடவைகள் தீபத்தின் மீது தண் ணீர் உற்றி அணைக்க முயற்சிக்கப்பட்டது. ஒரு தடவை தீபத்தை தட்டிவிட முயற்சிக்கப் பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## சமி 50



இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளராகத் திக ழும் மொகமட் சமி, டெஸ்ட் ஆட் டங்களில் 50 இலக்குகள் என்ற மைல் கல்லை எட்டினார்.
இந்தியா, மேற்கிந்தியத் தீவு களுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலில் துடுப் பெடுத்தாடிய இந்தியா 566-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸை ஆரம் பித்த தீவுகள் 243 ஓட்டங்களில் சுருண்டது. பந்து வீச்சில் இந் திய அணியின் சார்பாக சமி நான்கு இலக்குகளைக் கைப் பற்றினார். தனது மூன்றாவது இலக்காக அவர் சாமுவேல்ஸை வீழ்த்தியபோது, டெஸ்ட்டில் 50 இலக்குகள் என்ற மைல் கல் லைக் கடந்தார். (ம)

## மடு-மாந்தை லீக்கை பந்தாடியது பருத்தித்துறை லீக்

கரணவாய் ஜூலை 25
வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கால்பந்தாட்ட லீக்குகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் மடு-மாந்தை லீக்கை 10:0 என்ற கோல் கணக்கில் பந்தாடியது பருத்தித்துறை லீக்.
நெற்கொழு கழுகுகளின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் மிகப் பெரும் ஆதிக்கம் செலுத்தியது. மடு-மாந்தையின் திட்டங்கள் ஏதும் கைகூடவில்லை. முதல் பாதியின் முடிவில் 6:0 என்று முன்னிலை வகித்தது பருத்தித் துறை லீக். கிட்டத்தட்ட உறுதியான வெற்றியுடன் பருத்தித்துறை லீக், படுதோல்வியிலிருந்து தப்பிக்கும் முனைப்பில் மடுமாந்தை லீக். ஆரம்பமானது இரண்டாம் பாதி. மேலும் நான்கு கோல்கள் பருத் தித்துறையின் சார்பாக பதிவாக முடிவில் அந்த அணி 10:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. மூன்று கோல்களைப் பதிவுசெய்த காண்டீபன் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம-23-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவரின் துடுப்பாட்டம்; கொக்குவில் இந்து சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் அணி சம்பியனானது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மயூரன் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணியின் சார்பில் சந்தியன், சாம்பவன், யனுதாஸ் மூவரும் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.

80 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணி 9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக உத்தமக் குமரன் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணியின் சார்பில் திலீபன் இரு இலக்குகளை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் அணியின் உத்தமக் குமரன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறிகரன், சிறந்த பந்து வீச்சாளராக அதே அணியின் திலீபன் இருவரும் தெரிவாகினர். (ம-23)



## ரியோ ஒலிம்பிக் தொடரில் களமிறங்கும் தாய், மகன்

ரியோ ஒலிம்பிக் தொடரில் துப்பாக்கி சுடுதல் போட்டியில் தாயும், மகனும் களமிறங்கவுள்ள சம்பவம் இம்முறை நடைபெறவுள்ளது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்த மாதம் 5 ஆம் திகதி ரியோ ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் பங்கேற்கும் ஜோர்ஜியா நாட்டு குழாமிலேயே குறித்த தாயும் மகனும் இடம்பிடித்துள்ளனர். 10 மீற்றர் தூரமுடைய துப்பாக்கி சுடுதல் பிரிவிலேயே அவர்கள் இருவரும் இடம்பிடித்துள்ளனர். தாயின் பெயர் நினோ சலுக்வாட்சே, மகனின் பெயர் டிசோட்னே.

எனது மகனுடன் இணைந்து ஒலிம்பிக் தொடரில் பங்கேற்க இருப்பது எனக்கு மகிழ்ச்சியும், பெருமையும் அளிக்கிறது. நாங்கள் எங்களுடைய சிறந்த திறனை வெளிப்படுத்துவோம். எனது மகனின் தீவிர ரசிகை நான் என சலுக்வாட்சே தெரிவித்தார். (ம)



## யாசீர் மோசமான சாதனை

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், பாகிஸ்தான் சுழல் வீரரான யாசீர் மோசமான சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 589-8 என்ற நிலையில் இருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. இங்கிலாந்து குவித்த ஓட்டங்களில் 213 ஓட்டங்கள் யாசீரின் பந்துப்பரிமாற்றத்தில் பெறப்பட்டவை. இங்கிலாந்து மண்ணில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர் விட்டுக் கொடுத்த ஆகக்கூடிய ஓட்டங்களாக இதுவே பதிவாகியுள்ளது. தவிர ஆட்டம் நடைபெற்றுவரும் மன்செஸ்டர் மைதானத்தில் ஒரு பந்துவீச்சாளர் விட்டுக்கொடுத்த ஆகக்கூடிய ஓட்டங்களாகவும் யாசீரின் 213 ஓட்டங்களே பதிவாகியது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலுமாகச் சேர்த்து யாசீர் 10 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## வாரத்துக்கு 5 கோடி போக்பாவின் ஒப்பந்தம்

பிரான்ஸ் நாட்டின் நட்சத்திர வீரரான போக்பாவை இலங்கை மதிப்பில் வாரத்துக்கு 5 கோடி கொடுத்து ஒப்பந்தம் செய்ய மன்செஸ்டர் யுனைற்ரெட் தயாராக உள்ளதாக அந்தக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸின் பரிஸ் நகரில் கடந்த மாதம் யூரோ கிண்ணத் தொடர் நடைபெற்றது. பிரான்ஸ் இறுதியாட்டம் வரை முன்னேறி போர்த்துக்கல்லிடம் கிண்ணத்தைத் தவறவிட்டது. பிரான்ஸ் இறுதிவரை செல்வதற்குப் பிரதான காரணமாக இருவர் குறிப்பிடப்பட்டனர். ஒருவர் கிரீஸ்மன், மற்றொருவர் போக்பா. இவர்களில் போக்பாவை ஒப்பந்தம் செய்ய மன்செஸ்டர் யுனைற்ரெட் விரும்புகிறது.



போக்பா தற்போது இத்தாலியின் முன்னணி கழகமான ஜுவான்டஸ்க்காக விளையாடி வருகிறார். எனவே அவரை விடுவிக்க வேண்டுமாயின் ஜுவான்டஸ் 100 மில்லியன் பவுண்டுகளைக் கேட்டது. இதற்கு யுனைற்ரெட்டும் சம்மதித்து விட்டதாம். மட்டுமல்லாமல் வாரத்துக்கு 5 கோடிகள் வரை (இலங்கை மதிப்பில்) போக் பாவுக்கு சம்பளம் வழங்கவும் தயாராக உள்ளதாம். (ம)

IELTS
திருமணமாகி UK செல்வோரிற்கு
Life Skills[A1,B1]
For Student Visa/skilled Migrants
ACADEMIC/ GENERAL
அடிப்படை,உரையாட
BASIC/SPOKEN ENG
BC LL 077 7066000 | 077 1327818
021 3003839 | 44, பலாலிவீதி, யாழ்.
Trainer:- Mr.Ranjith Thevarajan

## இலங்கை- ஆஸ்திரேலியா ஆட்டம் நாளை ஆரம்பம்

இலங்கை- ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள், இரண்டு ரி-20 ஆட்டங்களைக் கொண்ட தொடர்கள் நாளை ஆரம்பமாகின்றன.

முதலாவதாக டெஸ்ட் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதன்படி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நாளை, முதல் டெஸ்ட் ஆரம்பமாகிறது. இரண்டாவது டெஸ்ட் ஓகஸ்ட் 4ஆம் திகதி காலி சர்வதேச மைதானத்திலும், மூன்றாவது டெஸ்ட் ஓகஸ்ட் 13ஆம் திகதி கொழும்பி லும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடரின் ஐந்து ஆட்டங்களும் முறையே ஓகஸ்ட் 21, ஓகஸ்ட் 24, ஓகஸ்ட் 28, ஓகஸ்ட் 31, செப்ரெம்பர் 4ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ரி-20 தொடரின் இரு ஆட்டங்களும் முறையே செப்ரெம்பர் 6ஆம், செப்ரெம் பர் 9ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம)

LISTENING READING WRITING SPOKEN
IELTS
ஆசிரியர்
வாரநாள் பயிற்சிகள் ஆரம்பம் : 01.08.2016
SAMSON
272, ஆஸ்பத்திரி வீதி
யாழ்நகர்.

## இந்திய மல்யுத்த வீரர் பான்சமின் ஊக்கமருந்து பயன்பாடு அம்பலம்

இந்திய மல்யுத்த வீரரான நர்சிங் பான்சம் யாதவ்வின் இரத்த மாதிரியில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து இருந்தமை கண்டறியப்பட்டது.

அமெரிக்காவின் லொஸ்வேகாஸ் நகரில் கடந்த வருடம் நடைபெற்ற உலக மல்யுத்த சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான 74 கிலோ எடைப் பிரிவில் இந்திய வீரர் நர்சிங் பான்சம்யாதவ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இதன் அடிப்படையில், அவர் இன்னும் சில நாள்களில் ரியோ டி ஜெனிரோ நகரில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக் தொடரில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட அவரது இரத்த மாதிரியின் முதற்கட்டப் பரிசோதனையில் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து இருந்தமை கண்டறியப்பட்டது. இரண்டாம் கட்டப் பரிசோதனையிலும் ஊக்கமருந்து இருந்தமை உறுதியானால் ரியோ ஒலிம்பிக் தொடரில் அவருக்கு உடனடியாகத் தடை விதிக்கப்படும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.